# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022-2023

## மானியக் கோரிக்கை எண். 44


**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

## மானியக் கோரிக்கை எண்.44

**தா.மோ. அன்பரசன்**
**குறு, சிறு மற்றும் நடுத்தரத்**
**தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2022

# உள்ளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 11 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO) | 90 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) | 124 |
| 5. | தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்(EDII–TN) | 131 |
| 6. | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (M–TIPB) | 160 |
| 7. | தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) | 186 |

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

### 1. முகவுரை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSMEs) நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான உந்து சக்தியாகும். அவை பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதுடன், வேலைவாய்ப்பை உருவாக்குவதில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக உள்ளன. இந்நிறுவனங்கள் ஊரகப் பகுதிகள் உட்பட, சமச்சீர் மண்டல வளர்ச்சியை சாத்தியமாக்குவதில் முக்கிய பங்களிப்புகளை அளிக்கின்றன. எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மண்டல ஏற்றத்தாழ்வு மற்றும் ஊரகப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்வதைக் குறைப்பதன் மூலம் செல்வத்தின் சமமான விநியோகத்தை மறைமுகமாக ஊக்குவிக்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்கள் பரந்த பன்முகத்தன்மையின் அடிப்படையிலும், மாவட்டங்கள் மற்றும் பிரிவுகள் ரீதியான அளவீட்டிலும் கணிசமான மாறுபாடுகளுடன் உள்ளதால், அவற்றிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் ஆதரவளிப்பது அவசியமாகிறது.

முதலீடுகள் மற்றும் விற்றுமுதல் (ஏற்றுமதியிலிருந்து வரும் வருவாய் தவிர்த்து) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அளவுகோல்களை இணைத்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வரையறையை ஒன்றிய அரசு ஜூலை 1, 2020 முதல் திருத்தியமைத்தது. திருத்தப்பட்ட வரையறை பின்வருமாறு:

| **நிறுவனங்களின் வகைப்பாடு** | **இயந்திர மற்றும் தளவாடங்களின் முதலீடு மிகாமல்** | **ஆண்டு விற்றுமுதல் மிகாமல் (ஏற்றுமதி விற்றுமுதல் சேர்க்காமல்)** |
|---|---|---|
| குறு நிறுவனங்கள் | ரூ.1 கோடி | ரூ.5 கோடி |
| சிறு நிறுவனங்கள் | ரூ.10 கோடி | ரூ.50 கோடி |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.50 கோடி | ரூ.250 கோடி |

மொத்த மற்றும் சில்லறை வணிகர்களும் முன்னுரிமைத் துறைக் கடன் பெறும் நோக்கத்திற்காக மட்டும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வரையறைக்குள் 2 ஜூலை 2021 முதல் சேர்க்கப்பட்டனர்.

## 1.1 தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

தமிழ்நாடு பழங்காலத்திலிருந்தே கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் கடல்வழி வணிகம் ஆகியவற்றில் ஈடுப்பட்டு வந்துள்ள காரணத்தினால் நெடுங்காலமாகவே ஒரு துடிப்பான தொழில்துறை மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது.

73ஆவது தேசிய மாதிரி கணக்கெடுப்பு 2015–16இன் படி, தமிழ்நாட்டில் 49.48 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (நாட்டிலுள்ள

மொத்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில் 7.8 விழுக்காடு). மாநிலத்தில் உள்ள இந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 99 விழுக்காடுக்கும் அதிகமானவை குறு நிறுவனங்கள், 0.42 விழுக்காடு சிறு நிறுவனங்கள் மற்றும் 0.003 விழுக்காடு மட்டுமே நடுத்தர நிறுவனங்களாகும். இது தவிர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் 51.25 விழுக்காடுக்கும் அதிகமானவை ஊரகப்பகுதிகளில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு 6,000 க்கும் மேற்பட்ட வெவ்வேறு விதமான பொருட்களை உற்பத்தி செய்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

தோல், பொறியியல் பொருட்கள், வாகன உதிரிபாகங்கள், வார்ப்புகள், பம்புகள் மற்றும் ஆயத்த ஆடைகள் போன்ற முக்கிய உற்பத்தித் துறைகளில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இப்போது ஃபின்–டெக் போன்ற புதிய வளர்ந்து வரும் துறைக்கு மாறிவரும் சூழல் உள்ளது. சேவைத் துறையும் மாநிலத்தில் உத்வேகம் பெற்று வருகிறது.

## 1.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கட்டமைப்பு

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் உள்ள துறைகள் மற்றும் அமைப்புகளின் முக்கிய பணிகள் பின்வருமாறு:

### (1) தொழில் வணிக ஆணையரகம்

அ. கொள்கை உருவாக்க வசதியாக்கல் மற்றும் கொள்கை நோக்கங்களை மேம்படுத்துவதற்கான ஊக்கத் தொகைகளை மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் வழங்குதல்

ஆ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மாநில உத்தியை வெளிப்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல்

இ. வட்டார அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள் மற்றும் மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு கூட்டங்கள் மூலம் நிதி தேவைகள் உட்பட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் குறிப்பிட்ட தேவைகளை எளிதாக்குதல்

ஈ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம், (MSMED Act) 2006இன் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பணைப்பட்டுவாடா தாமதமேற்படும் நேர்வுகளில் பணம் மீளப்பெறுவதை எளிதாக்குதல்

உ. தமிழ்நாடு வணிக வசதிச் சட்டம், 2018இன் விதிகளை நடைமுறைப்படுத்துதல், மற்றும் ஒற்றைச் சாளர இணையதளத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது அனுமதி பெறுவதை / தீர்வு காண்பதை எளிதாக்குதல்

ஊ. பல்வேறு சட்டங்களின் கீழ் மின் உபகரணங்கள், சிமெண்ட் மற்றும் எஃகு ஆகியவற்றின் தரத்தை நிர்வகித்தல்

எ. தொழில் கூட்டுறவு நிறுவனங்களின் மீது மேற்பார்வை

ஏ. மாநில அளவில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 38 மாவட்ட தொழில் மையங்களின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களுடன் ஈடுபாடு ஏற்படுத்துதல்

(2) **தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (TANSIDCO)**

அ. தொழிற்பேட்டைகள் நிறுவுதல், பராமரித்தல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான தொழில் மனைகள் / கூடங்கள் வழங்குதல்

ஆ. தொழில் குழுமங்கள் மற்றும் பொது வசதி மையங்களை நிறுவி ஊக்குவித்தல்

(3) **தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI)**

அ. தமிழ்நாடு அரசுத் துறை மற்றும் நிறுவனங்களுக்கு மரம் மற்றும் எஃகு அறகலன்கள் தயாரித்து வழங்குதல்

ஆ. தனியார் நிறுவனங்களுக்கு நல்ல தரமான அறகலன்கள் மலிவு விலையில் வழங்குதல்

## (4) தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் – தமிழ்நாடு (EDII – TN)

அ. மாநிலம் முழுவதும் தொழில் முனைவோர் கல்வி மற்றும் சுயதொழிலை ஊக்குவித்தல்

ஆ. கல்லூரிகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கிடையே புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல்

## (5) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (M–TIPB)

அ. அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் ஒற்றை முகமையாக செயல்படுதல்

ஆ. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வர்த்தகத்தை மேம்படுத்துதல்

இ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன முதலீடுகளை மாநிலத்தில் பெற வசதியாக்கல்

ஈ. மாநிலத்தின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு வசதியாக்கல்

உ. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சிந்தனைக் களஞ்சியமாகச் செயல்படுதல்

**(6) தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM)**

அ. மாநிலத்தில் உள்ள புத்தொழில்களுக்கு உகந்த சூழலை உருவாக்குதல்

ஆ. புத்தொழில்களை வழிகாட்டிகளுடன் இணைத்தல் மற்றும் புத்தொழில்களுக்கும், தொழில் வளர்காப்பகங்களுக்கும் நிதி உதவி அளித்தல்

# 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் அமைப்புகள் செயல்படுகின்றன.

அ. மாவட்டத் தொழில் மையங்கள்

ஆ. தொழில் கூட்டுறவு நிறுவனங்கள்:

1. தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் கூட்டமைப்பு லிமிடெட் (INDCOSERVE)
2. சேலம் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட்(SAGOSERVE)

3. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (TAICO BANK)
4. பிற தொழிற் கூட்டுறவு சங்கங்கள்.

இ. பரிசோதனைக் கூடங்கள் (மின்னியல் மற்றும் இரசாயனம்)

ஈ. தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்கள்

## 2.1 மாவட்டத் தொழில் மையங்கள்

தொழில் வணிக ஆணையரகத்தின் மாவட்ட அளவிலான அமைப்பாக, 38 மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தொழில் மையங்கள் (DICs) தொழில்முனைவோருக்கு சாத்தியமான திட்டங்களைக் கண்டறிதல், திட்ட அறிக்கைகள் தயாரித்தல், பல்வேறு அனுமதிகள் மற்றும் உரிமங்களைப் பெறுதல், அரசின் திட்டங்கள் மூலம் அவர்களின் புதிய தொழில்களுக்கு நிதியுதவி வழங்குதல் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகைகளை அனுமதித்தல் போன்றவற்றில் துணைபுரிகின்றன.

## 2.2 உத்யம் பதிவு

இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான உத்யம் பதிவு சான்றிதழ், ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தினால் வழங்கப்படுகிறது. இப்பதிவு தன்னார்வத்துடன் கூடிய, சுய சான்றிதழை அடிப்படையாகக் கொண்ட, காகிதமற்ற முழுவதும் இணையதள பதிவாகும்.

உத்யம் பதிவு என்பது புதிய நிறுவனங்கள் மற்றும் செயல்பாட்டிலுள்ள நிறுவனங்களை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களாக வகைப்படுத்துதலுக்கான முதலீடு மற்றும் ஆண்டு விற்றுமுதல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டது. தொழில் முனைவோர் ஒன்றிய அரசின் உத்யம் பதிவு இணைய முகப்பில்

https://udyamregistration.gov.in பதிவினை தாக்கல் செய்ய இயலும்.

உத்யம் பதிவு அறிமுகப்படுத்தியதிலிருந்து 01.07.2020 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 7,76,016 தொழில் முனைவோர் உத்யம் பதிவு சான்றிதழ் பதிவு செய்து 69,05,226 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான உத்யம் பதிவு செய்த, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை கொண்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவதாக உள்ளது.

## 2.3 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள்

தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை–2021இன் படி மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்

நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானியங்கள் பின்வருமாறு:

- முதலீட்டு மானியம்
- குறைந்தழுத்த மின் மானியம்
- ஊதிய பட்டியல் மானியம்
- பின்முனை வட்டி மானியம்
- ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம்
- தரச்சான்றிதழுக்கான கட்டணங்களை திருப்பித்தரும் (Q–cert) திட்டம்
- மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியம்
- காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடுகள் பதிவுக்கான ஊக்கத்தொகை
- முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்குதல்

### 2.3.1. முதலீட்டு மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் முதலீட்டை ஈர்ப்பதற்காக முதலீட்டு மானிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் சிறப்பம்சங்கள் கீழ்க்கண்டவாறு:

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25% அதிகபட்சமாக ரூ.150 இலட்சம் வரை முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

- குறு நிறுவனங்களுக்கு கூடுதல் முதலீட்டு மானியம்: இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 10%, அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும்.

- மகளிர் / பட்டியல் இனம் / பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகிய தொழில் முனைவோருக்கு கூடுதல் முதலீட்டு மானியம்: தகுதியான இயந்திர

தளவாடங்களின் மீதான முதலீட்டின் 5%, அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும்.

- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு கூடுதல் முதலீட்டு மானியம்: இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25%, அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படும்.

- முன்னேற்றம் அடையும் நேர்வுகளில் கூடுதல் முதலீட்டு மானியம்: மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறு, சிறு நிறுவனங்கள் விரிவாக்கம்/ பல்வகைப்படுத்தல் மூலம் சிறு அல்லது நடுத்தரத் தொழில் நிறுவனங்களாக முன்னேற்றம் அடையும் நேர்வுகளில் அந்நிறுவனங்களின் இயந்திர

தளவாடங்களின் மதிப்பில் 5 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும்.

**அடிப்படைத் தகுதிகள்**

முதலீட்டு மானியம் பெற தகுதியான நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு:

- மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- தமிழ்நாட்டின் எப்பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்க்கண்ட 24 சிறப்பு வகை சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்

1. மின் மற்றும் மின்னணு பொருட்கள்
2. தோல் மற்றும் தோல்பொருட்கள்
3. வாகன உதிரி பாகங்கள்

4. மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள்
5. சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
6. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
7. மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள்
8. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள்
9. சிக்கன கட்டுமானப் பொருட்கள்
10. ஆயத்த ஆடைகள்
11. உணவு பதப்படுத்துதல்
12. நெகிழி (ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் நெகிழி மற்றும் தூக்கி எறியப்படும் நெகிழி நீங்கலாக)
13. இரப்பர் தயாரிப்புகள்

14. ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களுக்கு பதிலான மாற்றுப்பொருட்கள்
15. மின் வாகன பாகங்கள், மின்னேற்ற உற்பத்தி கட்டமைப்புகள் மற்றும் பாகங்கள்
16. மருத்துவ உபகரணங்கள் மற்றும் பாகங்கள்
17. தொழில் நுட்ப ஜவுளி மற்றும் மருத்துவ ஜவுளி
18. விண்வெளி, பாதுகாப்பு பயன்பாடுகள் மற்றும் பாகங்கள்
19. மின்னணு அமைப்பு, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி
20. உயிரி தொழில்நுட்பம்
21. பெட்ரோலிய இரசாயனம் மற்றும் சிறப்பு இரசாயனங்கள்

22. தொழில் 4.0

23. மின்னணு கழிவு பதப்படுத்துதல்

24. பாரம்பரிய தொழில்கள்

- தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 254 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மாநிலத்தின் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் புதிய வேளாண்சார் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மேற்கண்ட வகைகளைச் சார்ந்த, தற்போது இயங்கி வரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விரிவாக்கம் மற்றும் மாற்றுத் தொழில்கள் செய்யும் நேர்வுகளில்

2021–22ஆம் நிதியாண்டில், 3,545 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.360 கோடி மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.2 குறைந்தழுத்த மின் மானியம்

வணிக ரீதியாக உற்பத்தி தொடங்கிய நாள், அல்லது மின்இணைப்பு பெற்ற நாள், இவற்றில் எது பிந்தியதோ, அந்நாளிலிருந்து 36 மாதங்களுக்கு 20% குறைந்தழுத்த மின் மானியம், அனைத்து புதிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

**அடிப்படைத் தகுதிகள்**

குறைந்தழுத்த மின் இணைப்பு பெற்று மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும் புதிய மற்றும் விரிவாக்கம் அல்லது பல்வகைப்படுத்தல் மேற்கொள்ளும் நடப்பு குறு தொழில் நிறுவனங்கள் குறைந்தழுத்த மின் மானியம் பெற தகுதியுடையவை.

2021–22ஆம் நிதியாண்டில் 1,042 நிறுவனங்களுக்கு ரூ.8.59 கோடி குறைந்தழுத்த மின் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.3 ஊதிய பட்டியல் மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் முறையான வேலைவாய்ப்பை ஊக்குவிக்க, தங்களது நிறுவனங்களில் 20 ஊழியர்களுக்கு மேல் பணியமர்த்தப்பட்டிருப்பின், ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF)க்கு முதலாளியின் பங்களிப்புக்கு ஈடான தொகை ஆண்டொன்றுக்கு ஒரு ஊழியருக்கு அதிக பட்சமாக ரூ.24,000/– வரை மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய பட்டியல் மானியமாக வழங்கப்படும்.

**அடிப்படைத் தகுதிகள்**

- மாநிலத்தின் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்

- சென்னை மைய பகுதியிலிருந்து 50 கி.மீ தொலைவிற்குள் உள்ள தொழிற் பேட்டைகள் தவிர்த்து பின்தங்கிய பகுதிகள் மற்றும் தொழிற்பேட்டைகளில் நிறுவப்படும் அனைத்து புதிய சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்
- மாநிலத்தின் 388 வட்டாரங்களில் அமைக்கப்படும் அனைத்து புதிய வேளாண்சார் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள்

2021-22ஆம் ஆண்டில், ஆறு நிறுவனங்களுக்கு ரூ.3.46 இலட்சம் ஊதிய பட்டியல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.4 பின்முனை வட்டி மானியம்

குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்களில் தொழில் நுட்ப மேம்பாடு / நவீனப்படுத்துதலை மேற்கொண்டு அவர்களின்

போட்டித்தன்மையை அதிகரிக்க ரூ.5 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5% (அதிகபட்சமாக ரூ.25 இலட்சத்திற்குட்பட்டு) 5 ஆண்டுகளுக்கு மானியமாக வழங்கப்படும்.

அவ்விதமே, பிணையில்லா கடன் வழங்குவதை ஊக்குவிக்க கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கான வட்டியில் 5% அதிகபட்சமாக ரூ.20 இலட்சத்திற்குட்பட்டு குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்களில் நிறுவனம் ஒன்றிற்கு 5 ஆண்டு காலத்திற்கு மானியம் வழங்கப்படும்.

2021–22ஆம் ஆண்டில், 809 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2.39 கோடி பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.5 ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம்

ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மேம்படுத்துதல் திட்டம் ஆற்றல் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உலக சந்தைகளில் போட்டித்தன்மையை மேம்படுத்திட தங்களது தயாரிப்பு முறைகளில் பயன்படுத்தும் ஆற்றலை தணிக்கை செய்திட, ஏதுவாக உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை செலவில் 75% அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை, ஆற்றல் சேமிப்பிற்காக நிறுவப்படும் எந்திரங்கள், மறுசீரமைப்பு மற்றும் பெறப்படும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் மதிப்பில் 50%, அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரை ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.

2021–22ஆம் ஆண்டில், 358 நிறுவனங்களுக்கு ரூ.3.02 கோடி ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டத்தில் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2.3.6. தரச்சான்றிதழுக்கான கட்டணங்களை திருப்பித்தரும் (Q–cert) திட்டம்**

தரச் சான்றிதழானது தயாரிப்பு தரம், வணிகத் திறன், சர்வதேச அளவில் நம்பகத்தன்மையை உருவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்துதலை மேம்படுத்துகிறது. மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தரச் சான்றிதழ் பெறுவதின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, Q–cert திட்டம் செயல்முறை மற்றும் தயாரிப்புக்கான தரநிலைகள்/சான்றிதழ்களான ISO 9000 / ISO 9001 / ISO 14001 / ஆபத்து பகுப்பாய்வு மற்றும் நெருக்கடியான கட்டுப்பாடு சான்றிதழ் (HACCP) / ISO 22000, நல்ல சுகாதார நடைமுறைகள் சான்றிதழ் (GHP), நல்ல உற்பத்தி நடைமுறைகள் சான்றிதழ்

(GMP), இந்திய தரச்சான்றிதழ் (BIS), பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவுச் சான்றிதழ் (ZED), மற்றும் இந்தியாவில் தகுதிவாய்ந்த நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பன்னாட்டு தரச்சான்றிதழ் பெறுவதை ஊக்கப்படுத்துகிறது.

தேசிய அளவிலான தரச்சான்றிதழ் பெறுவதற்கான ஆலோசனைக் கட்டணம் மற்றும் சான்றளிக்கும் நிறுவனக்கட்டணம் ஆகியவற்றிற்கு செலுத்தப்பட்ட தொகை 100% அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ் பெறுவதற்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் தமிழக அரசால் திரும்ப வழங்கப்படுகிறது.

2021–22ஆம் ஆண்டில், 173 நிறுவனங்களுக்கு ரூ.1.50 கோடி தரச்சான்றிதழ் பெறுவதற்கான தொகை மானியம் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.7 மூலதன சந்தைகளில் இருந்து நிதி திரட்டுவதற்கான மானியம்

அதிக கடன் செலவு, பிணைத் தேவைகள் மற்றும் சரியான நேரத்தில் கடன் கிடைக்காதது ஆகியவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்கு முக்கியமான இடர்பாடாகக் கருதப்படுகிறது. மாநிலத்தில் உயர் வளர்ச்சி சாத்தியமுள்ள சிறு மற்றும் நடுத்தரத் உற்பத்தி மற்றும் சேவை தொழில் நிறுவனங்களை முன்னேற்றுவதன் ஒரு நடவடிக்கையாக பங்கு சந்தையை பயன்படுத்தி மூலதனத்தை திரட்டி அதிக வளர்ச்சி அடைதலை எளிதாக்குவதற்கு அரசானது, ரூ.30 இலட்சத்திற்கு உட்பட்டு ஆரம்ப பங்கு வெளியீடு செய்வதற்காக செலவிடப்பட்ட தொகையில் 50% திரும்ப வழங்கி உதவி செய்கிறது.

2021–22ஆம் ஆண்டில், ஒரு சிறு தொழில் நிறுவனத்திற்கு ரூ.14.16 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.8 காப்புரிமை பதிவு / வர்த்தக முத்திரை பதிவு / புவிசார் குறியீடுகள் பதிவுக்கான ஊக்கத்தொகை

காப்புரிமை / தயாரிப்புக்கான வர்த்தக முத்திரை அடையாளம் அல்லது லோகோ போன்றவை உடைமையாளரின் உரிமையை நிலைநாட்டுவது மட்டும் அல்லாமல் மூன்றாம் தரப்பினரின் எந்தவொரு அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கிறது. காப்புரிமை / வர்த்தக முத்திரை பதிவு பெற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க, அரசானது காப்புரிமை பதிவுக்காக செலவிடப்பட்ட தொகையில் 75%, அதிக பட்சமாக 3 இலட்சம் வரையிலும் மற்றும் வர்த்தக முத்திரை பதிவு மற்றும் புவிசார் குறியீடு பதிவுக்காக

செலவிட்டப்பட்ட தொகையில் 50% அதிகபட்சமாக ரூ.25,000/- வரையிலும் திரும்ப வழங்குகிறது.

**அடிப்படைத் தகுதிகள்**

தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்து புதிய மற்றும் தற்போதுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் புத்தொழில்கள்)

2021-22ஆம் ஆண்டில், 43 நிறுவனங்களுக்கு காப்புரிமை பதிவு மற்றும் வர்த்தக முத்திரை பதிவுக்காக ரூ.4.16 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2.3.9 முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்குதல்**

சீரான வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உறுதி செய்யவும், தொழில் வளர்ச்சியில் பின்தங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களில் புதிய குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தொடங்க

வாங்கப்படும் நிலத்தின் மதிப்பில் பதிவுத் துறைக்கு செலுத்தப்படும் முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணத்தில் 50% திரும்ப வழங்கப்படும்.

2021–22ஆம் ஆண்டில், 28 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.12.82 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.4 சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள்

### 2.4.1 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

சமுதாயத்தின் விளிம்பு நிலைப் பிரிவினரிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மைச் சிக்கலை எதிர்கொள்ள, தமிழ்நாடு அரசு படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தினை 2010–11 முதல் செயல்படுத்தி வருகிறது. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் உற்பத்தித் துறையில் ரூ.15 இலட்சம் வரையிலான திட்ட மதிப்பீட்டிலும் சேவைகள் மற்றும் வணிகப் பிரிவில்

ரூ.5 இலட்சம் வரையிலான திட்ட மதிப்பீட்டிலும் நிதி நிறுவனங்கள் மூலம் கடன் பெற்று தொழில் தொடங்க இத்திட்டத்தின் கீழ் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. பயனாளி, தனது பங்களிப்பாக, பொதுப்பிரிவினராக இருப்பின், திட்டத் தொகையில் 10% செலுத்த வேண்டும். சிறப்புப் பிரிவினருக்கு (பட்டியல் இனம் / பட்டியல் பழங்குடி / பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் படைவீரர் / மாற்றுத் திறனாளிகள்) இது 5% ஆக குறைக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 25% (அதிக பட்சம் ரூ.2.50 இலட்சம்) அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற எந்த தனியரும் இத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதியானவர் ஆவார். வயது உச்ச வரம்பு பொதுப்பிரிவினருக்கு 35 ஆண்டுகள் மற்றும் சிறப்புப்பிரிவினருக்கு 45 ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்திற்கான

விண்ணப்பங்களை இணையதளத்தில் தாக்கல் செய்ய இயலும்.

2021-22ஆம் ஆண்டில், 4,151 பயனாளிகளுக்கு ரூ.40.91 கோடி மானியமாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.2 பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் திட்டமான பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி தொழில்களுக்கு அதிக பட்சம் ரூ.25 இலட்சம் வரையிலும் சேவைத் தொழில்களுக்கு அதிக பட்சம் ரூ.10 இலட்சம் வரையிலும் வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்படுகிறது.

திட்ட மதிப்பீட்டில் பயனாளியின் பங்களிப்பாக பொது பிரிவினர் 10% மற்றும் சிறப்பு பிரிவினர் (பட்டியல் இனம்/ பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள்

இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளிகள்) 5% செலுத்த வேண்டும். ஒன்றிய அரசானது திட்ட மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு மானியங்களை வழங்கும்:

| பிரிவு | திட்ட மதிப்பீட்டில் மானிய விழுக்காடு | |
|---|---|---|
| | நகர்ப்புறம் | ஊரகம் |
| பொதுப்பிரிவு | 15% | 25% |
| சிறப்புப்பிரிவு<br><br>(பட்டியல் இனம் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளிகள்) | 25% | 35% |

மொத்த திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள தொகை வங்கிகளால் கடனாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் இணையவழியாக விண்ணப்பிக்கலாம். 2021–22ஆம் ஆண்டில், 3,053

பயனாளிகளுக்கு ரூ.76.46 கோடி விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.4.3 புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் படித்த இளைஞர்கள் முதல் தலைமுறை தொழில்முனைவோராகிட வழிகாட்டுதலும் ஆதரவும் வழங்குவதற்கெனத் தனித்துவமாக வடிவமைக்கப்பட்டு, மாநில அரசின் நிதியுடன் செயல் படுத்தப் பட்டு வரும் திட்டமாகும். பயனாளிகளின் வயது வரம்பு பொது பிரிவினருக்கு 21 வயதுக்கு மேல் 35 வயது வரையிலும், சிறப்பு பிரிவினர் (பட்டியல் இனம் / பட்டியல் பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சிறுபான்மையினர் / மூன்றாம் பாலினத்தோர் / மாற்றுத் திறனாளிகள் மற்றும் மகளிர்) 21 வயதுக்கு மேல் 45 வயது வரையிலும் இருக்க வேண்டும். கல்வித் தகுதி அங்கீகரிக்கப்பட்ட

நிறுவனங்களில் இருந்து ஏதாவது ஒரு பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு / ஐடிஐ / தொழிற் பயிற்சி என்றிருந்ததனை அண்மையில் 2021–22ஆம் ஆண்டில் அரசால் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி போதுமானதென தளர்வளிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீட்டின் படி, 19% பட்டியல் இனம் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.. ஆதரவற்ற மகளிருக்கான முன்னுரிமையுடன் மகளிருக்கு 50% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் 15 நாட்கள் தொழில்முனைப்பு மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது. உரிய கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்ட நிலையில் இப்பயிற்சியினை இணையவழியாக வழங்கிட ஏற்பாடுகள் அரசால் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி அல்லது சேவைத் தொழில் நிறுவனங்களைத்

தொடங்க வங்கிகள்/ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாயிலாக நிதியுதவி பெறவும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற்பேட்டைகளில் மனைகள் / தொழிற்கூடங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு பெறவும் வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திட்ட மதிப்பீட்டில் 25% என்ற விகிதத்தில் தனிநபர் முதலீட்டு மானியம் (ரூ.75 இலட்சத்திற்கு மிகாமல்) வழங்குவதோடு, வங்கிக் கடனுக்கான வட்டியில் 3% பின்முனை வட்டி மானியமாக கடன் திரும்ப செலுத்தும் காலம் முழுவதும் வழங்கப்படுகிறது. பட்டியல் வகுப்பினர் / பட்டியல் பழங்குடியினர் / மாற்றுத் திறனாளிகள் இனத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டில் 10% என்ற விகிதத்தில் கூடுதல் முதலீட்டு மானியம் 2021-22ஆம் ஆண்டு முதல் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சத்திற்கு மேலும், அதிகபட்ச திட்ட மதிப்பீடு ரூ.5 கோடி வரையும் ஆகும். திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பு திட்ட செலவில் பொதுப் பிரிவினருக்கு 10%, சிறப்பு பிரிவினருக்கு 5% ஆகும்.

2021–22ஆம் ஆண்டில், ரூ.148.57 கோடி அரசின் தனிநபர் சார் மானியம் பெறத்தக்க 929 திட்டங்களுக்கு இறுதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தனிநபர் முதலீட்டு மானியமாக ரூ.86.88 கோடியும் பின்முனை வட்டி மானியமாக ரூ.10.36 கோடியும் 31.03.2022 வரையான காலத்தில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.5 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றைச் சாளரத் தீர்வு முறை

தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் தொழில் தொடங்குதற்கும் நடத்துதற்குமான வணிக நடைமுறைகளை எளிதாக்கவும், உள்நாட்டு மற்றும்

பன்னாட்டுத் தொழில் முதலீட்டாளர்களுக்கு இணக்கமான சூழலை உருவாக்கவும், தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் விதிகளையும் வகுத்ததோடல்லாமல் தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் மற்றும் விதிகளையும் இயற்றியுள்ளது. இது தமிழ்நாட்டில் புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கவும், செயல்படும் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தவும், தொழில் நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்தவும் சட்ட முறைப்படி தேவையான ஒப்புதல்கள், இசைவுகள், உரிமங்கள் மற்றும் உரிமப்புதுப்பித்தல்களுக்கான விண்ணப்பங்களை ஒற்றைச் சாளர வழியாக விண்ணப்பிக்க வகை செய்வதுடன் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதையும் உறுதி செய்கிறது. விண்ணப்பதாரர் தம் குறைகளைப் இணைய வழியில் பதிவு செய்து உரிய தீர்வு பெறவும், உரிமம் வழங்கும் தகுதி பெற்ற அலுவலர்கள் தம் கடமைகளைச் செய்யத்

தவறும் பட்சத்தில் அவர்களுக்கு அபராதம் விதிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது.

ஒற்றைச் சாளரத் தீர்வு முறையின் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பாக புதிதாக வடிவமைக்கப்பட்ட இணையதளத் தகவு 190 சேவைகளுக்கான விண்ணப்பங்களைப் பெறும் ஒற்றைப் புள்ளியாக செயல்பட்டு அவ்விண்ணப்பங்களை மின்னணு முறையில் உரிய துறைகள் மற்றும் அரசு சார் அமைப்புகளுக்கு அனுப்புகிறது. அரசுக்கும் தொழில்வணிக நிறுவனங்களுக்குமான நடைமுறைகள் யாவும் நேர்முகத் தொடர்போ, நேரடித் தொடர்போ அல்லது காகிதத் தொடர்போ அற்றதாக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இத்தளம் மூலம் 31.03.2022 வரை 6,838 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 5,512 விண்ணப்பங்களுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.6 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம்

வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க புதிய மற்றும் தற்போதுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குத் தேவையான திறமையான மனித வளங்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ், வேலையில்லாத இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் அதிகபட்சமாக ஆறு மாதங்களுக்கு வேலையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.5,000/– உதவித்தொகை வழங்குகின்றன. பயிற்சியை முடித்த பிறகு, ஒரு பயிற்சியாளருக்கு மாதம் ரூ.2,000/– வீதம் அதிகபட்சமாக ரூ.12,000/–க்கு உட்பட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அரசு மானியமாக திரும்ப செலுத்தும்.

2021–22ஆம் ஆண்டில், 14,639 விண்ணப்பதாரர்கள் 276 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் பதிவு செய்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 2.7 சந்தை வாய்ப்பு

குறு மற்றும் சிறு தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு, அரசால் கீழ்க்கண்ட சந்தை வாய்ப்பு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:

- தமிழ்நாடு உள்பட இதர மாநிலங்கள், மற்றும் பன்னாட்டு அளவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் நடத்தும் கண்காட்சி / வர்த்தக கண்காட்சி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான அரங்க வாடகை கட்டணத்தில் 50% மானியமாக திரும்ப வழங்கப்படுகிறது.

- அரசு மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்களின் மொத்தக் கொள்முதல் தேவையின் 25% இம்மாநில குறு மற்றும் சிறு

தொழில் நிறுவனங்களுக்காக கொள்முதலில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

## 2.8 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்க மன்றங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006இன் படி சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்க மன்றங்களை அரசு அமைத்து, இந்நிறுவனங்கள், தங்களால் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான தொகையை உரிய காலக்கெடுவிற்குள் பெறுவதில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறது.

2020-21ஆம் ஆண்டில் 40 வசதியாக்க மன்ற கூட்டங்கள் நடத்தப்பட்டு 123 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான நிலுவைத்தொகை ரூ.12.02 கோடி

பெற்றுத்தரப்பட்டுள்ளது. 2021–22ஆம் ஆண்டில், 54 வசதியாக்க மன்றங்கள் மூலம் கூட்டங்கள் நடத்தப்பட்டு 175 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான நிலுவைத்தொகையான ரூ.42.62 கோடி பெற்று வழங்கப்பட்டுள்ளது.

## 2.9 தரக் கட்டுப்பாடு ஆணைகள் (QCO 1981, 1997 மற்றும் 2003) நடைமுறைப்படுத்துதல்

உள்நாட்டுத் துறையில் மின் உற்பத்திப் பொருட்களின் பயன்பாடு அதிகரிக்கும் போது, அதன் பாதுகாப்பு மற்றும் தரம் ஆகியவற்றைக் கண்டறிவது மற்றும் நுகர்வோருக்கு அத்தகைய பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், தரமற்ற பொருட்களை சந்தையில் இருந்து அகற்றுவதற்கும், பயனாளர்களின் பாதுகாப்பு, முக்கியத்துவம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, தரக் கட்டுப்பாடு ஆணைகள் பிரகடனப்படுத்தப்பட்டு அவ்வப்போது அதன் கீழ் சில மின் தயாரிப்புகள் பட்டியலிடப்பட்டு அறிவிக்கப்படுகின்றன.

வீட்டு உபயோக மின் பொருட்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 1981, எண்ணெய் அழுத்த அடுப்புகள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 1997 மற்றும் மின்கம்பிகள், வடங்கள், உபகரணங்கள் மற்றும் மின் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் பாகங்கள் (தரக்கட்டுப்பாடு ஆணை) 2003 ஆகிய தரக்கட்டுப்பாடு ஆணைகளை அமல்படுத்தவும், நுகர்வோரிடையே தரமான மின் பொருட்களை உபயோகிக்க விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 'அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்' ஆக மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட தொழில் மையப் பொது மேலாளர்களும், சென்னையில் மண்டல இணை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 2.10 தொழில்முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படும் தொழில்முனைவோரையும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்கி, சிறப்பாகச்

செயல்படும் வங்கிகளையும் அங்கீகரிப்பதற்காக, தமிழ்நாடு அரசால் பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன:

1. மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்கும் முதல் மூன்று வங்கிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் விருது
2. மாநில அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருது
3. மாநில அளவிலான வேளாண் சார்ந்த தொழில்களுக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது
4. மாநில அளவிலான தரம் மற்றும் ஏற்றுமதிக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது
5. மாநில அளவிலான சிறந்த மகளிர் தொழில்முனைவோர் விருது
6. மாவட்ட அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருது

## 2.11 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

கைவினைப்பொருட்கள், தென்னை நார், செங்கல் தயாரித்தல், அச்சிடுதல், தையல், தேயிலை மற்றும் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள கிராமப்புற கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியான மற்றும் இலாபகரமான வேலைவாய்ப்பை வழங்குவதே தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதன் முக்கிய நோக்கமாகும். கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்கி, அவர்களின் உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாப்பதன் மூலம் மாநிலத்தில் சிறு மற்றும் குடிசைத் தொழில்களை மேம்படுத்துதலில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் மரவள்ளிக்கிழங்கு பயிரிடுபவர்களுக்கு, இலாபகரமான விலை கிடைப்பதை தொழிற் கூட்டுறவு அமைப்புகள் உறுதி செய்கின்றன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் குறு

மற்றும் சிறு அலகுகளுக்கான பணி ஆணைகளை பெற உதவுவதோடு, கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் மூலம் தொழில்முனைவோருக்கு மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்ட தொழிற்கூடங்களையும் வழங்குகின்றன.

இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு போதுமான நிதி வசதி தொடர்புகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கென்று, தனியான ஒரு நிதி நிறுவனம் தாய்கோ வங்கி என அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியானது அதன் சொந்த மூலதனத்திலிருந்து தொழிற் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. வர்த்தகம் மற்றும் தொழில்துறை நடவடிக்கைகளில் ஈடுபடும் பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி பாம்புகளிடமிருந்து விஷம் எடுக்கும் இருளர் பழங்குடி சமூகத்தின் உறுப்பினர்களை உள்ளடக்கிய இருளர் பாம்பு பிடிப்பவர்களின் தொழிற் கூட்டுறவுச் சங்கம் மற்றும்

பல்வேறு மருந்துப் பிரிவுகளுக்கு சோதனை வசதிகளை வழங்கும் சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வு ஆய்வகம் (MICAL) போன்ற சிறப்பு வகை தொழிற் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன.

ஐந்து தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு, பிளிப்கார்ட்–ஆல் "சமர்த் திட்டம்" வாயிலாக தங்களது தயாரிப்பு பொருட்களை மின் வணிகத்தளத்தில் பட்டியலிடுவதற்கும் சந்தைப்படுத்துவதற்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அவை, நாச்சியார் கோவில் வெண்கல உலோகத் தொழிலாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் குத்துவிளக்கு, சாகோசர்வ் சங்கத்தின் ஜவ்வரிசி, தமிழ்நாடு மாநில கயிறு கூட்டுறவு விற்பனை இணையத்தின் (TANCOFED) கயிறு பொருட்கள், கன்னியாகுமரி மாவட்ட மத்திய கயிறு விற்பனை தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் தென்னை நார் தரை விரிப்புகள் மற்றும் திண்டுக்கல் பூட்டு, இரும்பு சாமான்கள் மற்றும் அறைகலன்கள்

தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கத்தின் பூட்டுகள் ஆகியவை ஆகும்.

இத்துறையின் கீழ், 300 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 228 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. 2021-22ஆம் ஆண்டு இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.1,196.64 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன. மேலும் இச்சங்கங்களின் மூலமாக ரூ.242.95 கோடி ஊதியமாக, 10,040 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.11.1 இண்ட்கோசர்வ்**

"இண்ட்கோசர்வ்" என்று பிரபலமாக அறியப்படும், தமிழ்நாடு சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம் 1965ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம், குன்னூரில் நிறுவப்பட்டது. இது 25,000க்கும் மேல் சிறு தேயிலை விவசாயிகளை

உறுப்பினர்களாக கொண்டு இயங்கும் 16 தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை உள்ளடக்கிய நாட்டின் மிகப்பெரிய தேயிலை கூட்டுறவு அமைப்பாகும். இண்ட்கோசர்வானது அதன் உறுப்பினர் தொழிற்சாலைகளுக்கு அன்றாட உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான பேக்கிங் பொருட்கள், கருவிகள், உதிரிபாகங்கள் வழங்குவதற்காகவும் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைத்தூளை ஏலமிடுவதற்கான கிடங்கு வசதிகளை வழங்குவதற்காகவும் நிறுவப்பட்டது.

2021–22ஆம் நிதியாண்டில் தேயிலைத் தொழிற்சாலைகள் அதன் உறுப்பினர்களிடமிருந்து 5.44 கோடி கிலோ பசுந்தேயிலையை கொள்முதல் செய்து 1.40 கோடி கிலோ தேயிலைத்தூளை தயாரித்து ரூ.132.86 கோடிக்கு விற்பனை செய்துள்ளன. தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் அதன் உறுப்பினர் விவசாயிகளுக்கு ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு சராசரியாக ரூ.14.80 வழங்கியுள்ளது.

இண்ட்கோசர்வ் குன்னூர், துடியலூர் மற்றும் கொச்சின் (கேரளா) ஆகிய இடங்களில் உள்ள சொந்த கிடங்குகளை கொண்டு தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகம் (டேன்டீ) உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைத்தூளுக்கு கிடங்கு வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் ரூ.1.21 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2021-22ஆம் ஆண்டில், இண்ட்கோசர்வ் தமிழ்நாடு முழுவதும் உள்ள பொது விநியோகத்திட்டத்தின் கீழ் செயல்படும் அங்காடிகளுக்கு 1,930 மெட்ரிக் டன் விநியோகித்து ரூ.38.10 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

அனைத்து 16 தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும் இணைந்து 2021-22ஆம் நிதியாண்டில் ரூ.18.43 கோடி நட்டத்திலும், மேலும் கடந்த மொத்த ஆண்டுகளில் ரூ.79.58 கோடி திரண்ட நட்டத்திலும் செயல்படுகின்றன. இண்ட்கோசெர்வ் 2021-22ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் கோவிட்-19 சிறப்பு நிவாரணத்தொகுப்பில்

ரூ.83.92 கோடி மதிப்பிலான 4,196 மெட்ரிக் டன் ஊட்டி டீயை விநியோகித்துள்ளது.

**கார்பன் நடுநிலை தேயிலைத்தூள் உற்பத்தி, இண்ட்கோ தேநீர் வண்டி மற்றும் இண்ட்கோ தேநீரகம்.**

சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய்மை ஆற்றலை நோக்கிய முன்னெடுப்பாக, இண்ட்கோசர்வ் கார்பன் நடுநிலை தேயிலைத்தூள் உற்பத்திக்கு முன்மொழிந்ததன்பேரில் அதற்காக, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் (SADP) கீழ் ரூ.2.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், கைகாட்டி தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் 250 KWA கிரிட் உடன் இணைக்கப்பட்ட மேற்கூறை சூரிய ஆற்றல் தளம் நிறுவ, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

இண்ட்கோ தேயிலைத்தூளை சந்தைப்படுத்தவும் பிரபலபடுத்தவும், இண்ட்கோசர்வ் 20 இண்ட்கோ தேநீர் வண்டிகளை அறிமுகம்

செய்துள்ளது. இதற்காக சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் (SADP) கீழ் ரூ.3.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 15.12.2021 அன்று தொடங்கப்பட்டது. இத்தகைய நடமாடும் தேநீர் வண்டிகள், தேநீர் மட்டுமின்றி புதிதாக தயாரிக்கப்பட்ட உணவு, தானியமுறுக்கு, தேன் மற்றும் நெல்லி போன்ற சிற்றுண்டி வகைகளையும் விற்பனை செய்கிறது. இதன் மூலம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியின சமுதாயத்தினருக்கு வேலைவாய்ப்புக்கள் மற்றும் வாழ்வாதாரத்திற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இண்ட்கோசர்வ், பொதுமக்களுக்கு இண்ட்கோ தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கும் இண்ட்கோ தேநீரகம் என்ற சிற்றுண்டியகத்தை துவக்கியுள்ளது. தற்போது, நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்களில் 3 இண்ட்கோ தேநீரகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## இண்ட்கோ தேயிலை தொழிற்சாலைகளை நவீனப்படுத்துதல்

தற்போது 15 தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் 2 கட்டங்களாக நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.17.68 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் குந்தா, மஞ்சூர், பந்தலூர், கைகாட்டி மற்றும் சாலிஸ்பரி ஆகிய 5 தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் நவீனபடுத்தப்படும் திட்டத்திற்கான மொத்த தொகையும் விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது. இதேபோன்று, மீதமுள்ள கரும்பாலம், மேற்குநாடு, மகாலிங்கா, இத்தலார், கட்டபெட்டு, பிராண்டியர், கிண்ணக்கோரை, பிக்கட்டி, எபநாடு மற்றும் பிதர்காடு ஆகிய 10 தொழிற் கூட்டுறவு தொழிற்சாலைகளும் நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.50.06 கோடி மொத்த திட்டமதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும். திட்டத்திற்கான

30% தொகை விடுவிக்கப்பட்டு நவீனமயமாக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

### 2.11.2 தேயிலை உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் (டீசர்வ்)

குன்னூரில் இயங்கி வரும் டீசர்வ் என்றழைக்கப்படும் தேயிலை உற்பத்தியாளர் சேவை தொழிற்கூட்டுறவு சங்கமானது, நாட்டின் முதல் மின்னணு தேயிலை ஏலமையம் ஆகும். இது 2002ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு 2003ஆம் ஆண்டில் தனது செயல்பாடுகளை தொடங்கியது. அனைத்து தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், தனியார் இலைவாங்கும் தொழிற்சாலைகள், எஸ்டேட் தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகம் ஆகிய அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கியது. டீசர்வின் முதன்மை நோக்கம், மின்னணு ஏலத்தின் மூலம் தேயிலை விற்பனையில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்துவது மற்றும் இடைத்தரகர்களை நீக்குவதன்

மூலம் தேயிலை உற்பத்தியாளருக்கு சிறந்த விலையை உறுதி செய்வது ஆகும்.

டீசர்வ் ஏலமையம் மூலம் 2021–22ஆம் ஆண்டில் ரூ.42.41 கோடி மதிப்பிலான 4,920 மெட்ரிக் டன் தேயிலைத்தூளை விற்பனை செய்து ரூ.22.81 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

### 2.11.3 சேகோசர்வ்

ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் ஆகிய இரண்டும் மரவள்ளிக்கிழங்கிலிருந்து பெறப்படும் முதன்மை பொருட்களாகும். சேகோசர்வ் என்றறியப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கமானது 1981ஆம் ஆண்டு சேலத்தில் நிறுவப்பட்டது. சேகோசர்வ்–ன் முதன்மை நோக்கமானது மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படும் மாவட்டங்களில் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர்களின் பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்துதல் மற்றும் இடைத்தரகர்களை

ஒழிப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கு நியாயமான மற்றும் இலாபகரமான விலையை உறுதி செய்வது ஆகும். சேகோசர்வ் அதன் உறுப்பினர்களின் பொருட்களை சந்தைப்படுத்துவது மட்டுமின்றி, அவர்களுக்கு நிதியுதவி மற்றும் கிடங்கு வசதிகளையும் அளிக்கிறது.

சோதனை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, சேகோசர்வ் இந்திய அரசின் குறு மற்றும் சிறு நிறுவன குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேகோ மற்றும் ஸ்டார்ச் தொழில் குழுமம் என்னும் பெயரில் பொது வசதிமையமாக தனது சோதனை ஆய்வகத்தை அமைத்துள்ளது. மேலும், வெளிப்படைத்தன்மையுடன் ஏலம் நடைபெறவும், உலகளாவிய சந்தை அணுகலுக்கும் மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளை அதிகப்படுத்தவும் சேகோசர்வ், முழுதும் கணினி மயமாக்கப்பட்ட மின் ஏல வசதியை அமைத்துள்ளது.

சேகோசர்வ் வளாகத்தில், ஜவ்வரிசி பொருட்கள் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கவும் விழிப்புணர்வை

ஏற்படுத்தவும் 1,000 சதுர அடி பரப்பில் ரூ.33.60 இலட்சம் மதிப்பீட்டில் நேரடி விற்பனை மையம் கட்டப்பட்டுள்ளது, இந்த நேரடி விற்பனை மையமும், 4,011 சதுர அடியிலான பரப்பளவில் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய மின் ஏல அறையும், 29.9.2021 அன்று தொடங்கப்பட்டது. சேகோசர்வ் சங்க அன்றாட அலுவல் நடவடிக்கைகளில் சிறப்பான செயல்பாட்டை அடைய ரூ.30 இலட்சம் மதிப்பில் மென்பொருள் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

மரவள்ளிக்கிழங்கை முதன்மை வணிகப் பயிராக பயிரிடப்படும் 7 மாவட்டங்களில் ஜவ்வரிசியில் கலப்படம் செய்யப்படுவதை தடுக்க அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2021–22ஆம் ஆண்டில் சேகோசர்வ், ரூ.551.10 கோடி விற்பனை பதிவு செய்து ரூ.5.33 கோடிக்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

### 2.11.4 தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

தாய்கோ வங்கி என்று பிரபலமாக அறியப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி 1961ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தாய்கோ வங்கியின் முக்கிய நோக்கம் மாநிலத்தில் உள்ள தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவி வழங்குவதாகும். தற்போது, தாய்கோ வங்கியானது தனிநபர்களுக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவின் கீழ் உள்ள தொழில்முனைவோருக்கும் மற்றும் அரசு ஊழியர்களுக்கும் அனைத்து வகையான கடன்களையும் வழங்குவதன் மூலம், வங்கியின் செயல்பாடுகளை விரிவுபடுத்துகிறது. மேலும், பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதியினை பெற்று அவர்களுக்கு நடப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளையும் இயக்கி வருகிறது.

தாய்கோ வங்கி தற்போது 47 கிளைகளுடன் மாநிலம் முழுவதும் பரவலாக செயல்பட்டு வருகின்றது.

அனைத்துக் கிளைகளும் மைய வங்கியியல் தீர்வின் (CBS) கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும் நிகழ் நேர பணப் பரிவர்த்தனை (RTGS) மற்றும் தேதிய மின்னணு பணப் பரிவர்த்தனை (NEFT) வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மொபைல் வங்கி சேவையும் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2021–22ஆம் ஆண்டில் இவ்வங்கி ரூ.1,138.71 கோடி வைப்பு நிதி திரட்டி, ரூ.579.34 கோடி கடன் மற்றும் முன்பணம் அளித்து ரூ.12.37 கோடி (தணிக்கை செய்யப்படாத) நிகர இலாபம் ஈட்டியுள்ளது. வங்கியின் மொத்த செயல்படாத சொத்துக்களின் சதவீதம் 8% (தோராயமாக) ஆகும். தாய்கோ வங்கி ஆரம்பகாலத்திலிருந்து, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி (Tamil Nadu State Apex Cooperative Bank) மூலம் மட்டுமே நபார்டு (NABARD) வங்கியின் நிதி உதவியைப் பெற்று வந்தது, முதல் முறையாக, தொழிற் கூட்டுறவு மற்றும் MSME பிரிவுகளுக்கு நிதியுதவி செய்வதற்கான நேரடி மறுநிதியளிப்பு உதவியாக (Direct

Refinance Assistance) தாய்கோ வங்கிக்கு NABARD நிதியுதவி அளித்துள்ளது.

நவீன வங்கி முறைகள் மற்றும் வங்கியின் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, தாய்கோ வங்கியை மறுபயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் வங்கியின் நிறுவன மறுசீரமைப்பு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெருமளவில் பயனடையும் வகையில் பில்கள் தள்ளுபடி (Discounting of bills) செய்யும் பொருட்டு TReDS (வர்த்தக வரவுகள் தள்ளுபடி அமைப்பு) மின்னணு அமைப்புக்கு உதவிடும் வகையில் IT தளங்கள் உருவாக்குவதும் அடங்கும். மேலும், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு நடைமுறை மூலதனம் வழங்கும் வகையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் (TIIC) மற்றும் தாய்கோ வங்கியின் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU)

மேற்கொள்ளப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது.

வியாசர்பாடி, எழும்பூர், நெய்வேலி மற்றும் சேப்பாக்கம் ஆகிய 4 தாய்கோ வங்கிக் கிளைகளில் நவீனமயமாக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்படும் தங்க நகைகளின் தரத்தினை உறுதி செய்திட ஏதுவாக கேரட்டோமீட்டர் (Karatometer) தாய்கோ வங்கியின் 6 கிளைகளில் நிறுவப்பட்டுள்ளது.

### 2.11.5 கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

கயிறு, சந்தையில் உள்ள பல செயற்கை பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக உள்ளது. கயிறு துறையின் வளர்ச்சியானது, சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்புகளை உருவாக்குவதிலும் உள்நாட்டு பயன்பாடுகளான, வீட்டு உபயோகம், கட்டடம், விவசாயம், தோட்டக்கலை மற்றும் உள்கட்டமைப்பு உற்பத்தியிலும் நீடித்த

நிலையான வளர்ச்சியை உருவாக்குவது குறிப்பிடத்தக்கது.

உலகெங்கிலும் உள்ள மக்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நீடித்த நிலையான சுற்றுச்சூழலுக்கு குறைவான தீங்கு விளைவிக்கும் தயாரிப்புகளுக்கு மாற வேண்டியதன் அவசியத்தை அதிகம் உணர்ந்து வருவதால், செயற்கை தளவாடங்கள் மற்றும் கட்டட பொருட்களுக்கு மாற்றாக தென்னை நார் கயிறு பொருட்களை ஊக்குவிக்கவும் பிரபலப்படுத்தவும் இது ஒரு சிறந்த நேரம். எனவே கயிறு பொருட்களின் தேவை அதிகம் உள்ள பகுதிகளைக் கண்டறிவதன் மூலம் தென்னை நார் கயிறு உற்பத்தியை ஊக்குவித்து அதனை வளர்ச்சியடையச் செய்வது மிகவும் முக்கியமானது. இத்துறை மூலம், மாநிலத்தில் தென்னை நார் கயிறு துறையில் விரிவான ஆய்வை மேற்கொண்டு பல்வேறு துறைகளில் பயன்பாட்டிற்கான தென்னை நார் கயிறு வலைகளின்

பயன்பாட்டினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் கயிறு தொழில், கிராமப்புற மக்களுக்கு லாபகரமான வேலைவாய்ப்பை வழங்குகிறது. கயிறு சங்கங்கள் முக்கியமாக நார் பிரித்தெடுத்தல், தென்னை நார் நூற்பு மற்றும் கயிறு விரிப்புகள் மற்றும் இரப்பருடன் இணைத்து செய்யப்பட்ட கயிறு மெத்தைகளை உற்பத்தி செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளன. தற்போது, மாநிலத்தில் 64 கயிறு தொழிற்கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை 11,336 உறுப்பினர்கள் / தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன (இதில் 80% மகளிர்). கயிறு உற்பத்திப் பொருட்களை சந்தைபடுத்துவதற்கு, தமிழ்நாடு மாநில கயிறு விற்பனை கூட்டுறவு இணையம் (TANCOFED) என்ற தலைமைக் கூட்டுறவு சங்கம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

இக்கயிறு தொழிற்கூட்டுறவு சங்கங்கள் ரூ.27.88 கோடி மதிப்பிற்கு கயிறு பொருட்களை விற்பனைச் செய்து, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்து 2021–22ஆம் ஆண்டில் ரூ.3.22 கோடி ஊதியமாக வழங்கியுள்ளன.

### 2.11.6 கயிறு குழுமங்கள்

மாநிலத்தில் தென்னை நார் கயிறு பொருட்கள் ஏற்றுமதி நோக்கத்துடன் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை மேம்படுத்துவதற்காக, இந்திய அரசு பாரம்பரிய தொழில்களுக்கும் புத்துயிர் ஊட்டும் நிதியுதவி திட்டத்தின் (SFURTI–Scheme of Fund for Regeneration of Traditional Industries) கீழ் தமிழ்நாட்டில் ரூ.37.79 கோடி செலவில் 9 கயிறு குழுமங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அனைத்து கயிறு குழுமங்களும் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் கயிறு குழுமங்களை உருவாக்குதல் திட்டத்தின் கீழ், 1) கோகோபி உற்பத்தியாளர் நிறுவனம், கோயம்புத்தூர் 2) நொய்யல் கயிறு குழுமம், ஈரோடு, 3) பூதலூர் கயிறு உற்பத்தியாளர்கள் நிறுவனம் லிமிடெட், தஞ்சாவூர் ஆகிய மூன்று கயிறு குழுமங்களை ரூ.21.55 கோடி செலவில் உருவாக்க அரசு ஒப்புதல் அளித்து, இக்குழுமங்கள் அனைத்தும் செயல்பட்டு வருகின்றன.

### 2.11.7 தமிழ்நாடு கயிறு வணிக வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் ஜியோ டெக்ஸ்டைல்ஸ் மற்றும் தென்னை நார் பித் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட தென்னை நார்ப் பொருட்களை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் பிரபலப்படுத்தவும், மாநிலம் முழுவதும் தென்னை நார் தொழிலை மேம்படுத்தவும், கோயம்புத்தூரில் "தமிழ்நாடு கயிறு வணிக வளர்ச்சி நிறுவனம்" அமைக்கப்படும். முதற்கட்டமாக ரூ.5 கோடி தொடக்க மூலதனமாக இந்நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.11.8 சென்னை தொழிற்கூட்டுறவு பகுப்பாய்வு நிலையம் (மைக்கால்), சென்னை

சென்னை தொழில் கூட்டுறவு பகுப்பாய்வு ஆய்வகம் (மைக்கால்) சங்கமானது அலோபதி, ஆயுர்வேத, சித்தா மற்றும் யுனானி மருந்து உற்பத்தியாளர்களால் பயன்படுத்தப்படும் / தயாரிக்கப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் முடிவுற்ற உற்பத்தி பொருட்களின் பகுப்பாய்வு மற்றும் பரிசோதனையை மேற்கொள்வது மற்றும் அவை பரிந்துரைக்கப்பட்ட தரங்களுக்கு உட்பட்டுள்ளதா என உறுதி செய்து சான்றளிப்பது ஆகிய நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இச்சங்கத்திற்கு, குன்னூரில், ஐ.எஸ்.ஓ தரச்சான்றிழ் பெற்ற கிளை ஒன்று செயல்படுகிறது. மைக்கால் 2021−22ஆம் ஆண்டில் ரூ.30.12 இலட்ச அளவில் சேவைக்கட்டணமாகவும், ரூ.1.67 இலட்ச அளவில் நிகர லாபத்தையும் பெற்றுள்ளது. NABL (National

Accreditation Board for Testing and Calibration Laboratories) அங்கீகாரத்தை பெறுவதற்கு ஏற்ற வகையில் இச்சங்கம் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது.

### 2.11.9 இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவுச் சங்கம்

இருளர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த 345 உறுப்பினர்களைக் கொண்ட இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கம் 1979ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. மாநிலம் மற்றும் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகள், மருந்து ஆய்வகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு போதிய அளவு விஷமுறிவு (ஆன்டி–வெனம்) வழங்குவதை உறுதி செய்வதன் மூலம் தொடக்ககாலத்திலிருந்து இச்சங்கம் நாட்டில், பாம்பு கடி சிகிச்சையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. உறுப்பினர்களின் பாம்பு பிடிக்கும் மற்றும் விஷம் பிரித்தெடுக்கும் திறன்கள், இருளர் பழங்குடி சமூகத்திற்குள் தலைமுறை தலைமுறையாக

உள்ளது. மேலும், இந்த பாரம்பரிய திறன்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், இருளர்களின் வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தையும் இச்சங்கம் உறுதி செய்கிறது. இச்சங்கம் ரூ.1.33 கோடி மதிப்புள்ள விஷத்தை விற்று, 2021–22ஆம் ஆண்டில் ரூ.43 இலட்சம் நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

### 2.11.10 அச்சகச் சேவை கூட்டுறவுச் சங்கங்கள்

அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடனும், சிறு அச்சக உரிமையாளர்களுக்கு அச்சுப் பணிகளைப் பெற்றுத் தரும் நோக்கத்துடனும் அச்சகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் அரசுத் துறை, அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து அச்சுப் பணி ஆணைகள் பெற்று அவற்றினை தங்களது உறுப்பினர் அச்சகங்கள் மற்றும் தொழிலாளர்கள் மூலம் நிறைவேற்றி வருகின்றன. தற்பொழுது 28 அச்சக

சேவை சங்கங்களும் 3 அச்சக தொழிலாளர் சங்கங்களும் இயங்கி வருகின்றன. 2021–2022ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.39.53 கோடிக்கு விற்பனை செய்துள்ளன.

**2.11.11 பொறியியல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

கிராமப்புறங்களில் பித்தளை பாத்திரங்கள் உற்பத்தி செய்யும் திறன் பெற்ற ஊழியர்கள், ஐ.டி.ஐ சான்றிதழ் பெற்றவர்கள், தகடு உலோக ஊழியர்கள், பட்டயத் தகுதி பெற்றோர் மற்றும் பட்டதாரிகள் உள்ளிட்டோரை இச்சங்கங்களில் உறுப்பினர்களாக்கி வேலை வாய்ப்பு அளிப்பதே பொறியியல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கமாகும். பொறியியல் சங்கங்களில் பூட்டு, நெசவு ஆலைகளுக்குத் தேவையான பாபின்கள், இரும்பு அலமாரிகள், கட்டிடத்திற்கு தேவையான இரும்பு திராவிகள் மற்றும் பிற கட்டமைப்பு உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், சில பொறியியல் சங்கங்கள் தானியங்கி சேவை செய்யும் பணி மற்றும்

அறைகலன்களை பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்கின்றன. 1,735 உறுப்பினர்களைக் கொண்டு 16 பொறியியல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், பல்வேறு மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. 2021–22ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.14.15 கோடிக்கு விற்பனை செய்துள்ளன.

### 2.11.12 கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்

3,166 குறு மற்றும் சிறு தொழில்முனைவோர் உறுப்பினர்களாகக் கொண்டு பல்வேறு மாவட்டங்களில் 11 கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள் இத்துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற் பேட்டைகளின் நோக்கம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள், தொழிற் கூடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அளித்து அவர்களின் தொழில் மேம்பாடு அடையச் செய்வதாகும். இத்தகைய தொழிற்பேட்டைகள் வியாசர்பாடி, பொள்ளாச்சி, சிவகாசி, சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை,

கோயம்புத்தூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இயங்கிவரும் அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர் வட்டம், கிட்டாம்பாளையம் கிராமம் மற்றும் திருப்பூர் மாவட்டம் அவினாசி வட்டம், தெக்கலூர் கிராமங்களில் அமைந்துள்ளது. இத்தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் 10,000 வேலைகள் உருவாக்கப்பட்டு ஏறத்தாழ 585 தொழில் முனைவோர் பயனடைவர்.

### 2.11.13 கைவினைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டின் தொன்மை வாய்ந்த மரபு வழி கைவினைத் தொழில்களைப் பாதுகாக்கவும், ஊரகப் பகுதியிலுள்ள கைவினைஞர்களின் பொருளாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டும் பல கைவினைத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

ஆரம்பிக்கப்பட்டன. கைவினைப் பொருட்களில் வெண்கலச் சிலைகள், உலோக மணிகள், கலை வண்ணமிக்க உலோகத் தட்டுகள், சுவர் அலங்கார பொம்மைகள், மரச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், இசைக்கருவிகள், பொம்மைகள், அச்சிடப்பட்ட துணிவகைகள், மெழுகு பூசி வண்ணப்படங்களை அச்சடித்தல், செயற்கை வைரம், தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகிய பொருட்கள் அடங்கும். தற்பொழுது 1,983 உறுப்பினர்களைக் கொண்டு 14 கைவினைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. 2021–22ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.1.57 கோடி விற்பனை செய்துள்ளன.

### 2.11.14 தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் உள்ள காவலர்களின் குடும்ப பெண்களுக்கு வேலைவாய்ப்பளித்து அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த காவலர் தையற் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. காவலர்களின் சீருடைகளை தைக்கும்

பணியை இச்சங்கங்களின் உறுப்பினர்கள் மேற்கொண்டு வருமானம் ஈட்டி வருகின்றனர். 2,702 தொழிலாளர்களுக்கு / உறுப்பினர்களுக்கு பயனடையும் வகையில் 14 தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. 2021–22ஆம் ஆண்டில் இச்சங்கங்கள் ரூ.3.51 கோடி விற்பனை செய்துள்ளன.

### 2.11.15 தொழிலாளர் ஒப்பந்தச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்

தனியார் தொழிலாளர் ஒப்பந்ததாரர்களை தவிர்க்கவும், தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், திறன் தொழிலாளர்களை ஒரு கட்டமைப்பிற்குள் கொண்டு வரவும் கூட்டுறவுத் துறையின் கீழ் தொழிலாளர் ஒப்பந்த சேவை சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தற்போது இயங்கி வரும் 31 தொழிலாளர் ஒப்பந்தச் சேவைக்கூட்டுறவுச் சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்கள் / தொழிலாளர்களுக்குரிய சட்டப்பூர்வ சலுகைகளை

உறுதி செய்வதுடன், 2021–22ஆம் ஆண்டில் ரூ.224.82 கோடி அளவில் ஊதியமாக வழங்கியுள்ளன.

### 2.11.16 ஆட்டோ சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள்

ஆட்டோ ரிக்க்ஷா தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும், அவர்களுக்கு வழங்கப்படும் ஆட்டோ கொள்முதல் கடனை மாதந்திர சுலபத்தவணைகளில் வசூல் செய்தபின் அவர்களையே ஆட்டோ உரிமையாளர்களாக்கும் நோக்கத்துடனும், ஆட்டோ சேவை கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மாநிலத்தில் தற்பொழுது 30 ஆட்டோ சங்கங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 15 ஆட்டோ சங்கங்கள் சிறுபான்மையினத்தைத் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்தில் ஆட்டோக்களை வழங்குவதற்கு டாம்கோ (தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டு கழகம்) திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்றுள்ளன. இந்த 30 ஆட்டோ சங்கங்களில், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை

நிலையங்களுடன் செயல்பட்டு வரும் 3 ஆட்டோ சங்கங்கள், 2021–22ஆம் நிதி ஆண்டில் ரூ.26.18 கோடி அளவிற்கு விற்பனை இலக்கை அடைந்துள்ளன.

**2.11.17 இதர தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்**

தொடர்ச்சியான வேலைவாய்ப்பை வழங்குவதற்காக, பை தயாரித்தல், செங்கல் உற்பத்தி போன்ற பல்வேறு தொழில்களில் பல சங்கங்கள் இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தச் சங்கங்கள் மூலம், மாநிலத்தில் உள்ள விளிம்புநிலைத் தொழிலாளர்களுக்கு நீடித்த வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்தச் சங்கங்கள் உருவாக்கப்படுவதன் மூலம், திறன் மற்றும் பகுதி திறன் தொழிலாளர்கள், நிரந்தரமான மற்றும் தொடர்ச்சியான வேலைவாய்ப்பைப் பெறுவது மட்டுமின்றி, அவர்களுக்குரிய முழு சட்டப்பூர்வ சலுகைகளையும் பெறமுடியும்.

## 2.12 சோதனை ஆய்வகங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களின் தரத்தினை உறுதி செய்வதற்கு அரசு பின்வரும் ஆய்வகங்களை அமைத்துள்ளது:

அ) திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் உள்ள மத்திய மின் பரிசோதனை ஆய்வகம்.

ஆ) சென்னை கிண்டியில் இரசாயன சோதனை மற்றும் பகுப்பாய்வு ஆய்வகம் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள மண்டல சோதனை ஆய்வகங்கள்.

சென்னை தொழிற் கூட்டுறவு மற்றும் பகுப்பாய்வு ஆய்வகம் லிமிடெட் (MICAL), எனப்படும் மற்றொரு சோதனை வசதி, ஒரு கூட்டுறவு ஆய்வகம்

ஆகும், இது தொழில்துறை கூட்டுறவுச் சங்கங்கள் பிரிவின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

## 2.13 மத்திய மின் பொருள் சோதனைக்கூடம், காக்களூர்

1973ஆம் ஆண்டு காக்களூரில் நிறுவப்பட்ட, மத்திய மின் பொருள் சோதனைக்கூடம் (CETL) இந்திய தரநிலை (IS) விவரக்குறிப்பேடுகளின்படி பல்வேறு மின் தயாரிப்புகளுக்கான சோதனை வசதிகளை வழங்குகிறது. இச்சோதனைக்கூடமானது, NABL (National Accreditation Board for Testing Laboratories) மற்றும் BIS (Bureau of Indian Standards) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்றுள்ளது. என்ஏபிஎல் மற்றும் பிஐஎஸ் அங்கீகாரங்களை தொடர்ந்து தக்க வைப்பதற்கு தேவையான அளவில் CETL ஆய்வுக்கூடம் அவ்வப்போது போதுமான அளவு பலப்படுத்தப்பட்டு வருகிறது. சோதனைச் சேவைகள் அவ்வப்போது தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தில் வழங்கப்படுகின்றன. MSMEகள்/ முன்னணி பிராண்ட்

உற்பத்தியாளர்கள் / மொத்தமாக வாங்குபவர்கள் மற்றும் தரக்குறியீடு நிறுவனங்கள் மத்திய மின் பொருள் சோதனைக்கூடத்தின் சேவைகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு, மத்திய மின் பொருள் சோதனைக்கூடத்தை மாநில அரசு துறைகள் / அரசு நிறுவனங்கள் மூலம் மின்சாதனப் பொருட்களை வாங்குவதற்கான தர ஆலோசகராக நியமித்துள்ளது.

உற்பத்தி செய்யப்படும் மின்சாதனப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த, மத்திய மின் பொருள் சோதனைக்கூடம், மின் உற்பத்திப் பொருட்களின் சோதனையில் 2 நாள் பயிற்சி அளிக்கிறது. மத்திய மின் பொருள் சோதனைக்கூடம், காக்களூரில் உள்ள சோதனை வசதிகள் பயிற்சியின் போது பயிற்சியாளர்களுக்கு நடைமுறை வெளிப்பாடுகளை நிரூபிக்க பயன்படுத்தப்படுகின்றன. காக்களூரில் உள்ள மத்திய மின் பொருள்

சோதனைக்கூடத்தில் வழங்கப்பட்ட பயிற்சித் திட்டங்களின் மூலம் இதுவரை பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த 437 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

LED விளக்குகள் மற்றும் பொருத்திகளை பரிசோதிப்பதற்கான அதிநவீன வசதிகளை வழங்குவதற்கான நோக்கத்துடன், TANII அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் மூலம், ஜெர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறப்பு உபகரணங்கள் ரூ.6.95 கோடியில் அமைக்கப்பட்டு சிறப்பு வகை ஆய்வகக் கட்டடம் 16.03.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**2.14 இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடங்கள்**

தொழில் வணிக ஆணையரகத்தின் கீழ் மாநிலத்தில் 5 இரசாயன பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம்

மற்றும் தூத்துக்குடியில் அமைந்துள்ளது. இந்த ஆய்வுக் கூடங்கள் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பொதுப்பணித் துறை மற்றும் இரயில்வே, உள்ளிட்ட அரசுத் துறைகள் மற்றும் தனியார் வாடிக்கையாளர்களின் மூலப்பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களைச் சோதனை செய்வதற்கான சோதனை வசதிகளை வழங்குகின்றன. இந்த ஆய்வகங்களில் உள்ள ஆப்டிகல் எமிஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர் என்னும் அதிநவீன கருவி, உலோகங்களின் வேதியியல் கலவையை உயர் மட்ட துல்லியத்துடன் சோதிக்கப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இந்த ஆய்வகங்களில் உள்ள அட்டாமிக் அப்சார்ப்ஷன் ஸ்பெக்ட்ரோமீட்டர் என்னும் கருவியின் துணை கொண்டு, எந்தவொரு வேதியியல் தயாரிப்பிலும் உள்ள இரசாயன கூறுகளை மிக துல்லியமாக சோதனை செய்ய இயலும். இந்த ஆய்வகங்களில் இரும்புக்கம்பிகள், சிமெண்ட், தண்ணீர், மணல், பிட்டுமின், மண் போன்ற கட்டுமானத்

தொழில்களில் பயன்படுத்தப்படும் பொருட்களைச் சோதிக்க போதுமான கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

## 2.15 தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள்

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் (AICTE) அனுமதி பெற்று, தொழில் வணிக ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் நிறுவனங்கள் செயல்படுகின்றன.

### i. பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரி, விருத்தாசலம்

விருத்தாசலத்தில் இயங்கி வரும் பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரி, பீங்கான் தொழில் நுட்பவியல் மூன்றரை ஆண்டு பட்டயப் பயிற்சி வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 50 மாணவர்கள் முதலாம் ஆண்டிலும், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 10 மாணவர்கள் இரண்டாம் ஆண்டில் பிற்சேர்க்கையாகவும் இக்கல்லூரியில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## ii. அரசு தொழில்நுட்ப பயிற்சி மையம், கிண்டி, சென்னை

கிண்டியில் உள்ள அரசு தொழில்நுட்பப் பயிற்சி மையம் 1962ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது, பின்வரும் இரண்டு துறைகளில் இயந்திரப் பொறியியலில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள் வழங்குகிறது.

(i) கருவி மற்றும் அச்சு பொறியியில்

(ii) குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல்

இந்த நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் 144 மாணவர்களை (முதல் ஆண்டில் (வழக்கமான) 120 மாணவர்கள் + பிற்சேர்க்கையாக இரண்டாம் ஆண்டில் 24 மாணவர்கள்) 3 வருட பட்டய பொறியியல் படிப்புக்கு சேர்த்துக் கொள்கிறது.

### iii. கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்

கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல் 1961இல் நிறுவப்பட்டது மற்றும் 3 வருட தொழில் பட்டய படிப்பு, கருவி மற்றும் அச்சு பொறியியலில் வழங்குகிறது. இந்த நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் பட்டய பொறியியல் படிப்பில் 54 மாணவர்களுக்கு (வழக்கமான முதலாம் ஆண்டில் 45 மாணவர்கள் + பிற்சேர்க்கையாக இரண்டாம் ஆண்டில் 9 மாணவர்கள்) சேர்க்கை வழங்குகிறது.

### iv. அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

கோயம்புத்தூரில் இயங்கி வரும் அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் பயிற்சி மையம், 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அறிவியல் கண்ணாடிக் கருவிகளை தயாரிப்பதில் 11 மாதங்கள் செயல்முறை மற்றும் இரண்டு மாத குறுகிய

காலத்திறன் மேம்பாடு பயிற்சியினை வழங்குகிறது.

### v. அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்

அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம் கோயம்புத்தூரில் 1972ஆம் ஆண்டு நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் சுகாதாரத் துறை, தடய அறிவியல் துறை மற்றும் வேளாண்மை துறை ஆய்வகங்களுக்கு ஆய்வக கண்ணாடி பொருட்கள் தயாரித்து வருகிறது

## 2.16 நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியங்கள்

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலட்சியமானது, பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகிய பரிமாணங்களை கொண்ட 169 இலக்குகளுடன் ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றோடொன்று இணைந்த

17 இலட்சியங்களை கொண்டதாகும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நீடித்த வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு, கண்ணியமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், பொது சரக்குகள் மற்றும் சேவைகள் அளித்தல் மட்டுமல்லாமல் வறுமையை ஒழிப்பதிலும், சமத்துவத்தை உருவாக்குவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிலையான நீடித்த வளர்ச்சிக்கான இலட்சியம் 8இல் குறிப்பிடப்பட்டுள்ள நீடித்த பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் கண்ணியமான பணி ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஆக்க பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்துவதனை கீழ்கண்ட குறியீடுகளின் மூலம் செயல்திறன் கணக்கீடு செய்யப்படுகிறது:

- உத்யம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை

- ஒன்றிய அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை
- தமிழக அரசால் நிதி உதவி வழங்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை

# 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (தமிழ்நாடு சிட்கோ)

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அவைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் குறிப்பிட்ட சிறப்பு நோக்கத்துடன் தமிழக அரசால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு பொதுத்துறை நிறுவனமாக நிறுவப்பட்டது. தமிழ்நாடு சிட்கோ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றி வருகிறது.

## 3.1 தமிழ்நாடு சிட்கோவின் செயல்பாடுகள்

i. புதிய தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில் முனைவோர் உடனடியாக தொழில் தொடங்க ஏதுவான வசதிகளை உள்ளடக்கிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் உருவாக்குதல்.

ii. தற்போதுள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல்

iii. தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்குதல் மற்றும் நகருக்கு வெளியே மாற்றி அமைத்தல்.

iv. பொது வசதி மையங்கள் மற்றும் பொது உற்பத்தி உட்கட்டமைப்பு மையங்களை அமைப்பதன் மூலம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழுமங்களை மேம்படுத்துதல்.

தமிழ்நாடு சிட்கோ 8,260 ஏக்கரில் 14,195 மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகள் / தொழிற்கூடங்களுடன் 41 அரசு தொழிற்பேட்டைகள் மற்றும் 81 தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகள் மற்றும் 2 தொழிற்பேட்டைகளில் உள்ள அடுக்குமாடி தொழில் வளாகங்கள் ஆகியனவற்றை நிர்வகித்து வருகிற சூழலில் மாநிலம் முழுவதும் சீரான தொழில் வளர்ச்சி மற்றும் தரமான உட்கட்டமைப்பு

வசதிகளுடன் கூடிய புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க உறுதி பூண்டு 2021–22ஆம் ஆண்டில் 5 மாவட்டங்களில் 5 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கியுள்ளது. இதனால் தற்போது, தமிழ்நாடு சிட்கோ 127 தொழிற்பேட்டைகளை 8,342 ஏக்கரில் 14,346 தொழில் மனைகளுடன் நிர்வகித்து வருகிறது.

தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளில் தகுந்த சாலைவசதி, மழை நீர் வடிகால், சிறு பாலங்கள் முறையான நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் வசதி, தெரு விளக்குகள், பசுமை பகுதி, பூங்கா மற்றும் தேவையான பிற வசதிகள் உள்ளடக்கிய தொழிற்சாலைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருகிறது. புதிதாக உருவாக்கப்பட்ட 5 தொழிற்பேட்டைகள் உள்ளடங்கிய 127 தொழிற்பேட்டைகளின் விவரங்கள் **இணைப்பு–1இல்** கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.45 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.25.14 கோடி ஆகும். 2021–22ஆம் நிதியாண்டில் ரூ.38.63 கோடி இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

**3.2 மகளிர்க்கான பிரத்யேக தொழிற் பூங்காக்கள்**

தமிழ்நாடு சிட்கோ 5 மகளிர் தொழிற் பூங்காக்களை 1,226 தொழில்மனைகளுடன் கீழ்க்கண்ட இடங்களில் உருவாக்கியுள்ளது.

1. திருமுல்லைவாயில் (திருவள்ளூர் மாவட்டம்)
2. திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
3. கருப்பூர் (சேலம் மாவட்டம்)
4. வாழவந்தான் கோட்டை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)
5. கப்பலூர் (மதுரை மாவட்டம்)

## 3.3 ஒரேவகை பொருள் தயாரிப்பிற்கான தொழிற்பேட்டைகள்

தமிழ்நாடு சிட்கோ ஒரேவகை பொருள் தயாரிப்பிற்காக 5 தொழிற்பேட்டைகளை 515 தொழில்மனைகள் மற்றும் தொழிற்கூடங்களுடன் உருவாக்கியுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

1. ஒருங்கிணைந்த தொழில்நுட்ப ஜவுளி பூங்கா, தண்டரை (செங்கல்பட்டு மாவட்டம்)
2. ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா/ ஆயத்த ஆடை பூங்கா, புஞ்சைகாளக்குறிச்சி (கரூர் மாவட்டம்)
3. ஒருங்கிணைந்த உணவுப் பூங்கா, ஈச்சம்பாடி (தருமபுரி மாவட்டம்)
4. ஒருங்கிணைந்த கடல்சார் உணவுப் பூங்கா, சக்கரைக்கோட்டை (இராமநாதபுரம் மாவட்டம்)
5. மருந்து பொருட்கள் பூங்கா, ஆலத்தூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

## 3.4 புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

2021–22ஆம் ஆண்டில், தமிழ்நாடு சிட்கோ மூலம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 5 புதிய தொழிற்பேட்டைகள் பின்வரும் 5 மாவட்டங்களில் முதற்கட்டமாக 151 தொழிற்மனைகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன:

| | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | மேம்படுத்தப் பட்ட பரப்பு (ஏக்கரில்) | மேம்படுத்தப் பட்ட தொழில் மனைகள் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | ஆலத்தூர் பகுதி–2 | 29.71 | 38 |
| 2 | நாமக்கல் | இராசம்பாளையம் | 12.72 | 25 |
| 3 | சேலம் | பெரிய சீரகப்பாடி | 18.02 | 35 |
| 4 | புதுக்கோட்டை | ஆலங்குடி | 7.65 | 20 |
| 5 | திருவண்ணாமலை | பெரியகோளப்பாடி | 13.75 | 33 |
| | | **மொத்தம்** | **81.85** | **151** |

மேலும், 5 புதிய தொழிற்பேட்டைகள் பின்வரும் 5 மாவட்டங்களில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| [illegible] | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | சேலம் | உமையாள்புரம் | 20.07 | 4.50 |
| 2 | மதுரை | சக்கிமங்கலம் | 31.88 | 22.28 |
| 3 | செங்கல்பட்டு | கொடூர் | 98.22 | 45.94 |
| 4 | திருவள்ளூர் | காவேரிராஜபுரம் | 145.98 | 65.69 |
| 5 | திருச்சிராப்பள்ளி | மணப்பாறை | 120.00 | 84.00 |
| | **மொத்தம்** | | **416.15** | **222.41** |

## 3.5 இயங்கி வரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

தமிழ்நாடு சிட்கோ குறு, சிறு நிறுவனங்கள் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் இயங்கி வரும்

14 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.29.64 கோடி மொத்தத் திட்ட மதிப்பில் மேம்படுத்தியுள்ளது.

2021–22ஆம் நிதி ஆண்டில் கீழ்க்காணும் 5 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.18.40 கோடி மொத்தத் திட்ட மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

| [illegible] | **மாவட்டம்** | **தொழிற்பேட்டையின் பெயர்** | **பரப்பு (ஏக்கரில்)** | **திட்ட மதிப்பு (ரூ. கோடியில்)** |
|---|---|---|---|---|
| 1 | மதுரை | கே. புதூர் | 56.05 | 5.20 |
| 2 | தஞ்சாவூர் | நாஞ்சிக்கோட்டை | 26.30 | 2.85 |
| 3 | கிருஷ்ணகிரி | ஓசூர் (புதியது) | 24.41 | 4.00 |
| 4 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 39.91 | 4.05 |
| 5 | ஈரோடு | நஞ்சை ஊத்துக்குளி | 13.05 | 2.30 |
| | | **மொத்தம்** | 159.72 | 18.40 |

மேலும் கீழ்க்காணும் 2 இயங்கி வரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.19.10 கோடி மொத்த திட்ட மதிப்பில் நடைபெற்று வருகின்றன:

| எ.வ | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை | 113.44 | 9.55 |
| 2 | மதுரை | உரங்கான்பட்டி | 69.84 | 9.55 |
| | | **மொத்தம்** | **183.28** | **19.10** |

## 3.6 தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல்

நகருக்கு வெளியே புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க முன்வரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன கூட்டமைப்புகளுக்கு மொத்தத் திட்ட மதிப்பில் 50 விழுக்காடு என்ற அளவில் ரூ.15 கோடிக்கு மிகாத மானியத்துடன் புதிய தொழிற்பேட்டைகள் அமைத்திட தமிழ்நாடு அரசு உதவி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு தனியார்

தொழிற்பேட்டை ரூ.24.32 கோடி திட்ட மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

ரூ.69.28 கோடி மொத்தத் திட்ட மதிப்பில் பின்வரும் 4 தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன:

| | **மாவட்டம்** | **தொழிற்பேட்டையின் பெயர்** | **பரப்பு (ஏக்கரில்)** | **திட்ட மதிப்பு (ரூ. கோடியில்)** |
|---|---|---|---|---|
| 1 | மதுரை | தி/ள். மதுரை பொறியியல் குழுமம் (பி) லிமிடெட், மேலவளவு | 54.00 | 13.65 |
| 2 | கோயம்புத்தூர் | தி/ள். கொடீசியா இண்டஸ்ரியல் பார்க் (பி) லிமிடெட், கள்ளப்பாளையம் | 116.24 | 20.00 |
| 3. | கோயம்புத்தூர் | தி/ள்.கொசிமா இண்டஸ்ரியல் பார்க் லிமிடெட், சொலவம்பாளையம் | 42.42 | 18.06 |
| 4. | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | தி/ள்.அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை லிமிடெட், கிட்டாம்பாளையம் மற்றும் தெக்கலூர் | 316.04 | 17.57 |
| | | **மொத்தம்** | **528.70** | **69.28** |

### 3.7 இயங்கி வரும் தொழிற்கூடங்களை நகர்/பெருநகரங்களுக்கு வெளியே இடம் பெயரச் செய்தல்

நகர்/பெருநகர்புறங்களில் இயங்கி வரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்புகள் நகர்புறங்களுக்கு வெளியே சென்று இயங்க தயாராக இருக்கும் பட்சத்தில் தொழிற்கூடங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைக்க மொத்தத் திட்ட மதிப்பில் 75 விழுக்காடு என்ற அளவில் அதிகபட்சம் ரூ.20 கோடி வரையிலான மானியத்துடன் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் வசதிகளை உருவாக்கிக் கொள்ள தமிழ்நாடு அரசு உதவி வருகிறது. இந்த வகையில் ஒரு தொழிற்பேட்டை ரூ.13.67 கோடி திட்ட மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

ரூ.18.17 கோடி மொத்தத் திட்ட மதிப்பில் பின்வரும் 2 தனியார் தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன:

| | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | பரப்பு (ஏக்கரில்) | திட்ட மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | விருதுநகர் | தி/ள். சதர்ன் டிஸ்டிரிக்ட் டெக்ஸ்டைல் பிராஸஸிங் குழுமம், காரியாப்பட்டி | 100.46 | 12.17 |
| 2 | கோயம்புத்தூர் | தி/ள். டீ பார்க் இந்தியா (பி) லிமிடெட், சிறுமுகை, மேட்டுப்பாளையம் | 13.45 | 6.00 |
| | | **மொத்தம்** | **113.91** | **18.17** |

## 3.8 உடனடியாக தொழில் தொடங்க தேவையான வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள்

தமிழ்நாடு சிட்கோ திருமழிசை தொழிற்பேட்டையில் 97,036 சதுர அடி கட்டட பரப்பளவுடன் உடனடியாக தொழில் தொடங்க தேவையான வசதிகளுடன் 79 தொழிற்கூடங்களை கட்டியுள்ளது. இவை முழுகிரைய விலை / வாடகை / தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

குறுந்தொழில் நிறுவனங்கள் உடனடியாக தொழில் தொடங்கும் வகையில் தேவையான வசதிகளுடன் கூடிய 2 அடுக்குமாடி தொழில் வளாகங்கள் கட்டும் பணிகள் கீழ்க்கண்ட தொழிற்பேட்டைகளில் நடைபெற்று வருகின்றன:

| | **தொழிற் பேட்டை** | **தளங்களின் எண்ணிக்கை** | **தொழிற்கூட அலகுகளின் எண்ணிக்கை** | **கட்டிட பரப்பு (சதுர அடியில்)** | **திட்ட மதிப்பு (ரூ.கோடியில்)** |
|---|---|---|---|---|---|
| 1 | கிண்டி | அடித்தளம், தரைதளம் + 6 | 152 | 197024 | 90.13 |
| 2 | அம்பத்தூர் | தரைதளம் + 4 | 112 | 131427 | 60.55 |
| | | **மொத்தம்** | **264** | **328451** | **150.68** |

மேலும், சேலம் மாவட்டத்திலுள்ள வெள்ளி கொலுசு உற்பத்தித்தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் தேவையான இடவசதியினை ஏற்படுத்தித் தரும் வகையில் சேலம் மாவட்டம்

அரியகவுண்டம்பட்டியில் 1.20 ஏக்கரில் ரூ.25 கோடி திட்ட மதிப்பில் 100 அலகுகளை கொண்ட உடனடியாக தொழில் துவங்க தேவையான வசதிகளுடன் தரைதளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.9 தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீட்டு கொள்கை**

காலியாக உள்ள தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் குறித்த விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு வெளிப்படையான முறையில் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 5 சென்ட் முதல் 100 சென்ட் வரையிலான தொழில்மனைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தகுதியான விண்ணப்பதாரர்கள் தேர்வுக் குழுவினரால்

நேர்காணல்முறை மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். தகுதியான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை காலியாக உள்ள தொழில்மனைகள்/ தொழிற்கூடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருக்கும்பட்சத்தில் ஒதுக்கீட்டாளர்கள் ஒளிவு மறைவற்ற குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுகிறார்கள். தொழில்மனைகள்/ தொழிற்கூடங்கள் / தொழிற்கூட அலகுகள் முழுகிரைய விலை / குத்தகை / வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தியினை விரைந்து தொடங்கும் பொருட்டு தமிழ்நாடு சிட்கோவின் தொழில்மனைகள் / தொழிற்கூடங்களை தாமதமின்றி பெற ஏதுவாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் (TIIC) தொழில் உட்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டத்தின் (IIIS) மூலம் இடைக்கால கடன் வழங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 3.9.1 ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்தல்

தொழில்முனைவோருக்கு ஒதுக்கீட்டில் பின்வருமாறு முன்னுரிமை வழங்கப்படுகிறது:

- ❖ குறுந்தொழில் நிறுவனங்கள் – 30%
- ❖ மகளிர் தொழில்முனைவோர் – 30%
- ❖ முன்னாள் இராணுவத்தினர்கள் – 10%
- ❖ பட்டியல் இனம்/பழங்குடியினர் மற்றும் மூன்றாம் பாலினத்தோர் – 20%
- ❖ ஒதுக்கீடு செய்வதற்கான தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள் இருக்கும் நிலையில் நீட்ஸ் (NEEDS) திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற முதல் தலைமுறை தொழில்முனைவவோருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

### 3.10 30 வருட குத்தகை ஒதுக்கீட்டினை முழு கிரைய ஒதுக்கீடாக மாற்றுதல்

2013–14ஆம் ஆண்டில் இருந்து உருவாக்கப்படும் தொழிற்பேட்டைகளின்

தொழில்மனைகளை 30 வருட குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யவும் 30 ஆண்டுகள் முடிவில் முழுகிரைய விற்பனையாக மாற்றலாம் எனவும் 2013–14ஆம் ஆண்டில் அரசு உத்தரவிட்டது. இந்த ஒதுக்கீட்டு கொள்கையினை பின்பற்றி 2013–14ஆம் ஆண்டு முதல் உருவாக்கப்பட்ட 6 புதிய தொழிற்பேட்டைகளான விருதுநகர் (நகர்புறம்), வாணியம்பாடி, வேட்டம்பாடி, மாத்தூர் (புதியது), பாளையப்பட்டி மற்றும் பட்டணம் ஆகியவற்றில் 64 ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்தினர் விற்பனை பத்திரம் பெற முடியாததால் தொழிற்சாலை நிறுவுவதற்கு தேவையான கடன் வசதியினை வங்கியிலிருந்து பெற பெரும் சிரமத்திற்கு ஆளானதால், குத்தகை முறையிலான ஒதுக்கீட்டினைப் பெற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முன்வரவில்லை.

ஒதுக்கீட்டாளர்கள் குத்தகை ஒதுக்கீட்டினை முழுகிரைய ஒதுக்கீடாக மாற்றி வழங்கிட தொடர்ந்து

வலியுறுத்தினர். அரசு இவ்வொதுக்கீட்டாளர்களின் தொடர் கோரிக்கையினை ஏற்று 30 வருட குத்தகை ஒதுக்கீட்டினை முழு கிரைய ஒதுக்கீடாக மாற்றி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசாணை (நிலை) எண் 76, நாள் 06.12.2021 மூலம் உத்தரவிட்டுள்ளது. இதனால் 30 வருடங்கள் காத்திராமல் விற்பனை பத்திரம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**3.11 பொது வசதி மையங்கள் அமைத்தல்**

குழும மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. குழும அணுகுமுறையானது குறு, மற்றும் சிறு தொழில்முனைவோரின் போட்டித்திறன் உற்பத்தித்திறன் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகிறது. ஒன்றிய அரசின் குழும மேம்பாட்டு திட்டமானது குறு மற்றும் சிறு தொழில்

நிறுவனங்களின் தொழில்நுட்ப மேம்பாடு, திறன் மேம்பாடு, சந்தைகளை அணுகும் வசதி மற்றும் மூலதனம் பெறுவதற்கான அணுகுமுறை வசதி ஆகியவற்றை மேம்படுத்திட உறுதுணை புரிகிறது.

**பொது வசதி மைய திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை**

**(ரூபாய் கோடியில்)**

| | **நிலை** | **எண்ணிக் கை** | **திட்ட மதிப்பு** | **ஒன்றிய அரசின் மானியம்** | **தமிழக அரசின் மானியம்** |
|---|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 26 | 141.34 | 97.39 | 11.13 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 17 | 206.07 | 136.82 | 24.83 |
| 3 | ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டுள் ள / பரிந்துரைக்கப்படவுள் ள புதிய திட்டங்கள் | 13 | 196.83 | 148.12 | 18.84 |
| | **மொத்தம்** | **56** | **544.24** | **382.33** | **54.80** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொது வசதி மைய திட்டங்களின் விவரங்கள் முறையே **இணைப்பு–2**,

**இணைப்பு–3** மற்றும் **இணைப்பு–4இல்** கொடுக்கப்பட்டுள்ளன.

## 3.12 பொது உற்பத்தி உட்கட்டமைப்பு (CPI)

குறுந்தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் மாநில அரசினால் பொது உற்பத்தி உட்கட்டமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, குறுந்தொழில் குழுமங்களை ஊக்குவிக்கும் வகையில் மொத்தத் திட்ட மதிப்பில் 70 விழுக்காடு என்ற அளவில் அதிகபட்சமாக ரூ.2.50 கோடி வரை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## பொது உற்பத்தி உட்கட்டமைப்புத்திட்டங்களின் ஒட்டுமொத்த நிலை

**(ரூபாய் கோடியில்)**

| வ | நிலை | எண்ணிக்கை | திட்ட மதிப்பு | தமிழக அரசின் மானியம் |
|---|---|---|---|---|
| 1 | நிறைவுற்ற திட்டங்கள் | 1 | 3.90 | 2.50 |
| 2 | செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள் | 9 | 36.90 | 20.71 |
| | **மொத்தம்** | **10** | **40.80** | **23.21** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொது வசதி உட்கட்டமைப்பு திட்டங்களின் விவரங்கள் **இணைப்பு–5இல்** கொடுக்கப்பட்டுள்ளன.

### 3.13 மூலப்பொருட்கள் விநியோகம்

பாரஃபின் மெழுகு மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகிய மூலப்பொருட்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையின் அடிப்படையில் தமிழ்நாடு சிட்கோ

கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. மேற்படி மூலப்பொருட்கள் அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வேலூர், சேலம், ஈரோடு, சிவகாசி மற்றும் சாத்தூர் ஆகிய 10 தமிழ்நாடு சிட்கோ கிளை அலுவலகங்கள் மற்றும் கிடங்குகள் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன.

மூலப்பொருள் உதவித் திட்டத்தின் கீழ், 2021–22ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சிட்கோ 967 மெட்ரிக் டன் அளவிலான ரூ.10.27 கோடி மதிப்புடைய பாரஃபின் மெழுகு மற்றும் காகிதம் ஆகிய மூலப்பொருட்களை விற்பனை செய்துள்ளது.

### 3.14 மின் ஆளுமை

- தமிழ்நாடு சிட்கோ தனது வலைதளத்தினை (www.tansidco.tn.gov.in) உபயோகிப்பாளர்கள் எளிதில் பயன்படுத்தும் வகையிலும் மற்றும் தமிழ்நாடு சிட்கோவின் சேவைகள் / திட்டங்கள்

தெளிவாக தெரிந்து கொள்ளும் வகையிலும் மறுவடிவமைப்பு செய்துள்ளது.

❖ தமிழ்நாடு சிட்கோவின் இணையம், "https:\\www.tnswp.com" என்ற ஒற்றைச் சாளர இணையத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு சிட்கோ புவியியல் தகவல் அமைப்பானது இந்திய அரசின் "இந்திய தொழில் நில வங்கி (IILB)" இணைய முகப்புடன் ("https://iis.ncog.gov.in/parks") ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**தற்பொழுது வழங்கப்பட்டு வரும் சேவைகள்**

❖ காலி தொழில் மனைகளின் விவரங்களை இணையம் மூலம் பார்வையிடல்

❖ புவியியல் தகவல் அமைப்பு (GIS) மூலம் தொழிற்பேட்டை வரைபடம் பார்வையிடல்

❖ தொழில்மனைகள் / தொழிற்கூடங்கள்/அடுக்குமாடி

தொழிலகங்கள் வேண்டி இணைய வழியில் விண்ணப்பித்தல் மற்றும் விண்ணப்ப நிலையினை அறிதல், மற்றும் விண்ணப்பக் கட்டணம் செலுத்துதல்

- ❖ குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் உரிய தகவல்கள் அறிந்து கொள்ளுதல்
- ❖ ஒதுக்கீட்டு ஆணையை எந்தநேரத்திலும், எங்கிருந்தும் பதிவிறக்கம் செய்தல்
- ❖ ஒதுக்கீட்டாளர்கள் தங்களுக்குரிய தனித்துவமான கடவுச்சொல் மற்றும் பயனாளி அடையாள எண் ஆகியவற்றை உள்ளீடு செய்து மனைத் தொகை செலுத்துதல், மனைத் தொகை நிலுவை மற்றும் கால அவகாசம் ஆகிய விவரங்களை அறிந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கு இணையதள முகப்பு வசதி அளித்தல்

**நடப்பாண்டில் செயல் படுத்தப்பட உள்ள பணிகள்**

மேற்கூறிய சேவைகளை அளிப்பதோடு மட்டும் அல்லாமல் தமிழ்நாடு சிட்கோ தற்பொழுது கீழ்க்குறிப்பிட்ட இணைய வழி சேவைகளை உருவாக்கி நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

- ❖ இணைய வழி மூலம் மூலப்பொருட்கள் (பாரஃபின் மெழுகு / தமிழ்நாடு காகித தாள் நிறுவனத்தின் காகிதம்) விநியோகம் செய்தல், ஒற்றைச் சாளர இணையத்துடன் இணைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- ❖ தணிக்கைச் சோதனையுடன் கணக்கியல் மென்பொருள் உருவாக்கம்
- ❖ மனை ஒதுக்கீட்டாளர்களுக்கு கிளை அலுவலக சேவைகள் வழங்கப்படுவதை கண்காணிக்க இணையதள வசதியை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது

மேலும், தமிழ்நாடு சிட்கோ தற்போதைய அலுவலக நடைமுறையை மின் ஆளுமை அமைப்பு முறையாக மாற்ற திட்டமிட்டுள்ளது.

### 3.15 பெருங்குழுமங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்நிறுவனங்கள் தமது உலகளாவிய தரம் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், வளர்ந்து வரும் தொழில் பிரிவுகளுக்குள் நுழைய வழிவகை செய்யவும் ஒளிரும் துறைகளில் பெரும் குழுமங்கள் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

#### 3.15.1 மருந்துப் பொருட்கள் பெருங்குழுமம்

தமிழ்நாடு சிட்கோ, மருந்து உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புகளுடன் இணைந்து மருந்து பொருட்கள் பெருங்குழுமத்தினை விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சிப்காட் தொழில் பூங்காவில் ரூ.150 கோடி மதிப்பில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பெருங்குழுத்தின் மூலம் மருந்துப் பொருட்கள் உருவாக்கத்தில் (formulation) ஈடுபட்டுள்ள குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பொது பரிசோதனை மையம், ஆலை கழிவுநீர் சுத்திகரிப்பு பொதுவசதி (CETP), பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை (STP) மற்றும் தேவையான பொது வசதிகள் உருவாக்கப்படும்.

### 3.15.2 துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம்

தமிழ்நாடு சிட்கோ தானியங்கி வாகனங்கள், இயந்திரங்கள், மின் மற்றும் மின்னணு உபகரணங்களில் பயன்படுத்தப்படும் துல்லிய பொறியியல் பாகங்களை உருவாக்கும் மையமாக (Hub) கருதப்படும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய சென்னை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் நிலம் கண்டறியப்பட்டு தொழில்முனைவோர்

கூட்டமைப்பினர்களுடன் இணைந்து ரூ.48 கோடி திட்டமதிப்பில் துல்லிய உற்பத்தி பெருங்குழுமம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் புதிய பொருட்கள் உருவாக்குவதற்கான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, பொதுவான நவீன பரிசோதனை வசதிகள் மற்றும் பொது உற்பத்தி வசதிகள் போன்றவை ஏற்படுத்தி தரப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தரம் நிறைந்த பொருட்களை குறைந்த மதிப்பில் உற்பத்தி செய்தல், உயர்தரத்திலான பரிசோதனை வசதி தேவையினை பூர்த்தி செய்தல், தொழில்நுட்ப மேம்பாட்டுக் குறைகளை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றிற்கு இப்பெருங்குழுமங்கள் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 3.16 பணியாளர்கள் தங்கும் விடுதி

தேவைப்படும் தொழிற்பேட்டைகளில் தொழிலாளர்களுக்கு தரமான மற்றும் குறைந்த வாடகையில் தங்குமிட வசதியினை அமைத்துத் தருவதில் முதற்கட்டமாக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் பணியாளர்கள் தங்கும் விடுதிகள் கட்டப்படும் எனவும் படிப்படியாக பிற இடங்களில் கட்டப்படும் எனவும் அரசால் அறிவிக்கப்பட்டது.

### 3.16.1 அம்பத்துர் தொழிற்பேட்டையில் பணியாளர் தங்கும் விடுதி

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 1.212 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.29.47 கோடி திட்ட மதிப்பில் 800 பணியாளர்கள் தங்குவதற்காக தரைதளம் மற்றும் 5 தளங்களுடன் கூடிய பணியாளர் தங்கும்

விடுதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.16.2 குறிச்சி தொழிற்பேட்டையில் பணியாளர் தங்கும் விடுதி

கோயம்புத்தூர் மாவட்ட பணியாளர்களின் தங்குமிட வசதி அளிக்கும் பொருட்டு, குறிச்சி தொழிற்பேட்டையில் 1.49 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.22 கோடி திட்ட மதிப்பில் 510 பணியாளர்கள் தங்குவதற்காக தரைதளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய பணியாளர் தங்கும் விடுதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.17 தொழிற்பேட்டை தொழில்மனைகளின் மனைமதிப்பு குறைத்தல்

தமிழ்நாடு சிட்கோவின் சில தொழிற்பேட்டைகளில் தொழில்மனைகளின் மனை மதிப்பு அதிகமாக இருந்ததால், அவை விற்பனை செய்யப்படாமல் இருந்தது. இவற்றினை நிவர்த்தி

செய்ய திருத்திய மனை மதிப்பீட்டு கொள்கை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசாணை (நிலை) எண்.50 நாள் 11.10.2021 மூலம் வெளியிடப்பட்டு, இதன் மூலம் 2018–19ஆம் ஆண்டிற்கான மனை மதிப்பு நிர்ணயிக்கப்பட்டதில் தொழிற்பேட்டைகளில் மனைமதிப்பு 5% முதல் 75% வரை குறைக்கப்பட்டுள்ளது.

கோவிட்–19 பெருந்தொற்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை கடுமையாக பாதித்துள்ளது மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை பெரிய அளவில் முடக்கியுள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பது கட்டாயமாகி விட்டது. எனவே, 2018–19ஆம் ஆண்டின் மனைமதிப்பு 2019–20, 2020–21 மற்றும் 2021–22ஆம் நிதியாண்டுகளுக்கும் தக்க வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனை விலை குறைப்பு நடவடிக்கையின் காரணமாக ஒதுக்கீடு செய்யப்படாமலிருந்த 553 மனைகள் 2021–22ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழிற்முனைவோர் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொழிற்மனைகளுக்கும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு விரைந்து ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.18 தொழில் மனைகளுக்கான பட்டா**

60 தொழிற்பேட்டைகளில் உள்ள 3,600 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டாளர்களுக்கு பட்டா வழங்கப்படவேண்டும். அரசு இதற்கென தலைமைச் செயலாளர் தலைமையிலான அதிகாரம் பெற்ற குழுவினை அமைத்துள்ளது. கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டைகளை உள்ளடக்கிய 23 தொழிற்பேட்டைகளின் 1,314 ஏக்கர் நிலத்திற்கு பட்டா

வழங்குவதற்காக அதிகாரம் பெற்ற குழுவின் முதல் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள தொழிற்பேட்டைகளிலும் அரசு புறம்போக்கு என்ற வகைபாட்டிலுள்ள நிலங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதலுடன் விரைந்து பட்டா வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.19 இயங்கிவரும் தொழிற்பேட்டைகளில் ஒருமுறை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் – குழுமவளர்ச்சி திட்டத்தின் மூலம் இயங்கிவரும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டினை தகுந்த கால இடைவெளியில் தமிழ்நாடு சிட்கோவினால் மேம்படுத்த இயலாததால், சிறப்பு முயற்சியாக தமிழ்நாடு சிட்கோ தனது நிதியினைப் பயன்படுத்தி மேம்பாட்டு பணிகள் அவசியம் தேவைப்படும் 53 தொழிற்பேட்டைகளில் ரூ.12.38 கோடி மதிப்பில் ஒரு முறை மேம்படுத்தும் திட்ட பணிகள் எடுக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது.

## 3.20 குறுந்தொழில் குழும மேம்பாட்டு திட்டம்

மாநிலம் முழுவதும் பரவலாக குறுந்தொழில் நிறுவனங்கள் கொண்ட பல்வேறு குழுமங்கள் (Micro Cluster) உள்ளன. இத்தகைய குறு நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் "குறுநிறுவனக் குழும மேம்பாட்டுத் திட்டம்" ஏற்படுத்தப்படும் என 2022–23ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.50 கோடி ஒதுக்கீட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் பாத்திரங்கள் செய்யும் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நரிகுறவர் செய்யும் செயற்கை நகைகள் குழுமம், கடலூர் மாவட்டத்தில் முந்திரி பதப்படுத்தும் குழுமம் மற்றும் மதுரை மாவட்டத்தில் பொம்மை செய்யும் குழுமம் உள்ளிட்ட இருபது குறு நிறுவன குழுமங்கள் இந்தாண்டு பயன்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## 4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965ஆம் வருடம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் டான்சிக்கு தற்போது கீழ்க்கண்டுள்ளவாறு 19 தொழிற்கூடங்களும் மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒரு காட்சியகமும் உள்ளது:

| | | |
|---|---|---|
| ❖ பொறியியல் தொழிற்கூடங்கள் | – | 3 |
| ❖ மர அறைகலன் தொழிற்கூடங்கள் | – | 13 |
| ❖ சிறப்பு வகை தொழிற்கூடங்கள் | – | 2 |
| ❖ வண்ணம் தயாரிக்கும் தொழிற்கூடம் | – | 1 |
| **மொத்தம்** | | **19** |

## 4.1 உற்பத்தி பொருட்கள்

டான்சி கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது:

1. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான மின்கடத்தி பொருட்கள்
2. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் விடுதிகளுக்குத் தேவையான வகுப்பறை அறைகலன்கள்
3. வீடுகள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கான அறைகலன்கள்
4. தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்திற்கு (TNMSC) தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள்
5. இந்தியா மார்க்–II கைப்பம்புகள்
6. வர்ணங்கள், குழந்தைகள் எடை போடும் கருவி முதலியன

7. ஸ்பிரிட்டை அடிப்படையாக்க் கொண்டு தயாரிக்கப்படும் தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசினி கரைசல்களான லைசால், பினாயில்

**4.2 2021–22ஆம் ஆண்டில் முடிக்கப்பெற்ற குறிப்பிடத்தக்க பணி ஆணைகள் (ரூ. 1 கோடிக்கு மேல்)**

- ❖ பள்ளி கல்வித் துறைக்கு வழங்கப்பட்ட Foundational Literacy and Numeracy (FLN) Kits – ரூ.17 கோடி
- ❖ உயர் கல்வித் துறைக்குத் வழங்கப்பட்ட எஃகு டெஸ்க் மற்றும் மரக்கலன்கள் – ரூ.12.29 கோடி
- ❖ இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறைக்குத் வழங்கப்பட்ட எஃகு மற்றும் மரக்கலன்கள் – ரூ.4.23 கோடி

- ❖ சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்குத் வழங்கப்பட்ட எஃகு மற்றும் மரக்கலன்கள் – ரூ.2.71 கோடி
- ❖ வேளாண்மை மற்றும் பொறியியல் துறைக்குத் வழங்கப்பட்ட எஃகு மற்றும் மரக்கலன்கள் – ரூ.1.44 கோடி
- ❖ இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை துறைக்குத் வழங்கப்பட்ட எஃகு மற்றும் மரக்கலன்கள் – ரூ.1.04 கோடி

**4.3 2021–22ஆம் நிதி ஆண்டில் கைவசமுள்ள பெரும் பணி ஆணைகள் (ரூ. 1 கோடிக்கு மேல்)**

- ❖ பள்ளி கல்விக்குத் வழங்கவுள்ள Foundational Literacy and Numeracy (FLN) Kits – ரூ.28.39 கோடி
- ❖ உயர் கல்வித் துறைக்குத் வழங்கவுள்ள எஃகு டெஸ்க் மற்றும் மரக்கலன்கள் – ரூ.13.20 கோடி

❖ பள்ளி கல்வித் துறைக்குத் வழங்கவுள்ள எஃகு மற்றும் மரக்கலன்கள் – ரூ.15.51 கோடி

❖ பெருநகர சென்னை மாநகராட்சிக்குத் வழங்கவுள்ள எஃகு மற்றும் மரக்கலன்கள் – ரூ.9.80 கோடி

❖ துணி நூல் துறைக்குத் வழங்கவுள்ள உள்ளறை வேலைப்பாடுகள் மற்றும் மரக்கலன்கள் – ரூ.1.31 கோடி

❖ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துறைக்குத் வழங்கவுள்ள எஃகு அறைகலன்கள் – ரூ.1.15 கோடி

❖ இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறைக்குத் வழங்கவுள்ள எஃகு மற்றும் மரக்கலன்கள் – ரூ.0.85 கோடி

## 4.4 புதுப்பிக்கப்பெற்ற தொழிற்கூடங்கள்

2021–22ஆம் ஆண்டில், டான்சி ஓமலூர் மற்றும் இராணிப்பேட்டையில் உள்ள மூடப்பட்ட இரண்டு

தொழிற்கூடங்கள் மீண்டும் புதுப்பித்து உற்பத்தியை தொடங்கியுள்ளன.

## 4.5 2021–22ஆம் ஆண்டு டான்சி மற்றும் டாபப் நிறுவனத்தின் செயல்பாடுகள்

2021–22ஆம் நிதியாண்டில் பெறப்பட்ட மொத்த ஆணைகள் மதிப்பு சுமார் ரூ.110 கோடி.

அ. 2021–22ஆம் ஆண்டு டான்சியின் செயல்பாடுகள்:

| விவரம் | ரூபாய் கோடியில் (தணிக்கைக்கு முன்) |
|---|---|
| உற்பத்தி | 60.33 |
| விற்பனை | 43.75 |
| நிகர ஆதாயம் வரிக்குப் பின் | 7.75 |
| செயல்முறை ஆதாயம் | 1.92 |

கடந்த 2014–15ஆம் ஆண்டிற்குப் பிறகு 2021–22ஆம் நிதியாண்டில் டான்சி செயல்முறை ஆதாயத்தை எட்டியுள்ளது.

ஆ. 2021–22ஆம் ஆண்டு டாபப் நிறுவனத்தின் செயல்பாடுகள்:

| விவரம் | ரூபாய் கோடியில் (தணிக்கைக்கு முன்) |
|---|---|
| உற்பத்தி | 4.46 |
| விற்பனை | 4.46 |
| நிகர ஆதாயம் வரிக்குப் பின் | 0.75 |
| செயல்முறை ஆதாயம் | 0.95 |

## 4.6 தமிழ்நாடு வண்ணம் மற்றும் சார்பு பொருட்கள் நிறுவனம் (டாபப்) டான்சியுடன் இணைப்பு

டாபப் நிறுவனம் அரசு ஆணை (நிலை) எண்.53, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (இ) துறை, நாள் 22.07.2020இன் படி டான்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# 5. தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII–TN)

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) இலாபநோக்கமில்லா சங்கமாக தமிழக அரசால் 2001இல் நிறுவப்பட்டு மாநிலத்தில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்கச் செயல்பாடுகளில் ஈடுபட்டுவருகிறது. இந்நிறுவனம் இதுவரை 4.30 இலட்சம் தொழில்முனைவோருக்கு பயிற்சி அளித்துள்ளது. இதில் மாணவர்கள், தொழிலில் ஈடுபட்டுள்ளோர், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் புத்தொழில் முனைவோர் பயன்பெற்றுள்ளனர்.

இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் பயிற்சி அளித்தல், மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்கங்களுடன் கூட்டாண்மை, உயர்தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைப்பு, புத்தாக்க மேம்பாடு மற்றும் தொழில் வழிகாட்டு சேவை போன்ற முக்கிய செயல்களில் ஈடுபடுகிறது.

## 5.1 நிர்வாகம் மற்றும் முக்கிய செயல்பாடுகள்

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பல்வேறு அரசு துறை அலுவலர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளை கொண்ட ஆளுகைக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டிற்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள், புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள், புத்தாக்கம் மற்றும் தொழில் வளர்காப்பகங்கள் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பம் ஆகிய நான்கு பிரிவுகளாக செயல்படுகிறது. இவைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 5.1.1 தொழில்முனைவோர் ஊக்குவிப்பு

#### (i) தொழில்முனைவோர் மேம்பாடுத் திட்டங்கள்

தொழில் புரிபவர்களின் பல்வேறு நிலைகளுக்கு ஏற்ற பயிற்சித் தேவையை கருத்தில் கொண்டு, புத்தாக்கம் சார்ந்த மற்றும் பிற தொழில்முனைவோருக்கு பல்வேறு வகையான பயிற்சித் திட்டங்கள் மற்றும் சேவைகளை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வழங்கிவருகிறது.

2021–22ஆம் ஆண்டில், மொத்தம் 18,383 ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் ஏற்கனவே தொழில் புரிந்து வருபவர்கள், கீழ்க்கண்டவாறு நான்கு கட்டங்களாக நடைபெற்ற பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மூலம் பயனடைந்தனர்.

அ) **முதல் கட்டம் (கருத்துரு நிலை)** – இக்கட்டத்தில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி, பங்கேற்பாளர்களுக்கு தொழிலை எவ்வாறு

தொடங்குவது, தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்துவது, சந்தை வாய்ப்புகள் மற்றும் பல்வேறு அரசுத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. 2021-22ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதும் 149 இடங்களில் நடத்தப்பட்ட தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்களில் 12,325 நபர்கள் பங்குபெற்றனர்.

ஆ) **இரண்டாம் கட்டம் (தொழில் திட்டமிடல் நிலை)**-இக்கட்டத்தில் தொழில் துவங்க விரும்பும் ஆர்வலர்களுக்கு தொழில் வணிக மாதிரி வடிவம் மற்றும் திட்ட தயாரிப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் வணிக மாதிரியை உருவாக்குவது மற்றும் வணிகத் திட்டங்களை சரி செய்வது குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசாங்க திட்டங்களின் கீழ் பல்வேறு தொழிற்கடன்களுக்கான

விண்ணப்பங்களை தாக்கல் செய்வதற்கான உதவிகள் வழங்கப்படுகிறது. 2021–22ஆம் ஆண்டில், நடைபெற்ற 34 தொழில் மாதிரி மற்றும் தொழில் திட்டம் தயாரிப்பதற்கான பயிற்சியில் 1,599 நபர்கள் கலந்து கொண்டனர்.

இ) **மூன்றாம் கட்டம் (தொழில் தொடங்கும் நிலை)–** இக்கட்டத்தில் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) பயனாளிகள் மற்றும் பொதுவான தொழில்முனைவோருக்கு தொழில் மேம்பாடு பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் தொழிலை எவ்வாறு தொடங்குவது, சந்தை நிலையை புரிந்து கொள்ளுதல், சட்டரீதியான வணிகத் தேவைகள், செயல்முறை மேலாண்மை திட்டங்கள்

உட்பட்ட பாடத்திட்டங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

2021–22ஆம் ஆண்டில். 490 தொழில்முனைவோருக்கு 4 நாட்கள் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும், 43 தொழில்முனைவோருக்கு 15 நாட்கள் தொழில் மேம்பாட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து புதிய தொழில்முனைவோருக்கான தொழில் மேம்பாடு திட்டம் (NEEDS), வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி திட்டம் (UYEGP) மற்றும் புத்தாக்க பற்றுச்சீட்டுத் திட்டம் (IVP) ஆகிய திட்டங்களுக்கான தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி (EDP), பங்கேற்பாளர்கள் நேரடியாக கலந்து கொள்ளும் நிலையினை தவிர்க்கும் வகையில் இணைய வழி பயிற்சியாக மாற்றப்பட்டது.

ஈ) **நான்காம் கட்டம் (ஏற்கனவே தொழில்புரிவோருக்கானது)** – இக்கட்டத்தில் தொழில்முனைவோருக்கு, அன்றாட நடவடிக்கைகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையான சமகால தலைப்புகளின் கீழ் தொழில்முனைவோருக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. தலைப்புகளை பொறுத்து இப்பயிற்சிகளுக்கான கால அளவு அரை நாள் முதல் மூன்று நாட்கள் வரை மாறுபடும். 2021–22ஆம் ஆண்டில் நடைபெற்ற 241 பயிற்சிகளில் கலந்து கொண்ட 4,007 நபர்களுக்கு கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன:

- நிதி மேலாண்மை
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் யுக்திகள்

- ❖ உற்பத்தி மற்றும் மனிதவள மேலாண்மை
- ❖ ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடைமுறைகள் மற்றும் ஆவணப்படுத்துதல் (அடிப்படை மற்றும் உயர்நிலை)
- ❖ நிதி திரட்டல் மற்றும் துணிகர மூலதனம்
- ❖ எளிமையான உற்பத்தி (Lean Manufacturing)
- ❖ சரக்குகள் மற்றும் சேவை வரி (GST), மின் வழி ரசீது (E–Way bill) மற்றும் வருமான வரி தாக்கல்
- ❖ மாற்று எரிசக்திக்கான விழிப்புணர்வு முகாம்

2021–22ஆம் நிதியாண்டில், தொழில்முனைவோர் மேம்பாடு திட்டங்களுக்காக

இந்நிறுவனம் ரூ.58.12 இலட்சத்தினை வழங்கியுள்ளது.

**(ii) குழுமத்தொழில் மேம்பாட்டுத் திட்டம்**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் நிலைத்த மற்றும் சீரான வளர்ச்சியில் குழுமத்தொழில் அமைப்பது முக்கிய பங்காற்றுகிறது. புதிய தொழில் குழுமங்களை கண்டறிதல், குழுமங்களுக்கான விழிப்புணர்வு முகாம், கருத்துப் பட்டறைகள், செயல்பாட்டில் உள்ள குழுமங்களுக்கு நடப்பு தலைப்புகளில் தேவையின் அடிப்படையில் கருத்துப் பட்டறைகள், குழுமங்களுக்கு இடையிலான களப்பயணங்கள் போன்ற பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளை இந்நிறுவனம் தொழில் மற்றும் வணிகத்துறை இயக்ககத்துடன் இணைந்து மேற்கொள்கிறது.

2021–22ஆம் ஆண்டில், வாழ்வாதார குழுமத்தொழில் வாய்ப்புகளை கண்டறிதல் மற்றும்

ஆலோசனை வழங்குவதற்கான 4 நிகழ்ச்சிகள் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டு, அதில் 317 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் பங்கேற்றனர். பழங்குடி சமூகத்தினர் உட்பட புதிய மற்றும் ஏற்கனவே உள்ள தொழில்முனைவோர் பயன் பெறும் வகையில் 6 குழும விழிப்புணர்வு முகாம் மற்றும் 2 களப்பயணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இது தவிர, 6 குழுமங்களுக்கு பிரத்தியேக நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

2021-22ஆம் நிதியாண்டில், குழுமத்தொழில் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இந்நிறுவனத்தின் மூலம் ரூ.2.08 லட்சம் வழங்கப்பட்டது.

**(iii) தொழில் வழிகாட்டுதல் திட்டம்**

புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள தொழில்முனைவோரின் தொழில் சார்ந்த இலக்குகளை அடைவதற்கான வழிகாட்டுதலை வழங்க சிறந்த

தொழில்முனைவோர், தொழில் முறை வழிகாட்டிகள், களநிபுணர்கள், கல்வியாளர்கள் போன்றவர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். 2021–22ஆம் ஆண்டில், வணிக வழிகாட்டுதல் சேவைத் திட்டத்தின்கீழ், 2,930 புதிய மற்றும் ஏற்கனவே உள்ள தொழில்முனைவோருக்கு வழிகாட்டுதல் சேவை வழங்கப்பட்டது. 195 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன தொழில்முனைவோர், பிணைப்புகள் (Networking) மூலம் பயன் பெற்றனர்.

### 5.1.2 தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மூலம் செயல்படும் திட்டங்கள்

#### அ) பெருந்திரள் தகவல் பரவலாக்கும் திட்டம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தொலைக்காட்சி நிகழ்ச்சியாக 'நிமிர்ந்துநில்' என்ற தலைப்பில் பொதிகை தொலைகாட்சியில் பிரதி புதன்கிழமை, காலை 11.30 முதல் 12.00 மணிவரை ஒளிபரப்பப்படுகிறது. இதுவரை ஒளிபரப்பப்பட்ட 31 அத்தியாயங்களில்,

தொழில்முனைவோர் மற்றும் புத்தொழில் புரிவோருக்கான அரசு திட்டங்கள், மாவட்டவாரியான தொழில்வாய்ப்புகள், சாத்தியமுள்ள தொழில்திட்ட அறிக்கைகள் மற்றும் இந்நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட தொழில்முனைவோரின் வெற்றிகதைகள் எடுத்துரைக்கப்பட்டன.

**ஆ) வர்த்தக கண்காட்சிகள் / கண்காட்சிகளில் பங்கேற்றல்**

தேசிய மற்றும் மாநில அளவில் நடைபெற்ற இரண்டு வர்த்தக கண்காட்சிகள் / கண்காட்சிகளில் இந்நிறுவனம் பங்கேற்றது.

**இ) ஆவணப்படுத்துதல்**

- **காட்சி ஆவணப்படுத்துதல்**: பொதுமக்கள் பயன்பெறும் வகையில், UYEGP மற்றும் NEEDS திட்டங்களின் கீழ் இந்நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 22 தொழில்முனைவோரின் வெற்றிக்கதைகள் காட்சி

ஆவணப்படுத்தப்பட்டு, இந்நிறுவனத்தின் இணையதளத்தில் பொதுமக்களின் பார்வைக்காக பதிவேற்றப்பட்டுள்ளது.

- ❖ **மின்னணு செய்தி மடல்**: இந்நிறுவனத்தால், மாதாந்திர மின்னணு செய்தி மடல் வெளியிடப்படுகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பயனுள்ள அம்சங்கள், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தொழிலுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கான அரசு கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கி இது வெளியிடப்படுகிறது.

**ஈ) மின்கற்றல் (E–Learning)**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்குத் தேவையான பல்வேறு தலைப்புகளில் மின்னணு பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட தலைப்புகளில்

அடிப்படை விவரங்களை அளிக்கும் இந்தப்பாடத்திட்டங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இந்நிறுவனத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2021-22ஆம் ஆண்டில், 15 மின்னணு பாடத்திட்டங்கள் இணைய தளத்தில் பதிவேற்றப்பட்டன.

**உ) அழைப்பு மையம் (Call Centre)**

தொழில் ஆர்வலர்கள், ஏற்கெனவே தொழில் செய்து கொண்டிருப்பவர்கள், தொழில் குழுமங்கள் மற்றும் புத்தொழில்முனைவோருக்கு உதவும் வகையில் ஒரு அழைப்பு மையம் இந்நிறுவனத்தில் செயல்படுகிறது. ஒரு முழு நேர அலுவலர் நியமிக்கப்பட்டு மாநிலம் முழுவதிலிருந்தும் பெறப்படும் தொழில் சம்பந்தமான சந்தேகங்கள் மற்றும் கேள்விக்கான விளக்கங்கள் அளிக்கப்படுகிறது.

2021–22ஆம் நிதியாண்டில், தகவல் தொடர்பு தொழில்நுட்ப திட்டங்களுக்காக இந்நிறுவனத்தால் ரூ.15.97 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### 5.1.3 புத்தாக்க மேம்பாடு

மாணவர்களை வேலை தேடுபவராக இல்லாமல் வேலை கொடுப்பவர்களாக மாற்றும் வகையில், கல்வி நிறுவனங்களில் பல்வேறு திட்டங்கள் மூலம் தொழில்முனைவோர் மேம்பாட்டையும், புத்தாக்கத்தையும் ஊக்குவிக்க இந்நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

#### அ) கல்வி நிறுவனங்களில் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமானது கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்காக ஒரு விரிவான திட்டத்தினை செயல்படுத்திவருகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள்

மற்றும் முன்னாள் மாணவர்களை இலக்காக கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், மையம் (Hub) மற்றும் உறுப்பு மாதிரி (Spoke Model) என்ற அணுகுமுறையில் கீழ்க்கண்ட மூன்று முக்கிய நோக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. கல்லூரிகளில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கச் சூழல் மேம்பாடு
2. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில்முனைவோர் திறன்மேம்பாடு
3. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான புத்தாக்க ஊக்குவிப்பு

**கல்லூரிகளில் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கச் சூழல் மேம்பாடு**

இந்நிறுவனம், உறுப்புக் கல்லூரிகளில் மாணவர் தொழில்முனைவோர் மையங்களை (E–Cells) உருவாக்கி, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பிரத்தியேக தொழில்முனைவோர் திட்டங்களை

வழங்குகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக, கீழ்க்கண்ட கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. வசதியுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள், 'மையங்களாக' அங்கீகரிக்கப்பட்டு, ஒவ்வொரு மையமும் 30 முதல் 40 'உறுப்பு' கல்லூரிகளை ஒருங்கிணைக்கின்றன. இதுவரை இம்மாநிலத்தில் 25 மையங்கள் அடையாளம் காணப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. மையம் (Hub) மற்றும் உறுப்பு கல்லூரிகளின் (Spoke Colleges) விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

| **வ. எண்** | **மையக் கல்லூரிகளின் பெயர்** | **உறுப்பு கல்லூரிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | CED – அண்ணா பல்கலைக்கழகம், சென்னை | 54 |
| 2 | மெட்ராஸ் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை | 60 |
| 3 | அண்ணா பல்கலைக்கழகம் உறுப்பு பொறியியல் கல்லூரி, விழுப்புரம் | 48 |
| 4 | சென்னை பல்கலைக்கழகம், சென்னை | 49 |
| 5 | சோனா தொழில்நுட்ப கல்லூரி, சேலம் | 33 |
| 6 | பெரியார் பல்கலைக்கழகம்,சேலம் | 113 |
| 7 | அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகம், கோயம்புத்தூர் | 65 |

| | | |
|---|---|---|
| 8 | பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | 133 |
| 9 | சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகம், ,தஞ்சாவூர் | 35 |
| 10 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | 52 |
| 11 | தியாகராசர் பொறியியல் கல்லூரி, மதுரை | 30 |
| 12 | மதுரை காமராஜர் பல்கலைழகம், மதுரை | 36 |
| 13 | அண்ணா பல்கலைகழக மண்டல வளாகம், திருநெல்வேலி | 68 |
| 14 | அண்ணா பல்கலைக்கழகம் உறுப்பு பொறியியல் கல்லூரி, நாகர்கோவில் | 52 |
| 15 | அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம் | 60 |
| 16 | அன்னை தெரசா பெண்கள் பல்கலைக்கழகம், கொடைக்கானல் | 22 |
| 17 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழம், திருநெல்வேலி | 65 |
| 18 | அண்ணா பல்கலைக்கழகம் உறுப்பு பொறியியல் கல்லூரி, ஆரணி | 35 |
| 19 | அண்ணா பல்கலைகழகம் (பாரதிதாசன் தொழில் நுட்ப கல்லூரி வளாகம்), திருச்சி | 45 |
| 20 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி | 35 |
| 21 | மையப் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை | 90 |
| 22 | அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர் | 92 |
| 23 | அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 101 |
| 24 | த.பெ.ஈ.வே.ரா. அரசு பாலிடெக்னிக் கல்லூரி, வேலூர் | 69 |
| 25 | அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, தூத்துக்குடி | 103 |
| | **மொத்தம்** | **1,545** |

மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் விதமாக மாணவர் தொழில்முனைவோர் மையங்களை (E-Cells) உறுப்பு கல்லூரிகளில் ஏற்படுத்திட ஊக்குவிக்கப்படுகிறது. இதுவரையில் உள்ள 1,545 கல்லூரிகளில் 825 கல்லூரிகளில் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இம்மையங்களை 30 ஆக அதிகரிக்கவும், அனைத்து உறுப்பு கல்லூரிகளிலும் தொழில்முனைவோர் மையங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் தொழில்முனைவோர் திறன்மேம்பாடு**

தொழில்முனைவோர் விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள், தொழில்முனைவோர் மேம்பாடு குறித்த சான்றிதழ் படிப்புகள், தொழில்திட்ட அறிக்கை மற்றும் தொழில் வணிக மாதிரி வடிவம் தயாரித்தல் குறித்த கருத்துப்பட்டறைகள் மற்றும் திறன் மேம்பாட்டுப்

பயிற்சிகள் ஆகியன விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2021–22ஆம் ஆண்டில் பின்வரும் செயல்பாடுகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

- 550 தொழில்முனைவோர் மேம்பாடு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி இணைய வழியாக E–Cell உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இதில் 1.04 லட்சம் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
- உயர்நிலை நிர்வாகிகளுக்கான கூட்டம், ஐந்து பல்கலைகழகங்கள் மற்றும் ஐந்து மண்டல பல்நோக்கு தொழில்நுட்ப கல்லூரிகளில் நடைபெற்றது. இவற்றில் 767 கல்லூரிகள் பங்கேற்றன.
- 1,513 விரிவுரையாளர்கள் பயன் பெறும்வகையில், 28 விரிவுரையாளர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி (FDP) நடத்தப்பட்டது.

**விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான புத்தாக்க ஊக்குவிப்பு**

கல்வி நிறுவனங்களில் புத்தாக்கச் சூழலை உருவாக்கும் வகையில், அறிவுசார் சொத்துரிமை மற்றும் தொழில்முனைதல் கருத்தரங்குகள், சிந்தனை வடிவமைப்புக் கருத்தரங்குகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைந்த முயற்சிகள், புத்தாக்கச் சவால்கள் போன்ற முயற்சிகளை சமீபகாலங்களில் இந்நிறுவனம் மேற்கொள்கிறது. 2021-22ஆம் ஆண்டில், பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:

- ❖ இந்திய அரசின் அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தின் ஆதரவுடன் ஆறு அறிவுசார் சொத்துரிமை மற்றும் தொழில்முனைதல் பயிற்சி 625 மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பட்டது.
- ❖ தமிழ்நாடு மாணவர் புத்தாக்க விருதுக்காக உறுப்பு கல்லூரி மாணவர்களிடமிருந்து

பெறப்பட்ட 7,568 புத்தாக்க சிந்தனைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, புத்தாக்க சிந்தனை உருவாக்க முகாம்கள் (Ideation Camp), துவக்க முகாம்கள் (Boot Camp) மற்றும் இறுதிப் போட்டிகள் (Final Pitch) நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்படும் 25 அணிகளுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் ரூ.25 இலட்சம் வழங்கப்படும்.

இத்திட்டங்களுக்காக 2021-22ஆம் நிதியாண்டில் ரூ.74.61 இலட்சம் இந்நிறுவனத்தால் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 5.1.4 தமிழ்நாடு உற்பத்தி தொழில் வளர் காப்பகங்கள் உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டம் (TNMBIIDP)

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் 'தமிழ்நாடு உற்பத்தி தொழில் வளர் காப்பகங்கள் உட்கட்டமைப்பு திட்டத்தின்' கீழ் 9 வளர் காப்பகங்கள்

நிறுவப்பட்டுள்ளன. இவ்வளர் காப்பகங்கள் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் காடுகள், கால்நடை, மீன்வளம், உணவு மற்றும் ஊட்டச்சத்து, மேம்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் மருந்தியல் போன்ற பல்வேறு துறைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செயல்படுகின்ற 9 வளர் காப்பகங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | தொழில் வளர் காப்பகத்தின் பெயர் | துறை | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் வேளாண்காடுகள் தொழில் வளர்காப்பக மையம், மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | வேளாண் காடுகள் | 2.42 |
| 2 | EDII-கிள்ளிக்குளம் வேளாண் தொழில் வளர்காப்பக மையம், கிள்ளிக்குளம், தூத்துக்குடி மாவட்டம் | வேளாண்மை | 2.13 |
| 3 | EDII-பெரியகுளம் தோட்டக்கலை தொழில் வளர்காப்பக மையம், பெரியகுளம், தேனி மாவட்டம் | தோட்டக்கலை | 2.15 |

| | | | |
|---|---|---|---|
| 4 | EDII-திருச்சிராப்பள்ளி வேளாண் தொழில் வளர்காப்பக மையம், திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | வேளாண்மை | 2.39 |
| 5 | அண்ணாமலை புத்தாக்க மற்றும் தொழில் வளர்காப்பக ஆராய்ச்சி அறக்கட்டளை, சிதம்பரம், கடலூர் மாவட்டம் | மேம்படுத்தப்பட்ட உற்பத்தி | 2.34 |
| 6 | பெரியார் பல்கலைக்கழக தொழில் வளர்காப்பக கூட்டமைப்பு, சேலம், சேலம் மாவட்டம் | உணவு மற்றும் ஊட்டச்சத்து | 1.00 |
| 7 | EDII-கடல்சார் உணவுப் பொருட்கள் தொழில் வளர்காப்பக மையம், தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் | மீன்வளம் | 2.50 |
| 8 | கால்நடை தொழில் வளர்காப்பக அமைப்பு TANUVAS, சென்னை, சென்னை மாவட்டம் | கால்நடை | 2.35 |
| 9 | EDII–அண்ணா தொழில் வளர்காப்பக மற்றும் ஆராய்ச்சி அமைப்பு, திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | மருந்தியல் | 2.50 |
| **மொத்தம்** | | | **19.78** |

இந்த தொழில் வளர்காப்பகங்கள் மூலம் கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

- ❖ தொழில் செய்ய இட வசதி
- ❖ திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் கருத்தரங்குகள்
- ❖ விழிப்புணர்வு முகாம்கள்
- ❖ தொழில்முனைவோர் மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு அரசுத் திட்டங்கள் (புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம், TANSEED, இதர), கடன், ஏஞ்சல் மற்றும் துணிகர மூலதன நிதி போன்றவைகள் மூலம் ஆதார நிதி பெற வழிகாட்டுதல்
- ❖ புத்தொழில் நிறுவனங்கள் அறிவுசார் சொத்துரிமை பெற உதவுதல்
- ❖ நிறுவனம் பதிவு செய்தல், சரக்கு மற்றும் சேவைவரி தாக்கல் செய்தல் போன்றவற்றிற்கு தேவையான ஆலோசனை வழங்குதல்
- ❖ பிணைப்புகள் ஏற்படுத்துதல்

2021–22ஆம் ஆண்டில் இத்தொழில் வளர்காப்பகங்களில் 152 தொழில்முனைவோர்கள் பதிவு செய்துள்ளனர். இக்காப்பகங்கள் சுயசார்பு அடையும் வகையில் இவ்வாண்டு ரூ.77.78 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2021–22ஆம் நிதியாண்டில், இத்தொழில் வளர்காப்பகங்கள் உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டங்களுக்கு, EDII–TN மூலம் ரூ.2.53 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 5.2 புத்தாக்கப் பற்றுச் சீட்டுத் திட்டம் (IVP)

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களின் புத்தாக்கத்திற்கு உதவ கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அவர்களின் அறிவுசார் பங்குதாரர்களாக (Knowledge Partner) செயல்படும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில் தேவைகளுக்கான புதிய கண்டுபிடிப்புகளையும், புதிய பொருட்களையும் அறிவுசார் பங்குதாரர் (Knowledge Partner) மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்குவதற்கு இரண்டு விதமான பற்றுச்சீட்டுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது, அவை பற்றுச்சீட்டு 'A' மற்றும் பற்றுச்சீட்டு 'B' ஆகும்.

பற்றுச்சீட்டு 'A' இன் கீழ் புதிய பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கு முன் அதற்கான சந்தைத் தேவை, அவற்றின் உருவாக்கத்திற்கான ஆய்வு, திட்ட ஆய்விற்கான செலவினம், வடிவமைப்பு ஆய்வுகள் மற்றும் ஆரம்பக்கட்ட ஆய்வு போன்ற பணிகளுக்காக திட்ட செலவினத்தில் 80 சதவீதம் அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும். பற்றுச்சீட்டு 'B' யின் கீழ் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கும், புதிய வடிவமைப்பு மாதிரிகளை செய்வதற்கும், பொருள் சோதனை ஓட்டம், தர நிர்ணய

சோதனை மதிப்பீடு மற்றும் சான்றிதழ் போன்ற செயல்பாடுகளுக்கு மொத்த செலவினத்தில் 50 சதவீதம் அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் விண்ணப்பிக்க, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் சேவைக்காக தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக இருக்க வேண்டும். கருத்துருக்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஆண்டு முழுவதும் இணையதளம் மூலமாக பெறப்படுகின்றன,

இத்திட்டத்தின் மூலம் இதுவரை விவசாயம், மருத்துவம், உற்பத்தி, உணவு தொழில்நுட்பம் போன்ற துறைகளிலிருந்து 189 கண்டுபிடிப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மொத்தமாக ரூ.5.02 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

2021-22ஆம் நிதியாண்டில், 84 கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.2.29 கோடி வழங்கப்பட்டுள்ளது.

# 6. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (எம்–டிப்)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு (எம்–டிப்), குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வர்த்தகம், முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்தும் நோக்கத்தில், ஒரு தன்னாட்சி அமைப்பாக பதிவு செய்யப்பட்டு, செப்டம்பர் 2019இல் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை, வளர்ச்சியுறச் செய்யும் வகையில் எம்–டிப், ஒரு ஒற்றை தொடர்பு மையமாக செயல்பட்டு வருகிறது, இந்நிறுவனங்கள், திறன் வாய்ந்த பொருளாதார முன்னேற்றங்களை அடைவதற்கு அடித்தளமாக செயல்பட்டு, அவற்றை சர்வதேச அரங்கில் வெற்றி பெறச் செய்வதே, எம்–டிப் அமைப்பின் ஐந்தாண்டு தொலைநோக்கு திட்டமாகும்.

## 6.1 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான நிதி வசதியாக்கல்

### 6.1.1 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான நிதி தேவைகளை எளிதாக பெற உதவி செய்தல்.

எளிதாக நிதித் தேவைகளை பெறுவது என்பது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது. இதை எதிர்கொள்ளும் வகையில் எம்–டிப் பின்வரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது:

**அ) தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கான உத்தரவாதத்தினை வழங்கும் வகையில், 'தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம்' (TNGCS) எனப்படும் புதிய, மாநில அளவிலான திட்டத்தை செயல்படுத்தும் விதமாக, கடந்த 16.03.2022 அன்று தமிழ்நாடு அரசு மற்றும் குறு

மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான 'கடன் உத்தரவாத நிதியத்திற்கும்' (CGTMSE) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, கடன் வழங்குவதற்காக, ரூ.100 கோடி கார்ப்பஸ் நிதி, மேற்குறிப்பிட்ட தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன கடன்களுக்கான வங்கிகளுக்கு வழங்கப்படும் உத்தரவாதத்தினை, ரூ.40 இலட்சம் வரையிலான கடன்களுக்கு, தற்போதைய கடன் உத்தரவாதமான 75 சதவீதத்தில் இருந்து 90 சதவீதமாகவும், மற்றும் ரூ.40 இலட்சம் முதல் ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கு, தற்போதைய 75 சதவீதத்தில் இருந்து 80 சதவீதமாகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## ஆ) ‘TReDS’ தளத்தில் பொதுத்துறை நிறுவனங்களை இணைத்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று தங்கள் விற்பனைக்கான காலதாமதமாக பெறப்படும் பணப்பரிமாற்றங்கள் ஆகும். இந்நிறுவனங்கள் 'TReDS' தளத்தில் பதிவு செய்வதன் மூலம், அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு, தங்களது பொருட்களை விற்பனை செய்து வருவாய் ஈட்டிடும் வகையில் துரிதமான "பில் டிஸ்கவுண்டிங்" முறையின் மூலம், அவற்றிற்கான விற்பனைத் தொகையினை விரைவில் பெற முடியும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதி தேவைகளை பூர்த்தி செய்வதுடன், காலதாமதமாக பெறப்படும், விற்பனைக்கான பணப்பரிமாற்றங்களில் ஏற்படும் சிக்கல்களை தீர்ப்பதே TReDS தளத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த முறையானது மாநிலத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்

நிறுவனங்களின் நடைமுறை மூலதன தேவைகளை எளிதாக பெறவும், நல்ல வருவாயுடன் கூடிய பணப்புழக்கத்தினை உருவாக்கவும் வழிவகுக்கிறது. இதன் தொடர்ச்சியாக, தனியார் நிறுவனங்களை, TReDS தளத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**இ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தரவு சார்ந்த கடன் மதிப்பு குறியீடு**

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நிகழ்நிலை தரவுத்தளங்களில் இருந்து, (Electronic Database) மின்னணு முறையில் ஏற்கனவே கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களையும், கடன் மதிப்பு குறியீடு (Credit Score) செய்யும்பணியை, எம்–டிப் மேற்கொண்டுள்ளது. இதற்கான தகவல்கள் மற்றும் தரவுகள், உடனடியான மற்றும் விரைவு ''பயன்பாட்டு நிரல் இடைமுகங்கள்'' (Application

Programme Interfaces) மூலம் சேகரிக்கப்படும். எம்–டிப் அமைப்பின் கடன் மதிப்புக் குறியீடானது, இந்நிறுவனங்கள் TNCGS திட்டத்தின் கீழ், கடன் பெற தகுதியுடையவையா? என்பதை உறுதி செய்வதற்கும், அவை வங்கிக் கடன்களை சுலபமான வழிகளில் பெற்று பயனடைவதற்கும் பெருமளவில் உதவும்.

**ஈ) தகவல் தரவு தளம் உருவாக்குதல்**

எம்–டிப், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் பற்றிய முக்கிய தகவல்கள் அடங்கிய தரவுத் தளத்தை (டேட்டா பேஸ்) உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனங்கள், உத்யம் (Udyam) பதிவுத் தளத்தில் பதிவு செய்வதை உறுதி செய்யவும், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையினை தற்போதைய எண்ணிக்கையான 7.5 இலட்சத்தில் இருந்து குறைந்தபட்சம் 20 இலட்சமாக உயர்த்தவும், வேண்டிய

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, மின்சாரத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை, பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் உள்ளிட்ட ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் கீழ் இயங்கும் துறைகளின் தகவல் தரவுத் தளங்களின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தகவல்களை இணைய வழியில் ஒன்றிணைக்க முயற்சிப்பது இதுவே முதல் முறையாகும்.

இதன் மூலம் பெறப்படும் தகவல்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழிற் கொள்கையை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படும். குழுமங்கள் மற்றும் குழுமங்களின் தேவைகளைத் தீர்மானிக்கும் போதும், துறை மற்றும் இருப்பிடம் சார்ந்த புள்ளி விபரங்களை வெளியிடும்போதும், இத்தகவல்கள் பயன்படுத்தப்படும். மிக முக்கியமாக, இத்தகவல் தரவுத்தளம், எதிர்நோக்கப்பட்ட, நிதி வசதியாக்கலின்

தேவைகளுக்கு வழிகாட்டஉதவும். மேலும், இது நிதி வசதியாக்கல்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் உத்திகளால் பெறப்படும் பலன்களை, ஆய்வு செய்து தேவையான புதிய உத்திகளை வடிவமைக்கவும் உதவுகிறது.

### 6.1.2 உட்கட்டமைப்பினை வலுப்படுத்துதல்

எம்–டிப், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான உட்கட்டமைப்பை (Infrastructure) வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது, இதனால், புதிய தொழில்களை பெருமளவில் உருவாக்கமுடியும். தற்போதுள்ள இந்நிறுவனங்கள் இந்த உட்கட்டமைப்பை, தங்களது வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

### அ) வேளாண்–தொழில் பெருவழித்தடம்

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஐந்து

மாவட்டங்களை உள்ளடக்கிய வேளாண்–தொழில் பெருவழித்தடத்தினை (Agro–Industrial Corridor) அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் இம்மாவட்டங்களில் புதிய வேளாண் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்கள் உருவாவதை ஊக்குவிப்பதற்கும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு (Farmer Producer Organization) உதவுவதற்கு, ஏற்ற வகையிலும், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல், அவற்றிற்குரிய சந்தைகள் மற்றும் துறைமுகங்களுக்கு இடையேயான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கும், அந்நிறுவனங்களுக்கு தேவையான மின்சார இணைப்புகளை எளிதில் பெற்றுத் தருவதற்கும் திட்டமிடப்பட்டு வருகிறது. எம்–டிப், இந்த வழித்தடத்தின் வளர்ச்சிக்கான விரிவான ஒரு திட்ட அறிக்கையினை (DPR) தயாரித்து வருகிறது.

**ஆ) மின் வாகனங்கள் மற்றும் ஸ்மார்ட் மொபிலிட்டி பொதுவசதி மையம்**

எம்–டிப், இந்நிறுவனங்கள் ஸ்மார்ட் மொபிலிட்டி மற்றும் மின் வாகனங்கள் உற்பத்தி செய்வதற்கான பொது வசதி மையத்தினை (E–Vehicles and Smart Mobility Common Facility Centre) அமைப்பது குறித்த விரிவான திட்ட அறிக்கையினை தயாரிப்பதற்காக, தேவையான ஆலோசகர்களை நியமிக்கும் வகையில், அதற்கான பணி ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**6.1.3 தென்னை நார், ஜவ்வரிசி மற்றும் நெகிழி பொருட்கள் உற்பத்தி பிரிவுகளின் வளர்ச்சிக்கான முயற்சிகள்**

பல்வேறு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒவ்வொரு

உற்பத்திப் பிரிவின் தேவைகளானது, தனித்தன்மை வாய்ந்ததாகவும், வேறுபட்ட தன்மை உடையவையாகவும் இருப்பதை உணர முடிகிறது. எம்–டிப், 2021–22ஆம் ஆண்டில் நெகிழி (Plastic), தென்னை நார் மற்றும் ஜவ்வரிசி உற்பத்திப் பிரிவுகளில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன், விரிவான ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

### 6.1.4 திறன் கட்டமைப்பு

**அ) புவிசார் குறியீடுகள் பெற்றுள்ள உற்பத்திப் பொருட்களுக்கான (GI) பேக்கேஜிங் முறையினை இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேக்கேஜிங் நிறுவனம் (IIP) வாயிலாக வழங்குதல்**

திருச்சிராப்பள்ளி–வாழை, கிருஷ்ணகிரி–மாம்பழம், தஞ்சாவூர்–பொம்மை, ஸ்ரீவில்லிபுத்தூர்–பால்கோவா மற்றும் கோவில்பட்டி–கடலை மிட்டாய் ஆகிய ஐந்து புவியியல் குறியீடு (GI) பெற்ற தயாரிப்புகள், புதுமையான வகையில் பேக்கேஜிங்

செய்யும் முறையினை அறிமுகப்படுத்துவதற்காக, எம்–டிப் அமைப்பால் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் முதற்கட்ட முயற்சியாக, மாவட்ட தொழில் மையம், தூத்துக்குடி மூலம், கோவில்பட்டி–கடலை மிட்டாய் தயாரிப்புகளுக்கான பேக்கேஜிங் பயிற்சித் திட்டமானது கோவில்பட்டி நகரில் நடத்தப்பட்டது.

**ஆ) வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் மூலம் ஏற்றுமதி வசதிகள் செய்து தருதல்**

எம்–டிப், வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) மூலம், 26 நாட்கள் கொண்ட ஏற்றுமதி நடைமுறைகள் குறித்த முழுமையான பயிற்சியினை, மாவட்ட தொழில் மையங்களில் பணியாற்றும், 34 உதவிப் பொறியாளர்களுக்கு, ஏற்கனவே வழங்கியுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்ற பொறியாளர்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்ய விழையும் தொழில்முனைவோருக்கு, அந்தந்த

மாவட்டங்களின் 'ஏற்றுமதி வழிகாட்டுவோர்களாக' (Export Facilitators) பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

## 6.2 முதலீட்டு ஊக்குவிப்பு

### அ) முதலீட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

கடந்த 2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு ஏற்றுமதி மாநாட்டின் (Tamil Nadu Export Conclave) போது எம்–டிப் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கிடையே, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இந்நிறுவனங்கள், அவற்றின் தொழில் துவங்கும் முயற்சிகளில் சந்திக்கும் இடையூறுகளை களைந்து அவை விரைவில் உற்பத்தி துவங்குவதற்கான ஆதரவினை எம்–டிப் அளித்து வருகிறது. ஏற்றுமதி வர்த்தகத்தின் அளவினை உயர்த்தும் வகையில், எம்–டிப் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்துடன் இணைந்து, தமிழ்நாட்டின் 29

மாவட்டங்களில், 'மாவட்ட ஏற்றுமதி கூட்டங்களை' ஏற்பாடு செய்து வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

**ஆ) வணிகம் செய்வதை எளிதாக்குதல்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எளிதாக வணிகம் செய்வதை ஊக்குவிப்பதற்கு தேவைப்படும் நடவடிக்கைகளைக் கண்டறிந்து பரிந்துரைக்கும் வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புனரமைப்பிற்கான வல்லுநர் குழுவின் வழிகாட்டுதலுடன் எம்–டிப் ஒரு ஆராய்ச்சியினை மேற்கொண்டது. அந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் வல்லுநர் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை, சம்பந்தப்பட்ட பதின்மூன்று அரசுத்துறைகளுடன் இணைந்து இந்த ஆண்டில் செயல்பாட்டுக்கு கொண்டுவரும்.

## 6.3 வர்த்தகம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் வர்த்தகமானது, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அவை தங்களது பொருட்களை விற்பனை செய்தல், சேவைகளை வழங்குதல் மற்றும் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குதல் ஆகிய நடவடிக்கைகளை உள்ளடக்கியது. இன்றைய தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த சூழலில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான வர்த்தகமானது, நேரடி வர்த்தகம் (Physical mode) மற்றும் நிகழ்நிலை (Online mode) வர்த்தக முறைகளில் நடைபெறுகிறது. இதற்கேற்ற வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வர்த்தக தளங்களில் பதிவு செய்வதன் மூலம் அவற்றின் வர்த்தகத்தினை ஊக்குவிக்கும் முயற்சிகளில், எம்–டிப் தன்னை ஈடுபடுத்த உத்தேசித்துள்ளது.

**அ) உள்நாட்டு வர்த்தகம் : இணையவழி வணிக வாய்ப்புகள்**

இந்திய நாட்டில், ஒரு மிகப்பெரிய நடுத்தர வர்த்தக சந்தையானது அமைந்துள்ளது. அது உலகளாவிய, பெரும் வணிக நிறுவனங்கள், தொடர்ந்து சந்தையில் வர்த்தகம் செய்வதை ஈர்த்து வருகிறது. இந்த நடுத்தர சந்தை வாய்ப்பினை உபயோகித்துக் கொள்ளும் வாய்ப்பானது, தமிழ்நாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தற்போது கிடைத்துள்ளது. புதிய சந்தை வாய்ப்புகள் மற்றும் தற்போதுள்ள சந்தை வாய்ப்புகளை தக்க வைத்துக் கொள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை, நிகழ்நிலை வர்த்தகம் (Online mode) மற்றும் நேரடி (Physical Mode) ஆகிய வர்த்தக வழிகளில் இணைப்பது அவசியம். இந்த இணைப்பினை ஏற்படுத்துவதற்கு, எம்–டிப் உதவ முயற்சி செய்கிறது. எம்–டிப், 'வணிகர்களிடம் இருந்து வணிகர்களுக்கு' (B2B),

மற்றும் 'வணிகர்களிடம் இருந்து நுகர்வோருக்கு' (B2C), நிகழ்நிலை இயங்குதளங்களுடன் இணைந்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளை இணைய வழியில் விற்கவும், சந்தைப்படுத்தவும் உதவுகிறது. அவ்வகையில் Walmart (Flipkart) போன்ற இணைய வழி வர்த்தக நிறுவனங்களுடன் எம்–டிப், இணைந்து செயல்படுகிறது. அடுத்த சில வருடங்களில் இதுபோன்ற பல இணைய தளங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடன், எம்–டிப், இப்பணியை முன்னெடுத்துச் செல்லும்.

## ஆ) உள்நாட்டு வர்த்தகம் : வாங்குவோர் – விற்போர் சந்திப்புகள்

பொதுத்துறை நிறுவனங்கள், அசல் உபகரணங்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட மிகப்பெரும் வணிக நிறுவனங்களின் வாங்குவோர் வரிசைப் பட்டியலில் (Buyers List) இடம்பெறுவதில் இந்நிறுவனங்கள் பெரும்

சிரமங்களை எதிர்கொள்கின்றன. எம்–டிப், வாங்குவோர்–விற்போர் கூட்டங்களை (Buyer – Seller Meet) ஏற்பாடு செய்வதன் மூலம், இந்நிறுவனங்கள், நிலை–III, நிலை–II மற்றும் நிலை–I விற்பனையாளர்களாக, மேற்குறிப்பிட்ட பெரும் வணிக நிறுவனங்களின் வாங்குவோர் வரிசைப்பட்டியலில் தங்களை இடம் பெறச் செய்யும் நல்ல வாய்ப்பினை வழங்கும்.

எம்–டிப், பெருந்தொழில் நிறுவனங்களின் (Large Industries) தேவைகளையும் புரிந்து கொள்வதற்காக "Guidance Tamil Nadu" நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து செயல்படவிருக்கிறது. பெருந்தொழில் நிறுவனங்களின் தேவைகளை புரிந்து கொண்டு, அவற்றின் ஆரம்ப நிலை கட்டமைப்பின் போதும், உற்பத்தி துவங்கியதற்கு பின்பான செயல்பாடுகளின் போதும், தேவைப்படக்கூடிய பொருட்களை விற்பனை செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை அடையாளம் காண வழிகாட்ட

இயலும். இதன்பொருட்டு ISO/Quality Control தரச்சான்றிதழ்கள் பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, எம்–டிப் முன்னுரிமை வழங்கும்.

## இ) வெளிநாட்டு வர்த்தகம் : ஏற்றுமதி

ஏற்றுமதி செய்வது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான முக்கிய வழிகளில் ஒன்றாகும். 'ஒரு மாவட்டம்–ஒரு ஏற்றுமதிப் பொருள்' என்ற, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு குறிப்பிட்ட பொருளை ஏற்றுமதி செய்யும் முறையினை ஊக்குவிப்பதில் அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது. இதனை விரிவாக்கும் நோக்கத்தில் இந்நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவான சந்தை வாய்ப்புகளையும் வளங்களையும் ஏற்படுத்தித் தருவதை, எம்–டிப் மேற்கொள்ளும். மின்னணு விலைப்பட்டியல்களை (e–way bills) பகுப்பாய்வு செய்வதன் மூலம், பொருட்களின் உற்பத்தி மற்றும்

நகர்விடங்களை அடையாளம் கண்டு, தேர்வு செய்யப்பட்ட இணைய தரவுகளின் மூலம் குறிப்பிட்ட உற்பத்தித் தளங்களை (Manufacturing Bases) தமிழ்நாட்டிற்கு கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஈ) வெளிநாட்டு வர்த்தகம்: உலகளாவிய விழிப்புணர்வு மற்றும் கொள்முதல் கூடங்கள்

'Buying Houses' எனப்படும் கொள்முதல் கூடங்கள், பலவகையான விற்பனையாளர்களிடம் இருந்து, பொருட்களை வாங்கி, பலவகையான நுகர்வோர்களுக்கு விற்கும் திறன் வாய்ந்த தொழில் சேவைக் கூடங்கள் ஆகும். ஒரு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனமானது, தானே உற்பத்திசெய்து தானே விற்பனை செய்யும் முறையைக் காட்டிலும் அதிகப்படியான பலன்களை, இந்த கொள்முதல் கூடங்கள் மூலம் விற்பனை செய்வதால் அடைய முடியும். எனவே எம்–டிப் 'கொள்முதல் கூடங்கள்' என்ற விற்பனை முறையை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது. இவ்வாறான

சேவைகளை வழங்குவதன் மூலம், பெரும்பாலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான வாழ்வாதாரத்தினை, நிலையான வகையில் வழங்க முடியும். பெரும்பாலான இந்நிறுவனங்கள், உலகளாவிய அல்லது சர்வதேச அளவிலான, சிறந்த வர்த்தக நடைமுறைகளில் போதிய விழிப்புணர்வு இல்லாமல் உள்ளன. வர்த்தக நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் வர்த்தக சந்திப்புகளை ஏற்பாடு செய்வதின் மூலம், இந்நிறுவனங்கள், சிறந்த மற்றும் பெரிய வர்த்தக நிறுவனங்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்பினை, எம்-டிப் ஏற்படுத்தித் தரும். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசின் திட்டங்கள், அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை சென்றடையும் வகையில் 'மறு வடிமைப்பு' செய்யப்படும்.

**உ) வர்த்தக வசதியாக்கல்: முதலீட்டு அமைப்புகள் மற்றும் வர்த்தக மன்றங்களுடன் கூட்டு முயற்சி**

எம்–டிப், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பான வர்த்தக வசதிகளை வழங்கும் அமைப்பாக செயல்படுகிறது. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், வணிக வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும், எம்–டிப் சர்வதேச வர்த்தக மன்றங்கள் (Global Trade Forums) மற்றும் முதலீட்டு அமைப்புகளுடன் (Investment Bodies) ஒருங்கிணைந்து செயல்படும். ஜெர்மானிய மற்றும் பிரெஞ்சு நாட்டு தூதரகங்களுடன், எம்–டிப் கலந்தாலோசனைகளை நடத்தியுள்ளது. மேலும் விரைவில், பிற வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு வணிக அமைப்புகளுடன் இம்முயற்சியானது விரிவாக்கம் செய்யப்படும். இது தவிர ஜெர்மானிய நிறுவனங்களுடன், 3 வாங்குபவர்–

விற்பனையாளர் கூட்டங்கள், எம்–டிப் அமைப்பால் 2021–22ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன.

**ஊ) பங்களிப்பாளர்களுடன் இணைந்து செயலாற்றுதல்**

எம்–டிப், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சங்கங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், ஒரு முக்கிய தொடர்பு மையமாக (Nodal Point of Contact) செயல்படுகிறது. இச்சங்கங்களுடன் இணைந்து செயல்படுவது என்பது ஒரு தொடர்ச்சியான செயல் முறை ஆகும். இம்முறையானது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொழில் சங்கங்களிலிருந்து, தொழில் பிரிவுகள் ரீதியான முறையீடுகளை (Representations) பெறவும், அவற்றிற்கு முன்னுரிமை வழங்கவும், அவற்றின் தேவைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பெறுவதற்கும் உதவக்கூடிய ஒரு இயைந்த வழிமுறையாகும்.

### எ) உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான முயற்சிகள்

எம்–டிப், இந்நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், ஆலோசனைகள் மற்றும் சேவைகளை வழங்கும் வல்லுநர்கள், தங்களை, பதிவு செய்யும் வகையில் ஒரு தளத்தினை உருவாக்கி வருகிறது. இதன் முன்னோட்டமாக, இத்தளத்தில் சில சர்வதேச வல்லுநர்களை பதிவு செய்து, அவர்கள் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, பின்னர் அவற்றை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 6.4 கோவிட் தொடர்பான ஆதரவு முயற்சிகள்

### அ) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புனரமைப்பிற்கான வல்லுநர் குழு

கோவிட்–19 பெருந்தொற்றால், இந்நிறுவனங்கள் மிகவும் நலிவடைந்தன. மாநிலம்

முழுவதிலும் உள்ள இந்நிறுவனங்கள், தாமதப்படுத்தப்பட்ட பணப்பட்டுவாடா, கொள்முதல் ஆணைகள் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்கள், மற்றும் இவற்றால் இந்நிறுவனங்கள் மூடப்படுதல் ஆகிய பிரச்சினைகளால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தகைய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புணரமைப்பிற்குத் தேவையான, உடனடி மற்றும் இடைக்கால நடவடிக்கைகள், நீண்ட கால நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆராய்ந்து பரிந்துரைக்க, டாக்டர். திரு. என். சுந்தரதேவன் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில், ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவானது தொழிலதிபர்கள், வங்கியாளர்கள், நிதித்துறை வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளை உள்ளடக்கியது. எம்–டிப் அமைப்பு, இக்குழுவிற்கு, இந்நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் புள்ளி விபரங்களை மற்றும் 'செயலக உதவிகளை' வழங்கி அக்குழுவின் ஆராய்ச்சிக்கு, விரிவான வகையில் உதவியது.

இக்குழு தனது முழுமையான பரிந்துரைகள் அடங்கிய ஆய்வறிக்கையினை, 16.03.2022 அன்று தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பித்தது.

**ஆ) கோவிட் கட்டுப்பாடு உதவி மையம்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பாக எம்–டிப், கோவிட் கட்டுப்பாடு உதவி மையம் (Covid Control Helpline Desk) அமைக்கப்பட்டு, அதன் மூலம் கோவிட் பெருந்தொற்று காலத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தடையில்லா செயல்பாடு மற்றும் அவற்றின் மூலப்பொருட்கள், உற்பத்திப் பொருட்களின் சீரான இயக்கத்திற்கு உதவியுள்ளது.

# 7. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (டான்சிம்)

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (டான்சிம்) மார்ச் 2021இல் புத்தொழில்கள் மற்றும் புத்தாக்க முயற்சிகளை பிரத்தியேகமாக கவனம் செலுத்தி ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பிரிவு 8 (Section 8 company) நிறுவனமாக நிறுவப்பட்டது. புத்தாக்கங்களை வளர்ப்பது, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புத்தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய உள்கட்டமைப்பு, அறிவுத்தள மேம்பாடு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் திறமையான மனிதவளத்தைக் கிடைக்கச் செய்தல் போன்ற புதுயுக தொழில்முனைவு முன்னேற்றத்துக்கு தேவையான பணிகளை மேற்கொள்ள இவ்வியக்கம் உறுதிபூண்டுள்ளது. இதன் விளைவாக, புதிதாக வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், விவசாயம், உற்பத்தி, சுகாதாரம், சுற்றுச்சூழல், கல்வி, வாழ்வாதார மேம்பாடு, சமூக

தொழில் நிறுவனங்கள், கட்டுமானம், நகர்ப்புற மேம்பாடு, நிதி, அடித்தள மக்களின் புத்தொழில் மற்றும் புத்தாக்க முயற்சிகள் மற்றும் கிராமப்புற புத்தொழில் மேம்பாடு வரையிலான அனைத்து துறைகளையும் உள்ளடக்கி அதிக அளவிலான தொழில் முனைவோர்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனமானது StartupTN என்ற முத்திரை மூலமாக விளம்பரப்படுத்தப்படுகிறது.

டான்சிம் தமிழ்நாட்டை உலகளாவிய அளவில் புத்தொழில் நிறுவனங்கள் விரும்பி செயல்படக்கூடிய தலைசிறந்த இடங்களில் ஒன்றாக மாற்றும் நீண்ட கால நோக்குடன் செயல்படுகிறது. இதன் அடிப்படையில் பின்வரும் பரந்த நோக்கங்களை கொண்டு இயங்கி வருகிறது:

- மாநிலத்தில் 2025–26க்கு முன் குறைந்தது 10,000 புத்தொழில் நிறுவனங்கள் உருவாக

தேவையான ஊக்கம், வசதிகள் மற்றும் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு வேண்டிய திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சூழமைவை உருவாக்குதல்.

- மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்தையும் உள்ளடக்கும் வகையில் மண்டல மையங்களை நிறுவுவதன் மூலம் அனைத்து தரப்பினருக்குமான தொழில்முனைவோர் கொள்கையை செயல்படுத்துதல்.
- எதிர்கால தொழில் மாதிரிகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை, பழமையான நடைமுறைகளை கடைப்பிடிக்கும் நிறுவனங்களுக்கு அறிமுகம் செய்து அவற்றை காலமாற்றத்துக்கு ஏற்ற வகையில் தகவமைத்துக்கொள்ள உதவுதல்.
- மாணவர் மற்றும் பெற்றோர் மத்தியில் தொழில் முனைவில் ஈடுபட வேண்டும் என்ற "மனநிலை மாற்றத்தை" உருவாக்கும் நோக்கத்துடன்

கல்வித் துறையுடன் தீவிரமாக பணியாற்றி மாணவர்களில் குறைந்தது 2% – 5% பேர் தொழில்முனைவோராக மாற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுதல்.

❖ முதலீட்டாளர்கள், வழிகாட்டிகள் மற்றும் சந்தை இணைப்பாளர்களின் உலகளாவிய வலையமைப்பை உருவாக்கி, மாநிலத்தின் புத்தொழில்களுக்கான சூழமைவை பலப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

❖ திறன் வாய்ந்த திட்டங்கள் மற்றும் ஒத்திசைவான அமைப்புகளுடன் இணைந்த கூட்டணி செயல்பாடுகள் மூலம் தேசிய மற்றும் உலக அளவில் தரவரிசையில் தமிழ்நாட்டை முதலிடத்தில் நிலைநிறுத்துவதற்கு சரியான வியூகத்துடன் பணியாற்றுதல்.

❖ கிராமப்புற, விளிம்புநிலை, ஒடுக்கப்பட்ட மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட பிரிவினரை அரவணைத்து, அனைத்து தரப்பினருக்கும் சமவாய்ப்பு

கிடைக்கக்கூடிய ஒரு சூழமைவை உருவாக்க தொடர்ந்து செயல்படுதல்.

- அபரிதமாக வளர்ந்து அதிக சந்தை மதிப்பீட்டை உருவாக்கக் கூடிய நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் அதே வேளையில், அடித்தட்டு மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தளங்களில் செயல்படும் சமூக தொழில்முனைவு நிறுவனங்களும் நல்ல வளர்ச்சி பெற தேவையான திட்டங்கள் செயல்படுத்தப்படும். பெரும் சந்தை மதிப்பீடு பெறக்கூடிய நிறுவனங்களும் சமூக மேம்பாட்டில் பெரும் தாக்கங்களை செய்யும் நிறுவனங்களும் நல்ல முறையில் செயல்படக்கூடிய ஒரு சூழல் உருவாக்கப்படும்.

## 7.1 தமிழ்நாட்டில் மண்டல வாரியான புத்தொழில் மையங்கள்

மாநிலத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை பகுதிகளில் மண்டல புத்தொழில் மையங்களை நிறுவ டான்சிம் முன்மொழிகிறது. தற்போது, 60% முதல் 70% புத்தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மட்டுமே குவிந்துள்ளன. புத்தொழில் நிறுவனங்களுக்கு ஏதுவான சூழமைவு மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதால், மண்டல புத்தொழில் மையங்கள் மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோட்டில் அமையவிருக்கிறது. அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் தொழில்முனைவு சார்ந்த முக்கிய உள்ளூர் அமைப்புகளின் ஆதரவுடன் இந்த மையங்கள் இயங்கும். இம்மையங்கள் அமைந்துள்ள நகரை சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு இணைப்புப் புள்ளியாக

செயல் பட்டு நிதியுதவி, வழிகாட்டி பணிகள், சந்தைகள் மற்றும் வளர்ச்சிக்கு தேவையான பிற வாய்ப்புகளை அந்த பகுதியை சேர்ந்த புத்தொழில் நிறுவனர்களுக்கு வழங்கும். இந்த முயற்சியானது, டான்சிம் இயக்கத்தின் அனைவருக்குமான ஒருங்கிணைந்த வளர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில் இயங்கும்.

## 7.2 TANSEED – ஆதார நிதி மானியம்

TANSEED என்பது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு முக்கிய மானியத் திட்டமாகும். இது பல்வேறு தொழில் பிரிவுகள் மற்றும் மாவட்டங்களை சார்ந்த தொடக்கநிலை புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10 இலட்சம் ஆதார நிதி வழங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. மேலும், இந்த திட்டம் மிகச்சிறந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு,

அவை வேறு ஒரு நிதி நிறுவனத்தில் முதலீடு பெற்றிருக்கக்கூடிய நிலையில் ரூ.10 இலட்சத்துக்கு மேல் ரூ.50 இலட்சம் வரையிலும் இணை–மானியம் வழங்க அனுமதிக்கிறது.

TANSEED திட்டத்தின் இரண்டாவது பதிப்பு ஆகஸ்ட்–அக்டோபர், 2021இல் ஒரு பெரிய முன்னெடுப்பாக செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 19 தகுதி வாய்ந்த புத்தொழில் நிறுவனங்கள் நடுவர் குழுவினரால் ரூ.1.9 கோடி நிதிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் தவணை அரசால் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூன்றாவது பதிப்பு பிப்ரவரி 25, 2022 அன்று தொடங்கப்பட்டது, மேலும் 30க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் பல்வேறு துறைகள் மற்றும் மாவட்டங்களில் இருந்து பயனடைய உள்ளன.

## 7.3 உலகத்தரம் வாய்ந்த புத்தொழில் வளர்ச்சி விரைவாக்க செயல் திட்டங்கள்

வெவ்வேறு நிலைகளில் உள்ள பல்வேறு துறைகளை சார்ந்த புத்தொழில் நிறுவனங்களை விரைவாக அடுத்த நிலைக்கு வளர்க்க உதவும் வகையில், அந்தந்த துறை சார்ந்த சிறப்பு வளர்ச்சி 'விரைவாக்க மையங்கள்' துணையுடன் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டை சேர்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கான தொழில் வளர்ச்சி விரைவாக்கத் திட்டங்களை நடத்த தேசிய மற்றும் உலகளாவிய நிறுவனங்களை அடையாளம் காண டான்சிம் திட்டமிட்டுள்ளது. ஒரு புத்தொழில் நிறுவனத்தை உருவாக்குவதற்கான நுணுக்கங்களை கற்றுக்கொள்வதற்கும், தங்களை உலக சந்தையில் நிலைநிறுத்திக்கொள்வதற்கும் இந்த பயிற்சி அவர்களுக்கு உதவும். இந்த வளர்ச்சி விரைவாக்க செயல் திட்டங்கள் மூலம் பயன்பெறும் புத்தொழில்களின் வளர்ச்சிக் குறியீடுகள்

அவதானிக்கப்பட்டு தேவையான ஊக்குவிப்புகள் செய்யப்படும்.

## 7.4 தமிழ்நாடு புத்தொழில் சூழமைவு அறிக்கை

மாநிலத்தில் உள்ள புத்தொழில் சூழமைவு தொடர்பான சரியான தரவுகள் கிடைக்காதது முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகும். எந்தவொரு கொள்கை மற்றும் வளர்ச்சிக்கான முடிவை எடுப்பதற்கும் உண்மையான தரவு கிடைக்க வேண்டியது அவசியம். இச்சூழலில், டான்சிம் ஒரு தகுதி வாய்ந்த தரவு ஆராய்ச்சி நிறுவனம் அல்லது தொழில்முறை ஆலோசகர்களை பணிக்கமர்த்தி, ஒரு தெளிவான தரவு அறிக்கையை வெளியிட முன்மொழிகிறது. மேலும் இது ஆண்டுதோறும் முறையாக புதுப்பிக்கப்படும்.

மாநிலத்தில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்கள், மற்றும் அவற்றின் நிலைகள், முதலீடுகள், துறை வாரியான புத்தொழில்கள், தொழில்

காப்பகங்கள், வளர்ச்சி விரைவாக்க மையங்கள், வழிகாட்டிகள், சந்தை இணைப்பாளர்கள், ஏஞ்சல் முதலீட்டாளர்கள், துணிகர மூலதன நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், புத்தொழில் வளர்ச்சிக்கு துணை செய்யும் அரசு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் திட்டங்கள், கல்விக்கூடங்கள், ஆராய்ச்சி மையங்கள், மாவட்ட வாரியான புத்தொழில் தரவுகள் மற்றும் வசதிகள், அறிவு வளங்கள், பல்வேறு துறைகள் மற்றும் மண்டலங்களின் தரவரிசைகள், கொள்கைகள் மற்றும் இன்ன பிற தேவையான சூழமைவு சம்பந்தப்பட்ட தரவு மற்றும் தகவல்கள் போன்ற விவரங்களை சூழமைவு அறிக்கை உள்ளடக்கும்.

## 7.5 நவீன பொறியியல் புனைவகம் (FABLABS) கட்டமைத்தல்

தமிழகத்தில் உள்ள மூன்று அரசு பொறியியல் கல்லூரிகளில், தொழில்நுட்ப கல்வி இயக்குநகரத்தின் மேற்பார்வையில் செயல்படும் விதமாக நவீன பொறியியல் புனைவகங்களை அமைப்பதற்கான

செயல்பாடுகளை டான்சிம் தொடங்கியுள்ளது. திருநெல்வேலி, சேலம், மற்றும் திருச்சி நகரங்களில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் கல்லூரிக்கு ஒன்று வீதம் மூன்று நவீன பொறியியல் புனைவக நிலையங்களை, ரூ.2.2 கோடி மதிப்பில் அமைப்பதற்காக டான்சிம் முன்மொழிந்துள்ளது. இதில் ஒரு பகுதியாக, Proto–Sem என்ற பெயரில் ஒரு மதிப்புறு பயிற்சிப்பிரிவு சேர்க்கப்படும். இதனை கூட்டு நிறுவனங்களுடன் இணைந்து டான்சிம் செயல்படுத்தும். இந்த நவீன பொறியியல் புனைவகங்களை அவை அமைந்திருக்கும் பகுதிகளை சேர்ந்த குறு, சிறு தொழில் நிறுவனங்களும் மற்றும் புத்தாக்க நிறுவனங்களும் பயன்படுத்திக் கொள்ள வசதி செய்யப்படும்.

## 7.6 இருமொழி தொலைபேசி சேவை மையம் அமைத்தல்

புத்தொழில் மற்றும் தொழில்முனைவு குறித்த எவ்வித கேள்விகளுக்கும் தொலைபேசி வழியே

பதிலளிக்கும் விதமாக, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் பதில் அளிக்கும் குழு டான்சிம்–ன் தலைமை அலுவலகத்தில் இயங்கும். Voice Responsive Crew என அழைக்கப்படும் இந்தக் குழுவினர், மாநிலத்தில் எந்தப்பகுதியில் இருந்து சந்தேகங்களை கேட்பினும் அதற்கு பதிலளிக்க வேண்டிய நோக்கத்தில், முறையான முழுமையான தகவல்களை அறிந்து இருக்கும் விதத்தில் பயிற்சியளிக்கப்பட்டு இயக்கப்படுவர். இந்த செயல்பாடானது புத்தொழில் தொடங்க ஆர்வமாக இருப்பவர்கள், தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், வழிகாட்டுநர்கள் என அனைவருக்கும் அவர்களது செயல்பாடுகளை எளிதாக முடிக்கவும், அவர்களுக்கு தேவையான தகவல்களை பெறுவதற்கும் பேருதவியாக இருக்கும். பெரும்பாலும், மாற்றுத்திறனாளிகளை இந்த தொலைபேசி சேவை மையத்தில் பணியமர்த்துவதன் வாயிலாக, ஒரு ஒருங்கிணைந்த புத்தொழில் சூழமைவினை

உருவாக்குவதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக இந்த மையம் இயங்கும்.

## 7.7 StartupTN (புத்தொழில் தமிழ்நாடு) – மாபெரும் ஆண்டு நிகழ்வு

புத்தொழில் தமிழ்நாடு என்ற பெயரில் ஆண்டுதோறும் மாபெரும் நிகழ்வொன்றினை ஒருங்கிணைக்க டான்சிம் முன்மொழிகிறது. அரசு, புத்தொழில் நிறுவனர்கள், புத்தொழில் பணியாளர்கள், முதலீட்டாளர்கள், வழிகாட்டுநர்கள், கல்வியாளர்கள், தொழில்துறை தலைவர்கள், சிந்தனையாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், சங்கங்கள், ஊடகம் மற்றும் பிற புத்தொழில் ஆதரவாளர்கள் அனைவரையும் பங்கு பெறச் செய்யும் விதமாக இந்த நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்வின் முக்கிய அம்சங்கள்:

1. அனைத்து பங்குதாரர்களையும் ஒரு தளத்தில் ஒருங்கிணைப்பது,

2. தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமைவினை காட்சிப்படுத்துதல்,
3. புத்தொழில் சூழமைவின் முக்கிய பங்களிப்பாளர்களை அங்கீகரிப்பது,
4. தொழில்முனைவில் வெற்றி பெற்றவர்களை சிறப்பிப்பது,
5. ஆண்டு முழுவதும் செயல்படுத்திய திட்டங்களை மீள்பார்வை செய்வது,
6. தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான ஒத்திசைவான அமைப்புகளுடன் உறவினை வலுப்படுத்துவது,
7. பொருட்காட்சியின் வாயிலாக சந்தை வாய்ப்பினை அதிகரிப்பது,
8. முதலீட்டாளர்கள் மற்றும் வழிகாட்டுநர்கள் உடன் சந்திப்புகள் நடத்துவது,
9. முதலீட்டு ஈர்ப்பு நிகழ்த்துவது

## 7.8 தொழில் வளர்காப்பகங்களுக்கான மேலாண்மைப் பயிற்சித் திட்டம்

தற்போது மாநிலத்தில், பல்வேறு துறை சார்ந்த சிறப்புப் பிரிவுகளில் தோராயமாக 80 தொழில் காப்பான்கள் செயல்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், துறைசார் வல்லுனர்களின் கூற்று அதிக அளவு நிதி உதவி பெற்றும் தற்போதைய இன்குபேட்டர்களின் செயல்பாடுகள் தரமாக இல்லை என்பதே. இவற்றின் தரத்தினை மேம்படுத்தும் விதமாக, இது குறித்த விரிவான பகுப்பாய்வு செய்யப்பட்டு, இன்குபேஷன் மேலாண்மை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்முறைக்கு வர உள்ளது. இது வெறும் பயிற்சி அளவில் மட்டுமல்லாது உலக அளவில் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொழில் காப்பான்கள் குறித்த தகவல்கள், அவர்களுடன் இணையவழி சந்திப்புகள், நேரடி நிகழ்வுகள் என பலவகையில் மதிப்புக் கூட்டப்பட்டு செயல்படுத்தப்படும்.

## 7.9 புத்தொழில் வழிகாட்டிகள் – புத்தொழில் தொடங்குவோர் இணைப்புத்தளம்

புத்தொழில் நிறுவனத்தை தொடங்குதல் முதல் நிலையான வெற்றியினை பெறுவது வரை, சரியான வழிகாட்டுல் அவசியமாகும். பல்வேறு வணிக செயல்பாடுகள் மற்றும் துறைகளில் ஆழ்ந்த அறிவும், பெரும் அனுபவமும் உடைய பல ஆளுமைகள், வளர்ந்துவரும் முனைப்பான தொழில்முனைவோருக்கு வழிகாட்ட தயாராக உள்ளனர். ஆனால், அவர்களை இணைப்பதற்கான சிறந்த தளம் எதுவும் இல்லை.

புத்தொழில் நிறுவனங்களுக்கு வழிகாட்ட தயாராக உள்ள நிபுணர்கள், வழிகாட்டுதல் தேவைப்படுபவர்கள் ஆகியோரை இணைத்து சிறந்த வழிகாட்டுநர்–பயன்பெறுபவர் உறவினை வலுப்படுத்தும் தளத்தினை உருவாக்க வழிகாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

## 7.10 உலகத் தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்கள் இணைப்புத்தளம்

உலக அளவிலான தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவர்களது முதலீடுகளை சரியான திட்டத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் ஏஞ்சல் முதலீட்டாளர்கள் இணைப்புத்தளம் (Tamil Angels Network) அமைக்கப்படும். டான்சிம் அமைப்பின் கீழ் ஒரு உறவு மேலாண்மைக்குழு அமைக்கப்பட்டு, அக்குழுவால் இந்த செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

## 7.11 கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசைகள் மற்றும் விருதுகள்

கல்லூரிகளில் தொழில்முனைவு பண்பாட்டை வளர்ப்பது டான்சிம்–ன் முக்கிய பணியாக இருக்கும். பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்ப கல்வி

இயக்குனரகம் மற்றும் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII) ஆகியவற்றுடன் இணைந்து இதற்கான பல திட்டங்களை டான்சிம் செயல்படுத்தும். கல்லூரிகள் / பல்கலைக் கழகங்களின் தொழில்முனைவினை ஊக்குவிப்பதற்கான செயல்பாடுகள், அவர்களது வெற்றிகரமான ஆக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தரவரிசை கட்டமைப்பை டான்சிம் உருவாக்கும். இந்த தரவரிசைக்கான வழிமுறைக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல் ஆகியவை துறைசார் வல்லுநர்களின் உதவியோடு செயல்படுத்தப்படும்.

## 7.12 சமூக தொழில்முனைவுகளுக்கான முதலீடு (Social Impact Investing)

சமூகத்தில் நன் மாற்றங்களை உருவாக்கும் விதமாக இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு டான்சிம் ஆதரவாக இருக்கும். குறைந்த வருமானம்

உள்ள சமூகத்தினருக்கு வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கும் விதமாக செயல்படும் புத்தொழில் நிறுவனங்களை மையப்படுத்திய முதலீடாக இது இருக்கும். நலிந்த பிரிவினருக்கான கல்வி, சுகாதாரம், ஆரோக்கியம் ஆகியவை சார்ந்து இயங்கும் புத்தொழில் நிறுவனங்களும் சிறப்பு கவனம் பெறும். தகுதி வாய்ந்த புத்தொழில் நிறுவனங்களை தெரிவு செய்தல், அந்த நிறுவனங்களின் நிலையான வளர்ச்சிக்கு உதவி செய்தல் ஆகிய நீண்ட கால பொறுப்பை முறையாக செய்ய டான்சிம் தன் கூட்டு நிறுவனங்களாக Villgro மற்றும் ESAF ஆகிய நிறுவனங்களை முதல்கட்டமாக தேர்வு செய்துள்ளது.

## 7.13 பெண்கள் வளர்ச்சியை மையப்படுத்திய ஊரக தொழில் முனைவு

தமிழ்நாடு பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் மாநிலம். எனினும், தரவுகளின் அடிப்படையில் ஊரகப்பகுதிகளில் தொழில் முனைவோராக உள்ள பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே

உள்ளது. பெரும்பாலான ஊரகப் பகுதிகளில் புதுமை நிறைந்த தொழில் முனைவு குறித்து அறியும் வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. எனவே, ஊராட்சி அளவில் அரசு நிறுவனங்கள், இலாப நோக்கற்ற தன்னார்வ நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், தொழில் அமைப்புகள் ஆகியவற்றோடு இணைந்து, தொழில் முனைவு குறித்து அறிமுகம், வாய்ப்புகள், திட்டங்கள் என முழுமையான விழிப்புணர்வினை வழங்க டான்சிம் பல திட்டங்களை செயல்படுத்த இருக்கிறது. டான்சிம் கூட்டு நிறுவனங்களில் ஒன்றான ESAF உடன் இணைந்து, இதற்கான முன்மாதிரித் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட இருக்கிறது.

## 7.14 நேரடி பொது கொள்முதல்

2022-23ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் புத்தொழில் நிறுவனங்களின் புதுமையான தயாரிப்புகளை ரூ.50 இலட்சம் வரை

நேரடிகொள்முதல் செய்ய, அரசு வழிவகை செய்துள்ளது. இதன் வாயிலாக புத்தொழில் நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்களில் தங்களது தயாரிப்புகளை சந்தைப்படுத்த வாய்ப்புகள் மேம்படும். டான்சிம், புத்தொழில் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்புகளை மேம்படுத்த ஏதுவாக பல இணைப்பு நிகழ்வுகளை ஒருங்கிணைக்கும்.

## 7.15 பட்டியல் இனம் / பழங்குடி மக்களுக்கான புத்தொழில் நிதி

2022–23ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில், பட்டியல் இனம் / பழங்குடி மக்களால் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அரசு அறிவித்துள்ளது. இந்த நிதியினை முதலீடு செய்வதற்கு தேவையான உறுதியான நெறிப்படுத்திய வழிமுறைகளை உருவாக்கும் முயற்சியில் டான்சிம் ஈடுபட்டுள்ளது. இத்திட்டத்தை டான்சிம் செயல்படுத்தும்.

**தா. மோ. அன்பரசன்**
**அமைச்சர் (குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்)**

## இணைப்பு – 1

## தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தால் பராமரிக்கப்படும் தொழிற்பேட்டைகள்

| எ. வ | மாவட்டம் | எ. வ | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | கிண்டி | அரசு | 1958 | 404.08 |
| | | 2 | அரும்பாக்கம் | சிட்கோ | 1979 | 3.92 |
| | | 3 | வில்லிவாக்கம் | சிட்கோ | 1979 | 2.04 |
| | | 4 | கொடுங்கையூர் | சிட்கோ | 1979 | 7.88 |
| | | 5 | பெருங்குடி | அரசு | 1974 | 112.55 |
| | | 6 | திருவான்மியூர் | அரசு | 1967 | 28.91 |
| | | 7 | அம்பத்தூர் | அரசு | 1963 | 1167.00 |
| 2 | திருவள்ளூர் | 8 | காக்களூர் | அரசு | 1988 | 328.13 |
| | | 9 | திருமழிசை | சிட்கோ | 1988 | 160.85 |
| | | 10 | கும்மிடிபூண்டி | சிட்கோ | 1988 | 25.24 |
| | | 11 | ஆர்.கே.பேட் | சிட்கோ | 1996 | 8.15 |
| | | 12 | விச்சூர் | சிட்கோ | 1994 | 59.16 |
| | | 13 | திருமுல்லைவாயல் (ம.தொ.பூ) | சிட்கோ | 2001 | 246.07 |
| | | 14 | செங்கரை | சிட்கோ | 2017 | 36.25 |
| 3 | செங்கல்–பட்டு | 15 | மறைமலைநகர் | சிட்கோ | 1981 | 39.50 |
| | | 16 | ஆலத்தூர் (பார்மா) | சிட்கோ | 1984 | 150.49 |
| | | 17 | ஆலத்தூர் (பகுதி–2) | சிட்கோ | 2022 | 29.71 |
| | | 18 | தண்டரை | சிட்கோ | 2017 | 44.30 |
| 4 | காஞ்சிபுரம் | 19 | காஞ்சிபுரம் | அரசு | 1968 | 37.95 |
| | | 20 | திருமுடிவாக்கம் (முதன்மை) | சிட்கோ | 1993 | 201.11 |
| | | 21 | திருமுடிவாக்கம் (குறு) | சிட்கோ | 2013 | 5.262 |
| | | 22 | திருமுடிவாக்கம் (ம.தொ.பூ) | சிட்கோ | 2002 | 11.48 |
| | | 23 | திருமுடிவாக்கம் பகுதி–2 | சிட்கோ | 2017 | 22.44 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | ராணிப்பேட்டை | 24 | அரக்கோணம் | அரசு | 1968 | 51.74 |
| | | 25 | ராணிப்பேட்டை | சிட்கோ | 1972 | 113.44 |
| | | 26 | முகுந்தராயபுரம் | சிட்கோ | 1980 | 86.19 |
| | | 27 | வன்னிவேடு | சிட்கோ | 1987 | 16.44 |
| | | 28 | முள்ளுவாடி & நாகலேரி | சிட்கோ | 2020 | 20.00 |
| 6 | திருப்பத்தூர் | 29 | விண்ணமங்கலம் | சிட்கோ | 2009 | 10.49 |
| | | 30 | வாணியம்பாடி | சிட்கோ | 2013 | 7.08 |
| | | 31 | மின்னூர் | சிட்கோ | 2014 | 10.00 |
| 7 | வேலூர் | 32 | காட்பாடி | அரசு | 1968 | 19.48 |
| 8 | திருவண்ணாமலை | 33 | திருவண்ணாமலை | அரசு | 1968 | 15.56 |
| | | 34 | பெரியகோளப்பாடி | சிட்கோ | 2022 | 13.75 |
| 9 | கிருஷ்ணகிரி | 35 | கிருஷ்ணகிரி | அரசு | 1965 | 41.86 |
| | | 36 | ஊத்தங்கரை | சிட்கோ | 1995 | 41.28 |
| | | 37 | ஒசூர் | அரசு | 1974 | 12.34 |
| | | 38 | ஒசூர் (சிப்காட்) | சிட்கோ | 1976 | 95.15 |
| | | 39 | ஒசூர் (புதியது) | சிட்கோ | 1999 | 24.41 |
| | | 40 | பர்கூர் | சிட்கோ | 1995 | 31.64 |
| | | 41 | போலுப்பள்ளி | சிட்கோ | 2009 | 60.96 |
| 10 | தருமபுரி | 42 | தருமபுரி | அரசு | 1965 | 20.28 |
| | | 43 | கடகத்தூர் | சிட்கோ | 2009 | 7.02 |
| | | 44 | பர்வதனஹள்ளி | சிட்கோ | 2014 | 29.89 |
| | | 45 | ஈச்சம்பாடி | சிட்கோ | 2017 | 50.46 |
| 11 | சேலம் | 46 | சேலம் | அரசு | 1967 | 19.55 |
| | | 47 | மேட்டூர் | அரசு | 1967 | 184.38 |
| | | 48 | கருப்பூர் (ம.தொ.பூ) | சிட்கோ | 2004 | 51.24 |
| | | 49 | வீரபாண்டி | சிட்கோ | 1993 | 9.79 |
| | | 50 | கோரணம்பட்டி | சிட்கோ | 2017 | 16.61 |
| | | 51 | சூரமங்களம் | அரசு | 1986 | 27.50 |
| | | 52 | பெரியசீரகப்பாடி | சிட்கோ | 2022 | 18.02 |
| 12 | நாமக்கல் | 53 | நாமக்கல் | சிட்கோ | 1977 | 10.09 |
| | | 54 | திருச்செங்கோடு | சிட்கோ | 1980 | 9.18 |
| | | 55 | வேட்டம்பாடி | சிட்கோ | 2014 | 15.34 |
| | | 56 | இராசம்பாளையம் | சிட்கோ | 2022 | 12.72 |
| 13 | ஈரோடு | 57 | ஈரோடு | அரசு | 1959 | 25.13 |
| | | 58 | நஞ்சைஊத்துக்குளி | சிட்கோ | 1995 | 13.05 |
| | | 59 | பெருந்துறை | சிட்கோ | 2017 | 49.47 |
| 14 | கோயம்புத்தூர் | 60 | குறிச்சி | அரசு | 1972 | 88.43 |
| | | 61 | மலுமிச்சம்பட்டி | சிட்கோ | 1994 | 36.14 |
| | | 62 | காளப்பட்டி | அரசு | 1972 | 13.46 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | திருப்பூர் | 63 | கணபதிபாளையம் | சிட்கோ | 1993 | 17.10 |
| | | 64 | திருப்பூர் | சிட்கோ | 1978 | 10.14 |
| | | 65 | குடிமங்கலம் | சிட்கோ | 1992 | 6.74 |
| | | 66 | ராசாத்தவலசு | சிட்கோ | 2011 | 51.80 |
| 16 | நீலகிரி | 67 | ஊட்டி | சிட்கோ | 1981 | 10.65 |
| 17 | கடலூர் | 68 | கடலூர் | அரசு | 1971 | 15.60 |
| | | 69 | வடலூர் | அரசு | 1972 | 26.22 |
| | | 70 | பெரியநெசலூர் | சிட்கோ | 2015 | 90.80 |
| | | 71 | விருதாச்சலம் | அரசு | 1961 | 41.53 |
| 18 | விழுப்புரம் | 72 | பட்டணம் | சிட்கோ | 2014 | 60.57 |
| | | 73 | வெண்மணியாத்தூர் | சிட்கோ | 2011 | 36.82 |
| 19 | கள்ளக்குறிச்சி | 74 | காட்டுவன்னஞ்சூர் | சிட்கோ | 2014 | 42.00 |
| | | 75 | ஆசனூர் பகுதி I&II | சிட்கோ | 2009&2015 | 212.83 |
| 20 | பெரம்பலூர் | 76 | எலம்பலூர் | சிட்கோ | 2009 | 44.48 |
| 21 | அரியலூர் | 77 | மல்லூர் | சிட்கோ | 2014 | 25.34 |
| 22 | தஞ்சாவூர் | 78 | தஞ்சாவூர் | அரசு | 1968 | 21.94 |
| | | 79 | கும்பகோணம் | அரசு | 1968 | 32.30 |
| | | 80 | பிள்ளையார்பட்டி | சிட்கோ | 1974 | 10.96 |
| | | 81 | நாஞ்சிக்கோட்டை | சிட்கோ | 1996 | 26.30 |
| | | 82 | பாளையப்பட்டி | சிட்கோ | 2012 | 104.37 |
| 23 | நாகப்பட்டினம் | 83 | நாகப்பட்டினம் | அரசு | 1966 | 20.97 |
| 24 | மயிலாடுதுறை | 84 | மயிலாடுதுறை | சிட்கோ | 2009 | 12.56 |
| 25 | திருச்சி | 85 | துவாக்குடி | அரசு | 1974 | 478.38 |
| | | 86 | திருவெறும்பூர் | அரசு | 1974 | 74.50 |
| | | 87 | அரியமங்கலம் | அரசு | 1974 | 17.64 |
| | | 88 | கும்பக்குடி | சிட்கோ | 2009 | 24.46 |
| | | 89 | வாழவந்தான் கோட்டை (ம.தொ.பூ) | சிட்கோ | 2003 | 51.70 |
| | | 90 | வாழவந்தான் கோட்டை | சிட்கோ | 2008 | 179.02 |
| 26 | கரூர் | 91 | கரூர் (வெள்ளாளப்பட்டி) | அரசு | 1974 | 26.63 |
| | | 92 | கரூர் (ஆத்தூர்) | சிட்கோ | 1993 | 36.29 |
| | | 93 | புஞ்சைகாளக் குறிச்சி | சிட்கோ | 2016 | 52.076 |
| 27 | புதுக்கோட்டை | 94 | புதுக்கோட்டை | அரசு | 1974 | 23.18 |
| | | 95 | புதுக்கோட்டை (சிப்காட்) | சிட்கோ | 1988 | 51.45 |
| | | 96 | மாத்தூர் | சிட்கோ | 1975 | 26.00 |
| | | 97 | மாத்தூர்(புதியது) | சிட்கோ | 2013 | 19.92 |
| | | 98 | ஆலங்குடி | சிட்கோ | 2022 | 7.65 |
| 28 | தேனி | 99 | தேனி | அரசு | 1963 | 26.59 |
| | | 100 | ஆண்டிப்பட்டி | சிட்கோ | 1994 | 22.34 |
| | | 101 | மரிக்குண்டு | சிட்கோ | 2017 | 79.40 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29 | திண்டுக்கல் | 102 | திண்டுக்கல் | அரசு | 1965 | 39.91 |
| | | 103 | வத்தல குண்டு | அரசு | 1965 | 16.26 |
| 30 | மதுரை | 104 | கே.புதூர் | அரசு | 1960 | 56.05 |
| | | 105 | கப்பலூர் | அரசு | 1966 | 535.64 |
| | | 106 | கப்பலூர்(ம.தொ.பே) | சிட்கோ | 2008 | 35.37 |
| 31 | இராமநாத புரம் | 107 | பரமக்குடி | சிட்கோ | 1976 | 10.00 |
| | | 108 | கீழநாகாச்சி | சிட்கோ | 1993 | 10.00 |
| | | 109 | உரப்புளி | சிட்கோ | 1993 | 12.14 |
| | | 110 | சக்கரக்கோட்டை | சிட்கோ | 2017 | 100.00 |
| 32 | சிவகங்கை | 111 | காரைக்குடி | அரசு | 1966 | 180.19 |
| | | 112 | சிவகங்கை | அரசு | 1966 | 70.61 |
| | | 113 | கிருங்காக்கோட்டை | சிட்கோ | 1993 | 21.85 |
| 33 | விருதுநகர் | 114 | விருதுநகர் | அரசு | 1958 | 45.65 |
| | | 115 | ராசபாளையம் | சிட்கோ | 1995 | 41.13 |
| | | 116 | விருதுநகர் (நகர்புறம்) | சிட்கோ | 2013 | 37.54 |
| 34 | தென்காசி | 117 | கடையநல்லூர் | சிட்கோ | 1992 | 10.00 |
| | | 118 | குருக்கள்பட்டி | சிட்கோ | 2019 | 68.80 |
| 35 | திருநெல் வேலி | 119 | பேட்டை | அரசு | 1959 | 50.55 |
| | | 120 | வள்ளியூர் | சிட்கோ | 2005 | 39.91 |
| | | 121 | கங்கைகொண்டான் | சிட்கோ | 2020 | 89.92 |
| 36 | தூத்துக்குடி | 122 | கோவில்பட்டி | அரசு | 1962 | 85.54 |
| | | 123 | தூத்துக்குடி – பகுதி 1 | சிட்கோ | 1988 | 9.72 |
| | | 124 | தூத்துக்குடி – பகுதி 2 | சிட்கோ | 2003 | 14.46 |
| | | 125 | பிடாநேரி | சிட்கோ | 2016 | 108.23 |
| 37 | கன்னியாகுமரி | 126 | கோணம் | அரசு | 1964 | 20.70 |
| | | 127 | மார்த்தாண்டம் | அரசு | 1964 | 7.50 |
| | | | **மொத்தம்** | | | **8341.56** |

## இணைப்பு – 2
## ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம்புத்தூர் | 2.88 | 0.99 | 0.17 | 1.73 | 0.00 |
| 2 | ஜவ்வரிசி குழுமம், சேலம் | 0.92 | 0.73 | 0.00 | 0.19 | 0.00 |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிபுத்ததுர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், சாத்துர் | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 8 | தீப்பெட்டிக் குழுமம், கோவில்பட்டி | 1.56 | 0.86 | 0.11 | 0.25 | 0.35 |
| 9 | பீங்கான் குழுமம், விருதாச்சலம் | 0.83 | 0.43 | 0.10 | 0.18 | 0.11 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | கயிறு குழுமம், சிவகங்கை | 6.59 | 5.00 | 0.66 | 0.93 | 0.00 |
| 11 | அரிசி ஆலைக்குழுமம், கீழப்பாவூர் | 6.91 | 4.66 | 0.69 | 1.46 | 0.10 |
| 12 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஓசூர் | 6.91 | 4.39 | 0.71 | 1.05 | 0.75 |
| 13 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 11.73 | 9.64 | 1.00 | 1.08 | 0.00 |
| 14 | அரிசி ஆலைக்குழுமம், ஆலங்குளம் | 7.87 | 5.50 | 0.79 | 0.84 | 0.74 |
| 15 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ் குழுமம் சேலம் | 16.33 | 12.78 | 1.00 | 2.55 | 0.00 |
| 16 | அரிசி மில் குழுமம், தஞ்சாவூர் | 2.12 | 1.00 | 0.40 | 0.21 | 0.50 |
| 17 | பிளாஸ்டிக் குழுமம் காஞ்சிபுரம் | 14.85 | 10.27 | 1.00 | 2.58 | 1.00 |
| 18 | அச்சுக் குழுமம் சிவகாசி | 13.15 | 7.68 | 0.91 | 1.80 | 2.76 |
| 19 | தங்க நகைக் குழுமம், மதுரை | 3.56 | 2.56 | 0.29 | 0.40 | 0.31 |
| 20 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 4.99 | 3.74 | 0.23 | 0.54 | 0.48 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரக் குழுமம், கும்பகோணம் | 1.26 | 0.99 | 0.08 | 0.20 | 0.00 |
| 22 | ஆயுத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம் | 1.04 | 0.74 | 0.09 | 0.21 | 0.00 |
| 23 | கயிறு குழுமம், ஈரோடு | 5.93 | 4.04 | 0.48 | 0.60 | 0.79 |
| 24 | பொறியியல் குழுமம் அம்பத்தூர் | 11.24 | 8.05 | 0.54 | 1.15 | 1.50 |
| 25 | தங்க நகைக் குழுமம் திருச்சி | 3.60 | 2.88 | 0.36 | 0.36 | 0.00 |
| 26 | பொறியியல் குழுமம் இராணிப்பேட்டை | 9.27 | 6.16 | 0.97 | 1.09 | 1.04 |
| | **மொத்தம்** | **141.34** | **97.39** | **11.13** | **20.65** | **12.18** |

## இணைப்பு – 3

## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்தில் உள்ள பொது வசதி மைய திட்டங்கள்

(ரூபாய் கோடியில்)

| எ.வ | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | செங்கல் சூளை குழுமம், திருநெல்வேலி மாவட்டம் | 2.27 | 1.23 | 0.23 | 0.30 | 0.52 |
| 2 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம் மாவட்டம் | 13.34 | 8.86 | 0.99 | 1.62 | 1.87 |
| 3 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லைவாயில் திருவள்ளூர் மாவட்டம் | 3.45 | 1.98 | 0.90 | 0.57 | 0.00 |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப்பட்டி விருதுநகர் மாவட்டம் | 3.47 | 2.05 | 0.36 | 0.43 | 0.64 |
| 5 | பின்னலடைக் குழுமம், திருப்பூர் மாவட்டம் | 15.34 | 8.34 | 3.00 | 4.00 | 0.00 |
| 6 | அறைக்கலன்கள் குழுமம் சேலம் மாவட்டம் | 14.46 | 10.67 | 1.89 | 1.89 | 0.00 |
| 7 | கனரக வாகன கட்டுமானக் குழுமம் நாமக்கல் மாவட்டம் | 16.53 | 12.82 | 1.86 | 1.86 | 0.00 |
| 8 | ஆயத்த ஆடை குழுமம், திருப்பூர் மாவட்டம் | 16.25 | 8.57 | 3.00 | 4.68 | 0.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | அச்சு மற்றும் அட்டை பெட்டி குழுமம், ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம் | 13.95 | 11.04 | 1.39 | 1.52 | 00.00 |
| 10 | விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம், எலம்பலூர் பெரம்பலூர் மாவட்டம் | 12.19 | 9.31 | 1.22 | 1.26 | 0.40 |
| 11 | நூலாடை முறுக்குதல் மற்றும் குறுக்குதல் குழுமம், பெருந்துறை ஈரோடு மாவட்டம் | 18.68 | 9.63 | 1.87 | 7.18 | 0.00 |
| 12 | விசைத்தறி குழுமம், இராசிபுரம், நாமக்கல் மாவட்டம் | 20.09 | 11.99 | 2.51 | 5.59 | 0.00 |
| 13 | வடிவமைப்புக் குழுமம், திருப்பூர் மாவட்டம் | 14.67 | 9.79 | 1.47 | 3.41 | 0.00 |
| 14 | கம்பளி குழுமம் குன்னூர் நீலகிரி மாவட்டம் | 2.84 | 2.27 | 0.28 | 0.28 | 0.00 |
| 15 | விசைத்தறி குழுமம், பல்லடம் திருப்பூர் மாவட்டம் | 17.59 | 11.52 | 1.76 | 4.31 | 0.00 |
| 16 | அச்சுக் குழுமம், சேலம் மாவட்டம் | 13.47 | 10.76 | 1.35 | 1.35 | 0.00 |
| 17 | தங்க நகை குழுமம், திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் | 7.48 | 5.99 | 0.75 | 0.75 | 0.00 |
| | **மொத்தம்** | **206.07** | **136.82** | **24.83** | **41.00** | **3.43** |

## இணைப்பு – 4

## குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட பொது வசதி மைய திட்டங்கள்

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு | ஒன்றிய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு |
|---|---|---|---|---|---|
| 1 | ஆடை அச்சு குழுமம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம். | 14.67 | 11.85 | 1.00 | 1.82 |
| 2 | தங்க நகை குழுமம், சென்னை, சென்னை மாவட்டம். | 10.32 | 8.25 | 1.03 | 1.03 |
| 3 | தங்க நகை குழுமம், கோயம்புத்தூர், கோயம்புத்துர் மாவட்டம் | 15.30 | 11.81 | 1.53 | 1.96 |
| 4 | பசுமை ஏலக்காய் குழுமம், தேனி, தேனி மாவட்டம் | 14.26 | 11.28 | 1.43 | 1.55 |
| 5 | தோல் குழுமம், குரோம்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம் | 20.00 | 13.00 | 2.00 | 5.00 |
| 6 | அச்சு குழுமம், ஆற்காடு, ராணிபேட்டை மாவட்டம் | 14.11 | 11.03 | 1.41 | 1.67 |
| 7 | புகைப்பட குழுமம் ஊரப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம் | 8.62 | 6.90 | 0.86 | 0,86 |
| 8 | அட்டைப் பெட்டி அச்சு குழுமம் திருப்பத்தூர் திருப்பத்தூர் மாவட்டம் | 13.58 | 10.72 | 1.36 | 1.51 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | கயிறு குழுமம் திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம் | 22.02 | 17.61 | 2.20 | 2.20 |
| 10 | அச்சு குழுமம் விழுப்புரம், விழுப்புரம் மாவட்டம் | 15.45 | 12.36 | 1.54 | 1,54 |
| 11 | உணவு குழுமம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம். | 8.00 | 6.00 | 0.80 | 1.20 |
| 12 | கயிறு குழுமம் பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். | 23.73 | 14.00 | 2.00 | 7.73 |
| 13 | துல்லிய கருவி பொறியியல் குழுமம், ஓசூர் | 16.77 | 13.31 | 1.68 | 1.78 |
| | **மொத்தம்** | **196.83** | **148.12** | **18.84** | **29.87** |

## இணைப்பு – 5
## குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு
## திட்டத்தின் கீழ் முடிவடைந்த திட்டம்

**(ரூபாய் கோடியில்)**

| **வ.எண்.** | **குழுமத்தின் பெயர்** | **திட்ட மதிப்பு** | **தமிழ்நாடு அரசு மானியம்** |
|---|---|---|---|
| 1 | அட்டை பெட்டி குழுமம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம். | 3.90 | 2.50 |

## குறுந்தொழில் குழுமங்களுக்கான (CPI) பொது உற்பத்தி உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள திட்டங்கள்

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு | தமிழ்நாடு அரசு மானியம் |
|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் உருவாக்குதல், ஈரோடு தொழிற்பேட்டை, ஈரோடு மாவட்டம். | 6.52 | 2.33 |
| 2. | பொது வசதி மையம் உருவாக்குதல், காக்களூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், திருவள்ளூர் மாவட்டம் | 4.64 | 2.33 |
| 3. | திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி –I தொழிற்சாலை ஆலைக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2.60 | 1.80 |
| 4. | வெள்ளி கொலுசு குழுமம், சிவதாபுரம், சேலம் மாவட்டம் | 2.50 | 1.75 |
| 5. | நெகிழி மறுசுழற்சி குழுமம், அப்பநாயக்கன்பட்டிபுதூர், சூளூர் வட்டம் கோயம்புத்தூர் மாவட்டம் | 4.00 | 2.50 |
| 6. | கோவை மோல்ட்ஸ் & ப்ளாஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம் | 4.44 | 2.50 |
| 7. | கொங்கு பிரிசிஸன் காம்பெனன்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம். | 4.76 | 2.50 |
| 8. | தீப்பெட்டி குழுமம் குடியாத்தம். வேலூர் மாவட்டம். | 3.62 | 2.50 |
| 9. | தங்க நகை ஹால்மார்க் குழுமம், கோயம்புத்தூர் | 3.82 | 2.50 |
| | **மொத்தம்** | **36.90** | **20.71** |

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை
## வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
## கோரிக்கை எண். 44

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்புகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2021–2022 | திருத்திய மதிப்பீடு 2021–2022 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2022–2023 |
|---|---|---|---|
| 2425–கூட்டுறவு | 4 | 0 | 0 |
| 2851–கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 5953307 | 6797621 | 7685241 |
| 2852–தொழில்கள் | 161449 | 188114 | 1185521 |
| 3451–தலைமைச் செயலகம்–பொருளாதாரப் பணிகள் | 41497 | 48986 | 51571 |
| 4059–பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 6500 | 6970 | 0 |
| 4851–கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 6 | 18645 | 50002 |
| 6851–கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்கான கடன்கள் | 0 | 0 | 142685 |
| 7610–அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 1500 | 3000 | 1 |
| **மொத்தம்** | **6164263** | **7063336** | **9115021** |




## தமிழ்நாடு ஏற்றுமதி மாநாடு

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 22.09.2021 அன்று சென்னையில் நடைபெற்ற ஏற்றுமதி மாநாட்டில் 10 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ரூ.240 கோடி முதலீட்டில் ஏற்றுமதி சார்ந்த தொழில் தொடங்க தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டன**



மகளிர் தொழிற்பேட்டை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேலம், கருப்பூர் மகளிர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஒரு ஏற்றுமதி ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனத்தை 29.09.2021 அன்று பார்வையிட்டார்




## இண்ட்கோசர்வ்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் 20 டீ வண்டிகளை 15.12.2021 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்




## தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டம் (TANSEED)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.12.2021 அன்று 19 புத்தொழில் பயனாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.95 இலட்சம் தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது




## தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் (TNCGS)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 16.03.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒரு மின்னணு தளம் உருவாக்கிட தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசின் கடன் உத்தரவாதநிதியமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டன



நீட்ஸ் (NEEDS) திட்டத்தின் கீழ் பயன் பெற்ற ஒரு காபி கொட்டை
பதப்படுத்துதல் நிறுவனம், திண்டுக்கல் மாவட்டம்



முதலீட்டு மானியத் திட்டத்தின் கீழ் பயன் பெற்ற ஒரு தேயிலை
உற்பத்தி நிறுவனம், நீலகிரி மாவட்டம்



ஊதியப்பட்டியல் மானியத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற ஒரு பின்னலாடை
தயாரிப்பு நிறுவனம், வேலூர் மாவட்டம்



தரச்சான்றிதழுக்கான கட்டணங்களை திருப்பித்தரும் (Q-Cert) திட்டத்தின் கீழ் பயன்பெற்ற ஒரு தோல் ஆடைகள் உற்பத்தி நிறுவனம், சென்னை மாவட்டம்




ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற ஒரு காலணி தயாரிப்பு நிறுவனம், வேலூர் மாவட்டம்





காப்புரிமை பதிவு (பேடண்ட்) ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற்ற கழிவு
பிளாஸ்டிக்கினை மறுசுழற்சி செய்யும் நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம்



முத்திரை வரி மற்றும் பதிவு கட்டணங்களை திரும்ப வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற ஒரு காய்கறி பதப்படுத்தும் நிறுவனம், தர்மபுரி மாவட்டம்

## கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடி தொழில் வளாகம்



கிண்டி தொழிற்பேட்டையில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கு தேவையான வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டும் பணிகள்

| | | |
|---|---|---|
| திட்ட மதிப்பு | : | ரூ. 90.13 கோடி |
| தளங்களின் எண்ணிக்கை | : | 6 |
| கட்டிடபரப்பு | : | 1,97,024 ச.அடி. |
| தொழிற்கூட அலகுகளின் எண்ணிக்கை | : | 152 |




திருவண்ணாமலை மாவட்டம் பெரியகோளபாடியில் புதிய தொழிற்பேட்டை

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.